பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.




கலங்காணி,

மு. அப்துல்காதிர் சாஹிபு அவர்களியற்றிய

# தொழுகை விளக்க வசனமும் ஷரீஅத்தின் வழி சருகியோர்க்குபதேசப்பாடலும்.

கலங்காணி,

முஸ்லீம் ஜமாத்துகளின் பொருளுதவியைக்கொண்டு

இப்புஸ்தகத்தை அச்சிட்டு

மார்க்கத்தின் முன்னேற்றத்திற்காக வெளியிடப்பட்டு


திருச்செங்கோடு,

ஷண்முகா பிரிண்டிங் ஹவுசில்,

பதிப்பிக்கப்பெற்றது.

—

...ஜ்ரி 1353-௵ மொஹறம்-மீ 14-உ

(29—4—1934.)



...OF THE REGISTRAR OF BOOKS
1-JUN 1934
MADRAS

Q7:414
1434
N1645

24. முழுக்கு ... ... ... ... 51
25. இஸ்லாம் ... ... ... ... 53
26. தொழுகை ... .... .... .... 54
27. ஜகாத்து ... ... ... ... 59
28. நோம்பு ... ... ... ... 62
29. பெருநாள் ... ... ... ... 67
30. மௌத்து ... ... ... ... 68
31. நிகாஹ் ... ... ... ... 75
32. மொஹறம் ... ... ... ... 76
33. வட்டி ... ... ... ... 79
34. ஞானம் ... ... ... ... 83
35. தாலாட்டு ... ... ... ... 85
36. பாங்கின் கலிமாக்கள் .... ... ... 87
37. பாத்தியா ஓதும் முறை ... .... ... 88

786

"பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்"

அஊது பில்லாஹி மினஷ்ஷை தானிற்றஜீம்

எடுத்தெரியப்பட்ட ஷைத்தானைவிட்டும் அல்லாஹுசுபஹானஹுவத ஆலாவைக்கொண்டு நான் காவல்பாடு தேடுகிறேன்.

"பிஸ்மில்லா ஹிற்றஹுமானிற்றஹீம்"

துன்யாவில் யாவருக்கும் ஆகிரத்தில் மூமின்களுக்குமட்டும் கிருபை செய்யும்படியாகிய அல்லாஹு சுபுஹானஹுவத ஆலாவின் திருநாமத்தைக்கொண்டு நான் துவர்க்கம் செய்கிறேன்.

சர்வ வல்ல அல்லாஹு சுபுஹானஹுவதஆலாவுக்கே எல்லாப் புகழும் புகழ்ச்சியும், அவனின் கருணையும், ஈடேற்றமும் சர்வரே ஆலம் முஹம்மது சல்லல்லாகு அலைஹிவசல்லம் அவர்களுக்கும் அவர்களின் கிளையார்களுக்கும் மூமினான அடியார்களுக்கும் உண்டாவதாக.

இஸ்லாமுக்கும் குபுருக்கும் இடையில் வித்தியாசமாவது தொழுகை என்று ஹதீதில் வந்திருப்பதால் ஜனங்களில் மிகுதம் பேர்களுக்கு தொழுகையின் கிரு அத்து துவாக்களின் அர்த்தங்கள் தெரியாதிருப்பதை முன்னிட்டு அவர்களுக்கு தெரிவிப்பதற்காக இந்த சிறிய புஸ்தகத்தை முன்னோர்களின் கிதாபுகளில் நின்றும் தெரிந்தெடுத்து தொழுகை விளக்கம் வசனமாகவும் சரீஹத்தின்வழி சருகியோர்க்குபதேசம் பாடலாகவும் சேர்த்து ஹிஜ்ரி 1353ல் மிஸ்கீனாகிய மு. அப்துல்காதிர் அல்லாவுக்காக யாபேர்களும் மார்க்கத்தை அறிந்துணர்ந்து அமல் செய்ய இயற்றலானேன். இதைப் பார்ப்பவர்கள் அதபோடும் பய பக்தியாக பார்வையிட்டு கல்பில் தரிபடுத்தி பிறருக்குச் சொல்லும்படி கோருகிறேன் இதில் ஏதாவது பிசகிருந்தால் திருத்திப்பார்த்து படிக்கும்படி அல்லாஹுத ஆலா

கிருபை செய்வானுகவும். இன்ஷாஅல்லா மறகியைக்கொண்டு படைக்கப் பட்டிருப்பதால் யாவரும் கவனிப்பீர்களாக. ஆமீன் யாறப்பல் ஆலமீன் இதற்கு பொருளுதவி செய்த புண்யவான்களாகிய ராசிபுரம் டிவிஷன் புதுச்சத்திரம் போஸ்டு சலங்காளியில் முஸ்லீம் ஜமா அத்துக்களாகிய சகோதரர்கள் பொருளுதவி புரிந்து இந்தகித்தாபை அச்சிட்டு இனுமாகக் கொடுக்கும்படி ஷெ யார்களுடைய கோரிக்கை.

1-வது அவ்வல் கலிமா தய்யிபு லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற்றசூலுல்லாஹி.— இதன் பொருள்.

1-வது கலிமா மணமானது அல்லாகுத ஆலாவைத்தவிர வேரு யாரும் வணக்கத்துக்குத் தகுதியானவனில்லை முஹம்மது நபி சல்லல் லாகு அலைஹிவசல்லம் அவர்கள் அல்லாவின் திருத்தூதராயிருக்கும்.

இரண்டாம் கலிமா.

ஷஹாதத்து அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹு வரசூலுஹு"—இரண்டாம் கலிமா பொருள்.

சாக்ஷி சொல்லுவது பிசகர அறிந்து சொல்கிறேன். உண்மை யாக வணக்கத்துக்கு தகுமான நாயன் அல்லாஹுதஆலாவைத் தவிர ஒருவனுமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு நிகரானவன் ஒருவனுமில்லை. இன்னும் நான் சாக்ஷி சொல்கிறேன். உண்மையாக முகம்மது நபி சல்லல்லாஹு அலைகிவசல்லமவர்கள் அவனுடைய சொந்த அடியாருமாயும் திருத்தூதராகவுமிருக்கிறார்கள்

மூன்றுவது கலிமா தம்ஜீது.

சுபுஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாயிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் வலாஹௌல வலாகுவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யுல் அலீம்.

மூன்றும் கலிமாவின் பொருள்.

அல்லா துப்புரவானவன். எல்லா புகழும் அவனுக்காயிருக்கும் நாம் வணக்கத்துக்கு அல்லாவைத்தவிற வேரு யாரும் தகுதியான வனில்லை. அல்லா மகா பெரியவன் யாதொருபாவத்தை விட்டும் திரும்புதலுமில்லை யாதொரு வணக்கத்தின்பேரில் பெலனுமில்லை உயர்வும் வனுப்பமும் ஆகிய அல்லாவின் உதவி கொண்டொளிய.

நாலாம் கலிமா தௌஹீது.

லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு. லஹுல் முல்கு. வலஹுல்ஹம்து. யுஹ்யீ வயுமீத்து. பியதிஹில் கைரு. வஹுவ அலா குல்லிஷையின் கதீர். நாலாம் கலிமாவின் பொருள்.

ஒர்மைப்படுத்துவது. அல்லாவைத்தவிர வேரு யாரும் வணக்கத்துக்கு தகுதியானவனில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு நிகரானவன் ஒருவருமில்லை. அவனுக்குடையதாயிருக்கும் ராஜங்கம் அவனுக்காயிருக்கும் எல்லாப்புகழும் மௌத்தானவர்களை ஹயாத்தாக்குவான் ஹயாத்தானவர்களை மௌத்தாக்குவான் அவன் வசமாயிருக்கும் நலவடங்களும் அவன் எல்லா வஸ்துவின் பேரிலும் மிக வல்லமையும் தராணியும் பெற்றவன்.

ஐந்தாம் கலிமா றத்துல் குபுர்.

அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மின் அன் உஸ்ரிக பிக ஷைஅன் வஅன அஃலமு வஅஸ்தகுபிருக லிமாலா அஃலமு. இன்னக அன்த அல்லாமுல் குயூபு துப்து அன்கு வதபற்றவ்து அன்குல்லி தீனின் சிவாதீனில் இஸ்லாம், வ அஸ்லம்து வஅகூலு லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற் றசூலுல்லாஹி. இதன் பொருள். குபுரை விளக்குவது.

ஆண்டவனே! நான் அறிந்தவனாக உனக்கு இணைவைப்பதை விட்டு உறுதியாக உன்னிடத்தில் காவல் தேடுகிறேன். நான் அறியாமல்செய்த பாவத்திற்கு மன்னிப்பாயாக. உண்மையாக நீ இரகசியங்களை மிக அறிந்தவன் இணைகளைவிட்டும் தௌபாச்செய்து மீண்டேன். இஸ்லாமார்க்கத்தை தவிர மற்ற மார்க்கங்களை விட்டும் நீங்கிவிட்டேன். லாயிலாஹ இல்லல்லாஹு முகம்மதுற் றசூலுல்லாஹி என்று சொன்னவனாக இஸ்லாமாகிவிட்டேன்.

| பதம். | பொருள். |
|---|---|

அல்லாகு அக்பர் அல்லாகுத ஆலா ரொம்பவும் பெரியவன் சுபுஹான ரப்பியல் அலீம் வலுப்பமாகிய என்னுடைய நாயனை துய்தாக்கி வைக்கிறேன் சமி அல்லாகு லிமன்ஹமிதா அவனைப்புகழ்ந்தவர்களை அல்லாகுத ஆலா ஒப்புக்கொள்வானாகவும். அல்லாஹும்மா ரப்பனாலகல்ஹம்து நாயனே உனக்காயிருக்கும் எல்லா புகழும் சுபுகான ரப்பியல் அலீம் மேலாம் பரமான நாயனை துய்தாக்கி வைக்கிறேன்.

## ஷரஹுடைய ஹுக்முகள் 8

| | |
|---|---|
| 1-வது | பருலு |
| 2-வது | வாஜிபு |
| 3-வது | சுன்னத்து |
| 4-வது | முஸ்தஹப்பு |
| 5-வது | ஹலால் |
| 6-வது | முபாஹு |
| 7-வது | மக்ரூவஹு |
| 8-வது | ஹராம் |

## 130 பருலு நூற்று முப்பது பருலுக்கு விவரம்.

| | |
|---|---|
| ஈமானின் ருக்குனென்னும் உள் பருலுகள் | 2 |
| ஈமானின் ஷர்தென்னும் வெளிப்பருலுகள் | 7 |
| இஸ்லாத்தில் பருலுகள் | 5 |
| முழுக்கில் பருலுகள் | 3 |
| தயம்மத்தில் பருலுகள் | 3 |
| ஒலுவின் பருலுகள் | 4 |
| தொழுகையின் பருலுகள் | 32 |
| நோம்பின் பருலுகள் | 60 |
| மதுஹபில் பருலுகள் | 4 |
| தலமுறையில் பருலுகள் | 4 |
| அருப்பில் பருலுகள். | 4 |
| நிகாஹில் பருலுகள் | 2 |
| ஆக மொத்தம் பருலுகள் | 130 |

இதற்கு விபரம் ஈமானின் 1-வது ருக்னுவது

அல் ஈமானு அத்தஸ்தீகு பில்கல்பி ஈமானுகிறது அல்லாவையும் அல்லாவுடைய ரசூலேயும் கல்பால் உண்மையாக்கி வைக்கிறது.

2-வது ருக்னுவது வல்இக்ருரு பில்லிஸானி நாவால் விண்ணப்பம் செய்கிறது.

ஈமானின் ஷர்த்தென்னும் வெளிப்பருலுக்கு விபரம்.

1-வது அல் ஈமானு அன் தூமின பில்லாஹி ஈமானுகிறது அல்லாகுத ஆலாவைக்கொண்டு ஈமான் கொள்கிறது.

2-வது வமலாயி கதிஹி அவனுடைய மலக்குகளைக்கொண்டு ஈமான் கொள்கிறது.

3-வது வகுத்பிஹி அவனுடைய வேதங்களைக்கொண்டு ஈமான் கொள்கிறது.

4-வது வருஸ்லிகி அவனின் ரசூல்மார்க்களைக்கொண்டு ஈமான் கொள்கிறது.

5-வது வல்யௌமில் ஆகிரி ஒடுக்கத்து நாளைக்கொண்டு ஈமான் கொள்கிறது.

6-வது வல்கத்ரிகைறிஹி வஷற்றிஹி மினல்லாஹித ஆலா கர்ப்பினை நன்மை தின்மையடங்களும் அல்லாகுத ஆலாவின் புரத்தில் நின்றுள்ளதாயிருக்குமென்று ஈமான் கொள்கிறது.

7-வது வல்பகுதி பகுதல் மௌத்தி மௌத்துக்குப்பின் எழுப்பு கிறதை கொண்டு ஈமான் கொள்கிறது.

அல் இஸ்லாமு அல்இன்கியாது லிஅவர்மிரில்லாஹித ஆலா வல் இஜ்திஞபு அன் நவாஹீஹி இஸ்லாமாகிறது அல்லா சுபுஹான ஹூவத ஆலாவுடைய ஏவலுக்கு வழிப்பட்டு அவனின் விலக்கல்களை தவிழ்ந்து நடக்கிறது.

1-வது பருலு ஷஹாதத்து அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல் லாஹூ வஅன்ன முகம்மதற் றசூலல்லாஹி உண்மையாக வணக்கத் துக்கு பாத்திரவான் யாருமில்லை. அல்லாகுத ஆலாவைத்தவிற என்றும் உண்மையாக முஹம்மது சல்லல்லாஹூ அலைஹிவசல்லம் அவர்கள் அல்லாஹூத ஆலாவுடைய திருத்தூதராயிருக்குமென்றும் விண்ணப்பம் செய்கிறது.

2-வது வஇகாமுஸ்ஸலாத்தி தொழுகையை நிலபாடாய் கொண் டுவருகிறது.

3-வது வஈதா உஜ்ஜகாத்தி ஜக்காத்து கொடுக்கிறது.

4வது வஸௌமு ரம்லான் ரம்லான் மாசம் நோன்பு பிடிக் கிறது.

5-வது வஹஜ்ஜூல்பைத்தி மனிஸ்த தஃத இலைஹி ஸபீலா கஃபத்துல்லாவுக்குப்போய் ஹஜ்ஜூ செய்ய திரானி பெற்றீருனல் ஹஜ்ஜூ செய்கிறது.

## முழுக்கில் பருலு 3.

1. வாய் கொப்பளித்து கர்கரு செய்தல்.
2. நாசிக்குத் தண்ணீர் செலுத்தி கழுகுதல்.
3. மேனியடங்கலும் கழுவுகிறது.

## தயமத்தில் பருலு 3.

1. தொழுகைக்காக தயமம் செய்கிறேன் என்று நிய்யது செய் கிறது.
2. மண் மற்றத்தில் ஒரு அடிகொண்டு முகம் அடய வளைந்து தடவுகிறது.
3. மரு அடிகொண்டு இருகையையும் அடய வளைந்து தடவு கிறது.

## ஒலுவின் பருலு 4.

1. நீளத்தால் நெத்தி ரோமத்தின் அருகு முதல் நாடிக்குளி வரையிலும் அகலத்தால் ஒரு காது முதல் மரு காது வரை முகத்தை அடய வளைந்து கழுவுகிறது.

2. இரண்டு கைகளையும் முழங்கை மொழி உள்பட கழுவு கிறது.

3. தலையில் நாலிலொருபங்கு மஸ்ஹு செய்கிறது.

4. இரண்டு கால்களையும் கரண்டைமொழி உள்பட கழுவுகிறது.

## தொழுகையின் பருலுகள் 15 அதில் வெளிப்பருலு 8.

1. நேரம் அறிகிறது
2. உடம்பு துப்புரவாயிருக்கிறது
3 உடுமானம் துப்புரவாயிருக்கித்து
4. தொழுகிற தலம் துப்புரவாய் இருக்கிறது.
5. அவுரத்தை மறைக்கிறது
6. கிபுலாவை முன்னோக்கிறது
7. நிய்யத்துச்செய்கிறது
8. தக்பீர் அதாவது அல்லாஹு அக்பர் என்று சொல்கிறது.

## உள்பருலு 7.

1. நிலை நிற்கிறது
2. கிரு அத்து ஓதுவது
3. ருக்கூஉ செய்கிறது
4. சஜ்தாச் செய்கிறது
5. பிந்தின இருப்பு இருக்கிறது
6. அத்தஹிய்யாத்து ஓதுகிறது
7. தன் செயலினால் தொழுகை விட்டு நீங்கிறது

## தொழுகையின் பருலான ரகயத்துக்கள் 17க்கு விபரம்.

| | | |
|---|---|---|
| 1. பஜரில் பருலு | 2 | ரக அத்து |
| 2. லோஹரில் பருலு | 4 | ரக அத்து |
| 3. அசரில் பருலு | 4 | ரக அத்து |
| 4. மஃரில் பருலு | 3 | ரக அத்து |
| 5. இஷாவில் பருலு | 4 | ரக அத்து |

ஆக தொழுகையின் பருலுகள் முப்பத்திரண்டும் சரி

## நோன்பின் பருலு 60க்கு விபரம்.

| | |
|---|---|
| முப்பது நோன்பும் வைப்பது பருலு | 30 |
| ஒவ்வொரு நோன்புக்கும் நிய்யத்து வைப்பது பருலு | 30 |

ஆக பருலுகள் 60ம் சரி.

## மதுஹபில் பருலு 4,

1. ஹனபிமதுஹபு இமாம் ரஹ்மதுல்லாஹி
2. மாலிகி மதுஹபு இமாம் ரஹ்மதுல்லாஹி

3. ஷாபி மதுஹபு இமாம் ரஹ்மதுல்லாஹி
4. ஹன்பலி மதுஹபு இமாம் ரஹ்ம்துல்லாஹி

ஆக மதுஹபு நான்கும் சரி.

## தலைமுறையில் பருலு 4.

நபியுள்ளா மக்கத்தில் பிறந்து மதீனத்தில் அடங்கப்பட்டார்கள் தாயார்பெயர் ஆமினம்மாள்.

ரலியல்லாஹு அன்ஹா

1. தகப்பனார் பெயர் அப்துல்லா ரலியல்லாஹு
2. பாட்டனார் பெயர் அப்துல் முத்தலிபு ரலியல்லாஹு
3. பூட்டனார் பெயர் ஹாஷிம் ரலியல்லாஹு
4. முப்பாட்டனார் பெயர் அப்துல் முனாப் ரலியல்லாஹு

ஆக தலைமுறை நான்கும்சரி.

## அருப்பில் பருலு 4.

1. இஸ்லாமாயிருக்கிறது.
2. நாயனுடைய திருநாமமாகிய பிஸ்மில்லா சொல்கிறது.
3. கழுத்து முடிச்சுக்கும் குரவளைக்கும் நடுவிலே அருக்கிறது.
4. நான்கு நரம்புகளும் தெரிக்க அருக்கிறது

ஆக அருப்புடைய பருலு நான்கும்சரி.

## நிகாஹுடைய பருலுகள் 2.

1. ஈஜாபு. அதாவது இன்னமஹருக்காக இன்னாருக்கு உன்னை நிகாஹு முடித்துக்கொடுப்பது சம்மதமாவென்று பெண்ணை கேட்பது.

2. கபூல் அதாவது அந்த நிகாகை மாப்பிள்ளையானவர் ஒப்புக்கொண்டேன் என்று சொல்லுவது. ஆக பருலு 2ம் சரி.

இஸ்லாமானோர் அறியவேண்டிய 130 பருலும் சரி.

இஸ்லாமுடைய முந்தினருக்குகிய கலிமா ஷஹாதத்துக்கு விபரமாவது 1-வது இத்பாத்து தாதில்லாஹிதஆலா அல்லாஹுதஆலாவுக்கு தாத்துஉண்டங்குறது அதற்கு விபரமாவது அல்லாஹுத ஆலாவாகிறவன் மௌஜுதுன் உள்ளமையுடையவன் கதீமுன் பூர்வீகமானவன் பாக்கின் என்றென்றும் தரிபாடானவன் முகாலிபுன் லில்ஹவாதிதி புதுசாகிய படைப்புகளடங்கலுக்கும் ஒவ்வாவண்ணமானவன். காயிமுன் பி. நப்சிஹி தன்னைக்கொண்டு நிலைபாடானவன். வாஹிதுன் ஒருவனானவன்.

2-வது இத்பாத்து சிபாத்தில்லாஹிதஆலா யநுனீ அல்லாஹுத ஆலாவுடைய சிபாத்துகளை உண்டெங்குறது அதற்கு விபரமாகிறது அல்லாஹுஆலாவாகிறவன் ஹய்யுன்பி ஹயாதிஹி தன்ஹயாத்துக் கொண்டு ஹயாத்துடயவன் யஃனீ ரூஹுகொண்டல்ல. ஆலிமுன்பி இல்மிஹி தன் அறிவுகொண்டறிகிறவன் யஃனீ கல்பில் தரிபாடாகிய கைபியத்துக்கொண்டல்ல. மூரீதுன்பி இராதத்திஹி தன்நாட்டங்கொண்டு நாடுகிறவன். யநுனீ கல்புகொண்டல்ல காதிருன்பி குதுரதிஹி தன் குதுரத்துக்கொண்டு தராணியுள்ளவன். யநுனீ உருப்புக்களைக் கொண்டும் பிரரைக்கொண்டுமல்ல. ஸமீஹுன் பிஸம்இஹி தன் கேள்வி கொண்டு கேள்கிறவன் யநுனி காது கொண்டல்ல. பசீருன் பி பஸரிஹி தன் பார்வை கொண்டு பார்க்கிறவன் யநுனீ கண் கொண்டல்ல. முதகல்லிமுன் பிகலாமிஹி தன் பேச்சுக்கொண்டு திருவஸனமுடையவன் யநுனீ நாவுகொண்டல்லவென்று ஈமான் கொள்கிறது.

3-வது ருக்னுவது இத்பாது அப்ஆலில்லாஹிதஆலா யநுனீ அல்லாஹுத ஆலாவுடை செயல்களை உண்டெங்கிறது அதற்கு விபரமாகிறது. அல்லாஹுத ஆலாவாகிறவன் மூஜிதுன் இல்லாமயில் நின்றும் வஸ்துகளை உண்டெங்தரத்தளவில் வெளிப்படுத்துகிறவன். முஃதிமுன் உண்டாகிய வஸ்துகளை இல்லாமையாக்கிறவன். காலிக்குன்படைக்கிறவன் ராஜிகுன் இரணம் கொடுக்கிறவன். முஹ்யின் மௌத்தானபேர்களை ஹயாத்தாக்கிறவன் முமீத்துன் ஹயாத்தானவர்களை மௌத்தாக்கிறவன் ஹாதின் நேர்வழி காட்டுகிறவன். முலில்லுன் வழி கெடுக்கிறவன். முன்இமுன் சுகண்டியாக்கி வைக்கிறவன். மூன்தகிமுன் வேதனை செய்கிறவன். யத்தும் செயலோடும் கூடிய சிபாத்துகளைக்கொண்டு ஈமான் கொள்கிறது 4வது இது பாத்து சிதுகி ரசூலில்லாஹி சல்லல்லாஹு அலைஹிவசல்லம் யநுனி அல்லாஹுத ஆலாவுடைய ரசூலின் உண்மையை உண்டென்கிறது அதற்கு விபரமாவது கபுரு டைய அதாபு உண்டென்கிறது முன்கர் நகீருடைய கேள்வி உண்டென்கிறது. ஹஷர் நஷர் உண்டென்கிறது. நன்மை தீமை நிருக்கிற தராசு உண்டென்கிறது சிரரத்துல்முஸ்தக்கீம் பாலம் உண்டென்கிறது சொர்க்கம் நரகம் படைக்கப்பட்டிருக்கிறதென்பது இன்னம் அவர்கள் அறிவித்த விஷகளம் அடங்கலிலும் அவர்கள் உண்மை சொன்னர்களென ஈமான் கொள்கிறது.

## இஸ்லாத்தில் பருலு 5.

1. கலிமா சொல்கிறது
2. தொழுகிறது
3. ஜகாத்து கொடுக்கிறது
4. நோம்பு வைப்பது
5. ஹஜ்ஜு செய்வது.

## இஸ்லாத்தின் வாஜிபுகள் 7.

1. தாய் தகப்பனுக்கு பணிவிடை செய்கிறது
2. புருஷனுக்கு பெண்சாதி வழிப்படுகிறது
3. பந்து ஜனங்களுக்கு உபகாரம் செய்கிறது
4. நோன்பு பெருநாளில் பித்ராக் கொடுக்கிறது
5. ஹஜ்ஜு பெரு நாளில் கிடாயறுத்து உல்ஹிய்யாக் கொடுக்கிறது
6. மக்காவில் போய் உம்ராச் செய்கிறது
7. இஷாவுடைய பருலுக்குப்பின் வித்ரு தொழுகிறது.

## இஸ்லாத்தில் சுன்னத்து 7.

1. முஸ்லீமான மனிதர்களுக்கு சலாம் சொல்கிறது
2. சுத்னுச்செய்கிறது.
3. நசலாளியை போய் விஜாரிப்பது
4. கபுருஸ்தான்களைக்கண்டால் பாத்திஹா ஓதுவது
5. அல்லா இடத்தில் பிழை பொருக்க தேடுவது
6. முஹற்ற மாசம் 10-வது நாளில் நோன்பு வைத்து சதக்கா கொடுப்பது
7. உலமாக்களுக்கும் பெரியோர்களுக்கும் சங்கை செய்வது.

## ரோஜ்மீதாக்குடைய நாளைப்பற்றி பேசுவது.

ஓ முஸ்லிமான என் உடப்பிறந்தானே உன்னைப்பார்த்தொருவன் நீ எப்போது ஈமான் கொண்டாய் என்று கேட்டால் அதற்கு ஜவாபு நான் ரோஜ் மீதாக்குடைய நாளில் ஈமான் கொண்டேன் என்று சொல். அந்த ரோஜ் மீதாக்குடைய நாளாகிறதெந்த நாள் என்று கேட்டால் அதற்கு ஜவாபு அல்லாஹுத ஆலா தன்னுடைய குதுறத்தினல் அர்வாஹகளையெல்லாம் படைத்து ஹாலிராக்கி அவைகளைப்பார்த்து நான் அல்லவா உங்களையெல்லாம் படைத்தாள்கின்ற நாயனல்லவாவென்று கேட்டபோது அல்வருவாஹகளெல்லாம் நீதான் எங்களுடைய நாயனென்று சொல்லி கபூல் செய்த நாளையிலே ஈமான் கொண்டேனென்று சொல்.

அல்ஈமானு அத்கஸ்தீகு பி ஜமீஇ மாஜாஅ பிஹின்னபிய்யு சல்லல்லாஹு அலைஹிவசல்லம் இதன் பொருள் ஈமானுகிறது நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் கொண்டுவந்த தடங்களைக் கொண்டு உண்மை கொள்கிறதாயிருக்கும்.

## ஈமானில் நுக்குனேன்னும் உள் பருலுகள் 2.

1. லாயிலாஹ யில்லல்லாஹு முஹம்மதுற்றசூலுள்ளாஹி கள்பால் ஒப்புக் கொள்கிறது.
2. நாவால் மொழிகிறது. 2ம் சரி.

## ஈமானில் ஷர்த்தென்னும் வெளி பருலுகள் 7.

1. ஆண்டவனை ஒப்புக்கொள்கிறது.
2. மலக்குகளை ஒப்புக்கொள்கிறது
3. வேதங்களை ஒப்புக்கொள்கிறது.
4. நபிமார்களை ஒப்புக்கொள்கிறது.
5. கியாம நாளை ஒப்புக்கொள்கிறது.
6. கலாகதுரை ஒப்புக்கொள்கிறது.
7. மௌத்துக்குபின் எழுப்புகிறதை ஒப்புக்கொள்கிறது.
   = 7ம் சரி.

## ஈமானின் சருத்துகள் 6.

1. மறைவின்பேரில் ஈமான் கொள்வது.
2. மறைவான கருமங்களை அல்லாஹுதஆலா அரிவான் என்று ஈமான் கொள்வது.
3. ஹலாலை ஹலால் என்று அறிவது.
4. ஹராமை ஹராமென்றறிவது.
5. அதாபை பயப்படுவது.
6, ரஹ்மத்தை ஆதர வைப்பது

## ஈமான் விதியாகிறதற்கு சருத்துகள் 2

1. புத்தியுள்ளவனுயிருக்கிறது
2. வயசு பிராயம் எத்தியிருக்கிறது

## ஈமான் நான்குவகைப்படும்.

1-வது தொடர்பிடியான ஈமான். அது மலாயிக்கத்துகளுடைய ஈமான்.

2-வது காவலாக்கப்பட்ட ஈமான். அது நபிமார்களுடைய ஈமான்.

3-வது கபூல்செய்யப்பட்ட ஈமான். அது மூமினுன் பேர்களுடைய ஈமான்.

4-வது தட்டப்பட்ட ஈமான். அது முனபிக்கீன்களுடைய ஈமான்.

## மஸ்அலா.

ஈமானுடைய ஹுக்மு எழாயிருக்கும் ஐந்தாகிறது. துன்யாவைக் கொண்டு கொழுகியிருக்கிறது இரண்டாகிறது ஆகிரத்தைக் கொண்டு கொழுகியிருக்கிறது ஐந்தாகிறது இதுவாயிருக்கும் ஒரு மூமினை மனிதனை அநியாயமாய் கொள்கிறது, சிரையிலடைப்பது, பறிமுதல் செய்வது, கடுங்கோபமாய் பேசுவது, கெட்ட எண்ணம் வைக்கிறது

இவைசவெல்லாம் விலக்காயிருக்கும் இன்னம் இரண்டாகிறது இது வாயிருக்கும் திட்டமாய் அறியவேண்டியது என்னவென்றால் அவனுடைய எக்கால அதாபில் நின்றும் விடுதல் பெருகிறதுக்கும் இன்னம் சுவர்க்கத்திற்கு போகிறதற்கும் தயாராயிருக்கிறது. ஈமான் தருபடுகிறதற்கு 3 சர்த்துண்டும். ஈமானைப் பெற்றுக்கொள்கிறதில் நின்றும் சந்தோஷமாயிருக்கிறது. ஈமான் போய்விடுகிறதில் நின்றும் பயந்திருக்கிறது. 3 இன்னம் ஈமானைக்கெடுத்து போடுகிறவர்களைவிட்டும் விலகியிருக்கிறது. பாயிதா மௌத்து எல்லோருக்கும் இருக்கிறது. எந்த மௌத்தாகிறது ஈமானைக் கொண்டில்லையோ அதன்பேரில் ஆயிரம் கைசேதம், எந்த மௌத்து ஈமானுடன் இருக்கிறதோ அதன்பேரில் ஆயிரம் சுபசோபனம். சுபசோபனம் தேடுகிறவர்கள் இந்த துஆவை ஓதவேண்டும்.

*அல்லாஹும்ம யாவலிய்யில் இஸ்லாமி வஅஹ்லிஹி மஸ்விக்னபில் இஸ்லாமி வதப்பித்ன அலல் ஈமானி ஹத்தா நல்காக பிஹி வஅன்த அன்ன ராவின்கைர கல்பான யாஅல்லா யாஅல்லா யாஅல்லா.*

ஈமானுடைய தலையென்ன, கல்பென்ன சடலமென்ன, பேச்சென்ன, ஒளிவென்ன இருளென்ன, ருசியென்ன, வளமையென்ன, நெரிஎன்ன, வழியென்ன விதையென்ன, பழமென்ன, இலையென்ன, தோலென்ன, மூளையென்ன, கொப்பென்ன, வீடென்ன, வைப்பென்ன வென்று கேட்டால் அதற்கு ஜவாபு தலை துப்புரவான கலிமா லாஇல்லல்லாஹு முஹம்மதுற்றசூலுல்லாஹி என்று சொல்கிறது.

கல்பாகிறது குருஆன் ஓதுகிறது. சரீரமாகிறது ஐந்து ஒக்து தொழுகை தொழுகிறது பேச்சாகிறது திக்ரு செய்கிறது ஒளிவாகிறது மெய் சொல்கிறது இருளாகிறது பொய் சொல்கிறது ருசியாகிறது துப்புரவாயிருக்கிறது வழமையாகிறது ஜகாத்துக் கொடுக்கிறது நெரியாகிறது சுவர்க்கத்தைக் கொண்டாசை வைக்கிறது நரகத்தைக் கொண்டு பயப்படுகிறது வழியாகிறது ஹலாலை ஹலாலென்றும் ஹராமை ஹராமென்றும் அறிகிறது விதையாகிறது இல்மு படிக்கிறது தோலாகிறது. வெள்கம் ஹயா உண்டாகிறது. மூளையாகிறது துஆ கேள்கிறது. கொப்பாகிறது குல்ஷுவல்லாஹு ஓதுகிறது. வீடாகிறது மூமினானவர்களுடைய கல்பாயிருக்கும். வைப்பாகிறது நபில் தொழுகிறதாயிருக்கும்.

அல்லாஹுத ஆலா திருவளம் ஆகிறான். 1-வது என்னிடத்தில் மனமுறிவில்லை. 2-வது ராஜனாயிருந்தாலும் நான் சொல்ல அஞ்சமாட்டேன். 3வது ஒருவரைக்கொண்டு நான் பயப்படுகிறதில்லை. 4-வது ஒருவரைத்தாவென்று நான் கேள்பதுமில்லை. 5-வது என்னிடத்தில் யாராவதொருவன் கேட்டால் நான் இல்லையென்பதுமில்லை.

## 5 காரியம் 5 காரியத்தை தின்றுவிடும்.

1. பொய் சொல்வது இரணத்தை தின்றுவிடும்
2. ஜக்காத்து கொடுக்கிறது பலாயைத் தின்றுவிடும்.
3. வியாகூலம் ஹயாத்தைத் தின்றுவிடும்.
4. குபாடம் நன்மையைத் தின்றுவிடும்.
5. புறம்பேசுகிறது நல்ல அமலைத் தின்றுவிடும்.

## 4 காரியம் 4 காரியத்தை தின்றுவிடும்.

(1) புத்தி (2) அறிவு (3) தீனையுவந்திருப்பது (4) கலப்பரச் செய்கிற செய்கைகள்.

1-வது ஆசை புத்தியைத் தின்றுவிடும்.
2-வது கோபம் அறிவைத் தின்றுவிடும்.
3-வது தீங்குகள் அமலைத் தின்றுவிடும்.
4-வது நற்செய்கைகளை பேராசை தின்றுவிடும்.

## ஜலபாதை துப்புரவு செய்வதின் பயான்.

ஜலபாதை சுத்தி செய்வதில் அஷ்டயாய் இருக்கப்படாது ஏனென்றால் சரீரத்தையும் புடவையையும் ஜலபாதை விட்டும் சுத்தம் செய்யாமலிருக்கிறது. கபுருடைய அதாபு அதிகப்படுவதற்கு காரணமாயிருக்குமென்று சிறப்பான ஹதீதில் வந்திருக்கிறது. ஜலபாதை செய்ய நாடினவர்களுக்கு வேண்டியதாவது. முதலாவது கட்டி அல்லது ஈரத்தை உலர்த்தக்கூடிய துப்புரவான ஒரு வஸ்துவு வேண்டும். அது பிறருடைமை அல்லாததாகவும் தீன் பதார்த்தங்களை சேராததாகவும் எருவட்டி போலக்கொத்த நாஜீஸான வஸ்தல்லாததாகவும் சுட்ட செங்கல் போன்றதல்லாததாகவும் இருக்கவேண்டும். அதை பூமியில் மெல்ல மூன்றுவிடுத்தம் தட்டி இடதுகையில் வைத்துக் கொள்ளவேணும் சிறு நீர்செய்யும் பூமி வலுவாக இருக்குமாகில் மெதுவாக்கி தெரிக்காமலிருக்கும்படி உயரத்திலுட்கார்ந்துகொள்ள வேணும். கிபுலாவுக்கு நேரே முகத்தையும் முதுகையும் ஆக்கப்படாது. சூரியன் சந்திரனுக்செதிரிலும் காற்றின் எதிரிலும் இருக்கப்படாது. பொந்திலும் தண்ணீரிலும் பழம் காய்க்கும் மரத்தடியிலும் உட்காரும் நிழலிலும் வயலிலும் பள்ளிவாசல் முன் பின் அருகுகளிலும் ஈதுகாஹ் கபுருஸ்தான் முதலான இடங்களுக்கு முன் பின் அல்லது பக்கத்திலும் மிருகங்கள்மேலும் பாதையிலும் ஒலுச் செய்யும் தலத்திலும் சிறு நீர் செய்யப்படாது. ஒருச்சாய்ந்து படுத்கொண்டு அல்லது நின்றுகொண்டு அல்லது பள்ளத்திலிருந்து மேட்டின்பேரில் சிறு நீர் செய்யப்படாது. சிறுநீருக்கிருந்த பின் இடதுகையைக்கொண்டு கட்டியை உலர்த்தவேண்டும். மறைவாகவும் பழக்கம் பேசாமலும் இருக்கவேண்டியது சிலதூரம் எட்டி நடந்து

களைத்து தொடையோடு தொடை அமுக்கி ஆண்குறியையும் விரலினால் இருத்திவிடவேண்டும். ஆண்குறியின் வாயில் ஈரமில்லாமல் உலர்ந்துவிட்டுதானால் கட்டியை உடைத்து விடவேண்டும். இனி பெண்டுகள் கட்டிபிடிக்கும்படி ஹூக்மு இல்லையெங்கிலும் கொஞ்சம் விலகி இருந்து தண்ணீரைக்கொண்டு துப்புரவு செய்யவும். முதலாவது இரண்டு கையையும் மணிக்கட்டுவரை அப்பால் சிருநீரின் தலத்தை கழுவவும் அதுவும் மூன்று விடுத்தம் கழுகவும் குறையப்படாது. பின்பு இரண்டு கையையும் கழுகவேண்டியது. ஆண்பிள்ளையானாலும் பெண்பிள்ளையானாலும் அந்த நேரத்தில் இந்த துஆவை ஓதவும் அல்லாஹூம்ம ஹஸ்ஸின் பர்ஜி வயஸ்ஸிர் அம்ரீ என்று ஆண்டவனே என்னுடைய வெட்கஸ்தலத்தைக் காப்பாற்றி என் கருமத்தை லேசாக்கியருள்.

## மலபாதை சுத்தி செய்கிற பயான்.

2-வது மலபாதைக்குப்போக நாடினவன் முதலாவது ஒத்தைப்பட கல்லை எடுத்து பூமியில் மூன்றுவிடுத்தம் அடித்துக்கொள்ள வேண்டியது. ஏதுமாயிருந்தால் தொழுகைக்குள்ள புடவையை களைந்துவிடவும். இன்னம் இடதுகையின் சட்டைக்கையை முந்தியும் வலதுகையின் சட்டைக்கையை பிந்தியும் உயர்த்திக்கொள்ளவும். தலை முதுகும் திறந்திருக்கப்படாது. அல்லாஹூ சுபுஹானஹூ ஆலாவின் நாமம் அல்லது ரசூலுல்லாவுடைய நாமம் குருஆன் ஆயத்து முதலானது எழுதப்பட்டபோதிலும் அல்லது காயிதத்தை தூரப்படுத்திக்கொள்ளவும் இடது காலை முந்திவைத்து இந்த துஆவை ஓதிக்கொண்டு போகவும் அல்லாஹூம்ம இன்னீ அநூதுபிக மினல் குபுதி வல்கபாயிதி ஆண்டவனே கெடுதிகளை தீங்குகளை விட்டும் உன்னைக்கொண்டு காவல் தேடுகிறேன். உட்காரும்போது முகம், முதுகு கிபுலா பக்கம் இருக்கப்படாது. இடது கையை நாடிக்கும் கீழ் வைத்து இடதுகாலின்பேரில் பொருப்பாக இருக்கவேணும் முழுதும் நிர்வாணியாய் இருக்கப்படாது. தன்னுடைய வெட்க தலத்தை தேவையன்னியில் பார்க்கக்கூடாது. பழக்கம் பேசவும்படாது பாங்குக்கும் சலாமுக்கும் தும்மலுக்கும் ஜவாபு சொல்லப்படாது. தும்மினால் அல்ஹம்துலில்லா என்றும் சொல்லப்படாது. கல்பில் இதுகளை ஞாபகம் செய்து கொள்ளவும் பூமி அல்லது சுவரில் கீரப்படாது மிஸ்வாகு அல்லது தாடி கோதல் செய்யப்படாது. ஒன்றும் குடிக்கவும் தின்னவுங்கூடாது. துப்பவும் மூக்கு சிந்துரது ஆகாது. நஜிஸையும் மானத்தையும் பார்க்கப்படாது. அதிக நேரம் உட்காரப்படாது கட்டிகளைக் கொண்டு துப்புரவு செய்யவும். கோடைகாலத்தில் கட்டியை முதலாவது பின்னுக்கும் குளிர்காலத்தில் முன்னுக்கும் இழுத்து துப்புரவு செய்யவும். பெண்டுகள் 2 காலத்திலும் பின்னுக்கே இழுத்து துப்புரவு செய்யவேண்டியது. கடைசிக்கட்டியில்

ஈரத்தைக்காணக்கூடாத விதம் துப்புரவு செய்யவும். சிருநீரையும் உலர்த்தவேண்டியது. பின்பு 2 கையையும் மணிக்கட்டுவரை கழுவி கைநீர் கொள்ளவும். முதலாவது நடுவிரலும் 2-வது அடுத்தவிரலும் பின்பு சிருவிரலும் சேர்த்துக்கொள்ளவும். விரல்களின் நுனியைக் கொண்டு துப்புரவு செய்யப்படாது. பாத்திரத்தின் தண்ணீரும் விழுகிற தண்ணீரும் ஒன்றுபோல் தெரியும்படி கழுகவேண்டும். சரீரத்திலுள்ள தண்ணீரை ஒரு புடவையால் தொடைத்து போடவும். பின்பு இரண்டு கையையும் மூன்றுவிடுத்தம் மணிக்கட்டுவரை கழுகி விட்டு வெளியில் புறப்படும்போது இந்த துஆவை ஓதவும், அல்ஹம் துலில்லாஹில்லதீ அக்ரஜ அன்னீமாயூதீனிவ அபுகா அலய்ய மா யண்பஉனீ என்னை நோவிக்கிற வஸ்துவை என்னைவிட்டு தூரப்படுத்தி எனக்கு பிரயோசனம் செய்கிற வஸ்துவை என் பேரில் தரிபடுத்தி வைத்தானே அப்பேர்ப்பட்ட நயானுக்காயிருக்கும் புகழடங்களும் ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

### முழுக்காகிறது.

பறுலு முழுக்கென்றும், வாஜிபு முழுக்கென்றும், சுன்னத்து முழுக்கென்றும், முஸ்தஹப்பு முழுக்கென்றும் நான்கு வகைப்படும். அவைகளிலே பறுலு முழுக்கின் விபரம்.

### பறுலு முழக்காகிறது 5-வகையாம்.

1-வது ஆணும், பெண்ணும் வரையளவு குறிமறையச் சேர்க்கைசெய்தாலும், 2-வது பெண்ணைக்கண்டு ஆணுக்காகிலும் அல்லது ஆணைக்கண்டு பெண்ணுக்காகிலும் மோகமுண்டாகி மனி வெளிப்பட்டாலும், 3-வது நித்திறையில் ஷைத்தான் ஹறக்கத்தாகி அடையாளத்தைக் கண்டாலும், 4-வது பெண்ணானவள் மாதா மாதம் ஹைலென்னும் மாதவிடாயாகிப் பற்றற்றுப்போனாலும் 5-வது நிபாஸென்னும் பேறுகாலத் திடக்குநின்ற பின்னாலும் முழுகுவது விதியாயிருக்கும் ஆக இவ்வைந்தும் பறுலான முழுக்காகும்.

### வாஜிபு முழக்காகிறது 2-வகையாம்.

1-வது மையித்தை முழுக்காட்டுவதும், 2-வது பாலிகான காபிறுகள் முழுக்குடனே இஸ்லாத்தில் வந்தாலவர்களை முழுக்காட்டுவதும் ஆக இவ்விரண்டும் வாஜிபான முழுக்காம்.

### ஸுன்னத்து முழக்காகிறது 4-வகையாம்.

1-வது ஜும்ஆவுடைய நாட் பகலையில் முழுகிறதும், 2-வது வருஷத்தில் ஈதென்னு மிரண்டு பெருநாட்களில் முழுகிறதும் 3-வது மக்கத்தில் ஹஜ்ஜு செய்கிறதற்கு இஹ்றும் கட்டும்போது முழுகிறதும், 4-வது அறபாவில் முழுகிறதும் ஆக இந்நான்கும் ஸுன்னத்தான முழுக்காம்

## முழுக்கில் தறுத்தீப்புகள்.

முழுக்கில் தறுத்தீப்புகளாகிறது முதலிலே இஸ்த்தின் ஜாத்தலத்தைச் சுத்தி செய்கிறதும் பின்னர் கைகளை யிரண்டு மணிக்கட்டளவுங் கழுவுகிறதும், பின்பு பற்களையும், நாக்கையுந்தீட்டி வாயைக் கொப்பளித்துச் கையை நன்றாக சுத்திசெய்கிறதும் பிறகு மூக்கைக் குடைந்து கழுவி உலூச்செய்துக் கொள்கிறதும் அப்பாலுச்சந்தலை தொடுத்துள்ளங்கால் வரைக்கும் நனையும்படி தண்ணீர் வார்த்துக் கலிமா ஷஹாதத்தோதி நன்றாயுடலெல்லாம் நனைய மூன்றுதரந் தண்ணீர் வார்த்துக் கலிமா ஷஹாதத்தோதி நன்றாயுடலெல்லாம் நனைய மூன்றுதரந் தண்ணீர் வார்த்துக் கழுவுகிறதுமாம்.

## முழுக்கில் பறுலுகள் 3 வகையாம்.

1-வது வாயைக் கொப்பளித்து சுத்தி செய்கிறதும் 2-வது நாசிக்குத் தண்ணீர் செலுத்திச் சுத்தி செய்கிறதும், 3-வது சரீரமடங்கலும் நனையும்படியாகத் தண்ணீர் வார்த்துக்கொள்கிறதுமாக முழுக்கின் பறுலுகள் மூன்றும்.

## முழுக்கில்ஸுன்னத்துகள் 5-வகையாம்.

1-வது இஸ்த்தின்ஞ ஜாத்தலத்தைக் கழுவுகிறதும், 2-வது இரண்டு மணிக்கட்டளவுங் கைகளை கழுவுகிறதும், 3-வது உலூச்செய்கிறதும், 4-வது உடையில் எவ்விடத்திலேனும் நஜீசு பட்டிருந்தால் கழுவுகிறதும் 5-வது மூன்றுதரந் தண்ணீர் வார்த்துக் கழுவுகிறதும் ஆக முழுக்கில் ஸுன்னத்தைந்தாம்.

## முழுக்கில் முஸ்தஹப்புகள் 5.

1. பேசாமல் குளிப்பது.
2. மறைவாய்க் குளிப்பது.
3. தண்ணீர் ஜாஸ்தி சிலவு செய்யாதிருப்பது.
4. சரீரத்தைத் தேய்ப்பது.
5. குளித்தவுடன் ஈரத்தைத்துடைப்பது.

## முழுக்காலிகள் செய்யலாகாத கர்மங்கள்.

1. குருஆனைத் தொடுகிறதும்.
2. குருஆனை ஓதுகிறதும்.
3. பள்ளியில் நுழைகிறதும்.
4. தொழுகுகிறதும்.
5. கஃபாவை தவாபு செய்கிறதும்.

தயம்மத்திலே பறுலுகள் மூன்றாயிருக்கும்.

1-வது நிய்யத்து செய்கிறதும், 2 வது இரண்டு கைகளையும் விரித்துத்துப்புரவான மண்ணின்பேரிலே அடித்து முகமடங்கலிலுந் தடவிக்கொள்குறதும், 3-வது கையின் விரல்களைப் பூமியின்பேரில் அடித்து முழங்கை வரைக்குந் துடைத்துக்கொள்கிறதும் ஆகத் தயமத்தின் பருனுகள் மூன்றும்.

தயம்மத்திலே ஸுன்னத்துகள் ஏழாயிருக்கும்.

1-வது இரண்டு கைகளையும் பூமியிலடித்து முன்னே தள்ளுகிறதும், 2-வது அப்படிப் பூமியிலே முன் தள்ளிய இரண்டு கைகளையும் பின்னேயிளுக்கிறதும், 3-வது இரண்டு கைகளின் விரல்களைப் பூமியின் பேரிலே அடிக்கும்போது விரித்துக் கொள்ளுகிறதும், 4-வது கைகளின் விரல்கள்விரிய மேலெடுத்தும் பின்கை இரண்டும் சேரத்தட்டியுதறுகிறதும், 5-வது பிஸ்மிலேயோதிககொஸ்கிறதும், 6-வது தறுத்தீபுடனே செய்கிறதும் 7-வது தொடர் பிடியாய்ச்செய்கிறதும் ஆகத் தயம்மத்தில் ஸுன்னத்து ஏழாம்.

தயம்மத்தின் முறிவுகள் இரண்டு.

1-வது ஒலு முறிக்கிற வஸ்துகள் தயமத்தை முறிக்கும்.
2-வது தண்ணீரை பலிமாற தரானி பெருகிறதும்.

உலூவிலே தறுத்தீபுகள்.

முதலில் இஸ்த்தின்ஜாத் தலத்தைச் சுத்திசெய்துபின்னர் நிய்யத்துடனே (பிஸ்மிலைச்) சொல்லி விரல்களைக்கோர்த்துத் தண்ணீரைக் கோதியிருகைகளையும் மணிக்கட்டளவு மூன்றுதரங் கழுவிப் பின்பு பல்லைத்தீட்டி, நாக்கைத்தேய்த்து, வாயை மூன்றுதரங் கொப்பளித்துப்பினனர் மூக்குக்கு மூன்றுதரந் தண்ணீர் செலுத்திக் குடைந்து சிந்திக் கழுவியபின்பு தலைக்கெல்லாம் மஸஹு நனைத்து துடைத்துப் பின்னர் காதைஉள்ளும் மேலும் துடைத்துப் பின்னர் கழுத்தைத் துடைத்துப் பின்பு இரண்டு கால்களையுங் கணுக்கால்மட்டும் மூன்று தரங்கழுவிக்கொள்ள வேண்டும்.

இவ்வித முறுப்பினங்களைக் கழுவும்போது அஷ்ஹது தென்னும் கலிமா ஷஹாதத்து மோதிக்கொண்டே வலதுபுறத்தை முற்படுத்திக் கழுவிக்கொள்ளவேண்டும்.

உலூவிலே பறுலுகள் 4-வகையாம்.

1-வது முகத்தைக் கழுவுகிறதும், 2-வது இரண்டு கைகளையும் முழங்கை மட்டும் நனையக் கழுவுகிறதும், 3-வது தலையில் நான்கிலொருபங்கு நனைய மஸ்ஹு செய்கிறதும், 4-வது இரண்டு கால்களையுங் கணுக்கால்மட்டுங் கழுவுகிறதும், ஆக உலூவில் நான்கு பறுலாம்.

## உலூவிலே ஸுன்னத்து 13-வகையாம்.

1-வது நிய்யத்துச்செய்கிறதும், 2-வது (பிஸ்மில்லாயில் அலீம் வல்ஹம்துலில்லாஹி அலாதீனில் இஸ்லாம் அல்இஸ்லாமு ஹக்குன் வல்குபுறு பாத்திலுன்) என்று சொல்லித் தொடங்கிறதும், அல்லது பிஸ்மிலை மாத்திரமோதித் தொடங்கிறதும், 3-வது இரண்டு கைகளையு மணிக்கட்டளவுங் கழுவுகிறதும், 4-வது மிஸ்வாக்கு செய்கிறதும் 5-வது நாக்கை தேய்த்து வாயைச் சுத்தி செய்கிறதும், 6-வது மூக்கைச் சுத்திசெய்கிறதும் 7-வதுதலையடங்கலையும் மஸஹு செய்கிறதும் 8-வது காதை மஸஹு செய்கிறதும் 9-வது தாடியைக் கோதி கழுவுகிறதும, 10-வது கைவிரல்கள், கால்விரல்களிவைகளைக் கோதிக் கழுவுகிறதும், 11-வது ஒவ்வொரு உறுப்புகளையும் மும்மூன்று தரங் கழுவுகிறதும், 12-வது தறுத்தீபாகச் செய்கிறதும், 13-வது தொடர்பிடியாகச்செய்கிறதும் ஆக ஒலுவில் ஸுன்னத்துப் பதிமூன்றும்.

## உலூவில் முஸ்தஹப்பு 5-வகையாம்.

1-வது வலது பக்கத்தை முற்படுத்துகிறதும், 2-வது கழுத்தைப் பிடரிமட்டும் மஸஹு செய்கிறதும் 3-வது கிபுலாவை முன்னோக்கிக் கொள்கிறதும், 4-வது பருலான வுறுப்புகலடங்களிலும் கலிமா ஷஹாததோதுகிறதும், 5-வது பேசாதிருக்கிறதும் ஆக உலூவில் ஐந்து முஸ்தஹப்பாம்.

ஆனல் வாயை மூக்கைச் சுத்தி செய்கிறது அதனல் முழுக்கிலும் உலூவிலே ஸுன்னத்துமா யிருக்கிறது அதனல் முழுக்கிலுள்ள மூன்று பறுலுகளி லொன்றையேனும், அல்லது கிஞ்சித்தேனும் விட்டுவிட்டால் முழுக்குச் சுத்தியாகமாட்டாது இதுபோலவே உலூவிலுள்ள பறுலுகள் நான்கிலொன்றையேனும் அல்லது கிஞ்சித்தேனும் விட்டுவிட்டால் உலூக்கூடாது. இதல்லாமல் இன்னுஞ் சில கருமங்களினலும் உலூகூடாமலும், முறிந்துபோவதுமுண்டு அவைகளையும்அறிந்து உலூச்செய்யவேண்டும்.

## ஒலூவின் மக்றுஹுகள் 3.

1-வது தண்ணீரை முகத்தில் அடிப்பது.
2-வது தண்ணீரை அதிகக்கட்டப்பு செய்வது.
3-வது சுன்னத்துகளுக்கு விரோதம் செய்வதுமாயிருக்கும்.

## ஒலுவின் முரிச்சல்கள் 9.

1-வது முன் துவாரம் பின்துவாரங்களிலிருந்து மலம் ஜலம் காற்று இதுபோலொற்றது புரப்படுகிறது.

2-வது சரீரத்திலிருந்து இரத்தம், சீழ், சலம் புறப்பட்டு வழிந்து ஓடுகிறது. 3-வது வாய் நிரம்ப சத்தியெடுக்கிறது. 4-வது படுத்து அல்லது ஒரு வஸ்துவில் பெலமாய்ச்சாய்ந்து நித்திரை செய்கிறது. 5-வது பைத்தியம் பிடிக்கிறது. 6-வது போதைக்கேடாகிறது 7-வது ஒரு வஸ்துவைத் தின்றுலகரியாகிறது. 8-வது பாலிகானவர்கள் ஸுஜூதுருகூஉ உள்ள தொழுகையில் வெடி சிரிப்புச்சிரிக்கிறது.

## ஒலுவில் வாஜிபுகள் 2

1-வது கண் பூழைகளை எடுத்துக்கழுவுவது. 2-வது விரலில் இருகலான மோதிரத்தை திருப்பி கழுகுவது.

## ஒலுவில்லாதவர்கள் 3 காரியம் செய்யலாகாது.

1-வது குருஆனைத் தொடுகிறதும் 2-வது தொழுகிறதும் 3-வது கஃபாவை தவாபு செய்கிறதும் கூடாது.

## தொழுகையின் ரக அத்துக்கள் கணக்கு.

பஜருக்கு நாலு ரக அத்து
சுன்னத்து 2 ரக அத்து
பருலு 2 ரக அத்து
ளுகருக்கு 12 ரக அத்து
சுன்னத்து 4 ரக அத்து
பருலு 4 ரக அத்து
அடுத்த சுன்னத்து 2 ரக அத்து
நபில் 2 ரக அத்து
அசருக்கு 8 ரக அத்து
சுன்னத்து 4 ரக அத்து
பருலு 4 ரக அத்து
மகரிபில் 7 ரக அத்து
பருலு 3 ரக அத்து
சுன்னத்து 2 ரக அத்து
நபில் 2 ரக அத்து
இஷாவில் 17 ரக அத்து
சுன்னத்து 4 ரக அத்து
பருலு 4 ரக அத்து
அடுத்த சுன்னத்து 2 ரக அத்து
நபில் 4 ரக அத்து
வித்று வாஜிபு 3 ரக அத்து

தொழுகையின் பருலுகள் 15 அதில் வெளிப்பருலு 8.

1. நேரமாகிறது
2. உடம்பு துப்புரவாயிருக்கிறது

3. உடுமானம் துப்புரவாயிருக்கிறது
4. தொழுகிற தலம் துப்புரவாய் இருக்கிறது
5. அவுரத்தை மறைக்கிறது
6. கிபுலாவை முன்னோக்கிறது
7. நிய்யத்துச்செய்கிறது
8. தக்பீர் அதாவது அல்லாஹு அக்பர் என்று சொல்கிறது.

உள் பருலு 7.

1. நிலை நிற்கிறது
2. கிரு அத்து ஓதுவது
3. ருக்கூஉ செய்கிறது.
4. சஜ்தாச் செய்கிறது
5. பிந்தின இருப்பு இருக்கிறது
6. அத்தஹிய்யாத்து ஓதுகிறது
7. தன் செறலினால் தொழுகை விட்டு நீங்கிறது.

## தொழுகையின் வாஜிபுகள் 21.

1-வது அல்லாவுடன் அக்பரைச் சேர்த்து அல்லாஹு அக்பர் என்று சொல்கிறது.

2-வது சூரா பாத்திஹா அடங்கலும் ஓதுகிறது.

3-வது பாத்திஹாவை ஒவ்வொரு ரகஅத்திலும் ஒருவிடுத்தத்தின் பேரில் சுருக்கிக்கொள்கிறது.

4-வது அத்துடன் வேறொரு சூரா அல்லது மூன்று ஆயத்து அல்லது நீளமான ஒரு ஆயத்தைச் சேர்க்கிறது.

5-வது பாத்திஹாவை முற்ப்படுத்துகிறது கிராஅத்தைக்கான.

6-வது இந்த பாத்திஹாவை முந்தின இரண்டு ரகஅத்திலும் குறிப்பாக்கி வைக்கிறது.

7-வது இறைந்தோதுகிற தொழுகையில் இறைந்தோதுகிறது

8-வது அமர்ந்தோதுகிற தொழுகையில் அமர்ந்தோதுகிறது.

9-வது நிலை ருகூஉ ஸஜ்தாவில் ஒரு தஸ்பீஹுடைய கதர் தரி படுகிறது.

10-வது முந்தின இருப்பு இருக்கிறது.

11-வது அத்தஹிய்யாத் ஓதுகிறது.

12-வது ஒவ்வொரு பருலுகளையும் தர்த்தீபாய் கொண்டுவருகிறது

13-வது ஒவ்வொரு வாஜிபுகளையும் அததின் தலத்தில் கொண்டு வருகிறது.

14-வது இமாம் கிரா அத்தோதும்போது முக்ததீ வாய்மூடி நிற்கிறது.

15-வது இமாமை எந்த ஹாலில் கண்டாலும் அவரை துயறு கிறது.

16-வது குருஆனில் 14 தானத்திலுள்ள சஜ்தா ஆயத்துகளில் ஒன்றை ஓதினவனும் கேட்டவனும் சஜ்தாச்செய்கிறது.

17-வது இரண்டு பெருநாள் தொழுகையில் அதிகமான 6 தக்பீர் சொல்கிறது.

18-வது அவ்விரண்டு பெருநாளில் பிந்தின ரக அத்தின் ருகூஉ க்குமுன் 3 தக்பீர் சொல்கிறது

19-வது வித்தரின் குனூத்து ஓதுகிறது.

20-வது இந்த வாஜிபுகளிலொன்றை மறதியாய் விடுகிறது கொண்டு சஜ்தா ஸஹூவு செய்கிறது.

21-வது அஸ்ஸலாமு என்கிற சொல்லைக்கொண்டு புரத்தி படுகிறது.

## தொழுகையின் சுன்னத்துகள் 29.

1. இருகையையும் கிபுலாவுக்கு நேராக முந்தின தக்பீர் சொல்லும்போது உயர்த்துறது.

2. வித்ருடைய குனூத்தில் தக்பீர் சொல்லும்போது உயர்த்துகின்றது.

3. இரண்டுபெருநாள் தக்பீரில் கையை உயர்த்துகிறது.

4. விரல்களை சமானமாய் பரத்துகிறது.

5. தக்பீரை தேள்வைக்குத் தகுந்தபடி இமாம் இறைந்து சொல்கிறது.

6. இமாமுக்கு முந்தாமல் முக்ததீ உடந்தையாய் சொல்கிறது.

7. இமாமுடைய கிரா அத்தை தவிர மற்ற திக்ருகளில் முக்ததீ அவரைத் துயருகிறது.

8. தக்பீர் சொன்னபின் சின்ன விரலைக் கொண்டும் பெரு விரலைக்கொண்டும் மணிக்கட்டை பிடித்து மற்ற மூன்று விரலைவிரித்து ஆண்பிள்ளை தொப்பிழின் கீழிலும் பெண்பிள்ளை நெஞ்சின்பேரிலும் ஒரு சொல்படி மார்பின் கீழிலும் வலது கையை இடதுகையின் மீது வைக்கிறது.

9. சுபுஹானக்கல்லாஹும்ம வபிஹம்திக வதபார கஸ்முக வத ஆலா ஜத்துக்க வலா இலாஹ கைருக என்று ஓதுகிறது,

10. அஊதுபில்லாஹி அமர்ந்தோதுகிறது.

11. பிஸ்மில்லாவை அமர்ந்தோதுகிறது.

12. ஆமீன் மெள்ளச்சொல்கிறது.

13. குனூத்துடைய தகபீரும் 14-வது ருகூவுடையதக்பீரும் 15-வது சுபுஹானரப்பியல் அலீம் என்று மூன்றுவிடுத்தம் சொல்கிறது. 16 இன்னம் அதில் 2 கையைக்கொண்டு இரண்டு முட்டுக் காலையும் பிடிக்கிறது.

17. விரல்களை விரிக்கிறது

18. சிறு நிலை சிறு இருப்பு இருக்கிறது

19. ஸமி அல்லாஹு லிமன் ஹமிதா என்று சொல்கிறது

20. அல்லாஹும்ம ரபபனு வலகல்ஹம்து என்று சொல்கிறது

21 சுஜூதுடைய தக்பீரும் 22வது அதை விட்டுயரும்போது தக்பீரும்

23. இரண்டு சுஜூதிலும் சுபுஹானரப்பியல் அஃலாவென்று மூன்று விடுத்தம் தஸ்பீஹுச் சொல்கிறது

24 தலை, இருகை, இரண்டு முட்டு, இரண்டு பாதம் ஆக ஏழு உருப்பின்பேரில் சஜ்தாச் செய்கிறது

25. 2 சஜ்தாவுக்கிடையில் சிறு இருப்பு இருக்கிறது

26. பிந்தினயிருப்பில் ஸலவாத்து ஓதுகிறது

27. தனக்கும் மற்றவர்களுக்கும் பிழை பொருக்கத்தேடுகிறது

28. இரண்டிருப்பிலும் ஆண்பிள்ளை வலதுகாலை நட்டி இடது காலின்பேரில் உட்காருகிறது ஆனால் பெண்பிள்ளைகள் பித்தட்டின் பேரில் இருக்கவும்

29. சலாம் சொல்லும்போது வலதுபக்கம் இடது பக்கமிருக்கிறவர்களை நினைத்து சலாம் சொல்கிறது

## தனா.

சுபுஹான கல்லாஹும்ம வபிஹம்திக வதபார கஸ்முக வத ஆலா ஜெத்துக வலா இலாஹ கைருக

## அர்த்தம்.

ஓ! அல்லாஹ் மகிமை எல்லாம் உனக்கே புகழடங்களும், உன் நாமம் துதிக்க அருகானது உன மகுத்தவம் சிறந்தது உன்னைத் தவிர எதுவும் வணக்கத்தக்கதல்ல சபிக்கப்பட்ட ஷைத்தானைவிட்டும் உன்னிடம் நான் காவல் தேடுகிறேன்.

## தொழுகையிலே முஸ்தஹப்பு 27.

அவைகளாகிறது, 1-வது முந்தின தக்பீறு சொல்லும்போது கைகளினாற் காதுகளின் சிறு சோணைகளைத் தொட்டுக்கொண்டு வருகிறதும் 2-வது தக்பீறு சொல்லும்போது ஆண்பிள்ளைகள் இரண்டு இளங்கைகளையும் சட்டைக் கைகளில் நின்றும் புறத்திப் படுத்திகிறதும், 3-வது நிலையில் நிற்கும்போது ஸஜ்தாச் செய்யுமிடத்தைப் பார்க்கிறதும் 4-வது தொழுகையில் நிலை நிற்கும்போது இரண்டு கால்களுக்கு மிடையில் நாலுவிரல் பிரமானம் இடமிருக்கும்படி கால்களை யகட்டி வைத்துக் கொள்ளுகிறதும், 5-வது முக்கிமான பேர்கள் ஸுபுஹிலும், லுஹரிலும், சூறத்துக் காபிரிலிருந்து சூறத்துத்து புறூஜுவரைக்குமுள்ள சூறத்துகளில் நின்றும் ஓதுகிறதும், இனி, அஸ்றிலும், இஷாவிலும், சூறத்து புறூஜிலிருந்து சூறத்துலம் யகுனனில்லதீன வரைக்குமுள்ள சூறத்தில் நின்றுமோதுகிறதும், இனி மஃரிபில் சூறத்துலம் யகுனில் லதீனவுக்கும் கீழாலுள்ள சூறத்தில் நின்று மோதுகிறதும், 6-வது றுக்கூவிலே தலையையும் முதுகையும் நேர் சரியாக வைக்கிறதும், 7-வது றுக்கூவில் ஸுபுஆன றப்பியல் அலீமென்றும், ஸுஜூதில் ஸுபுஹான றப்பியல் அகுலாவென்று மூன்றுதரத்திற் சுதிமாகச் சொல்லுகிறதும் 8-வது றுக்கூவு செய்யும்போது காற்பரண்டையைப் பார்க்கிறதும், 9-வது ஸஜ்தாச் செய்யும்போதிலே வயிற்றைத் துடையை விட்டும், துடையைப் பின்காலை விட்டும் பின்காலைப் பூமியை விட்டும் தூரப்படுத்துகிறதும், 10-வது ஸஜ்தாச் செய்யும்போது மூக்கைப்பார்க்கிறதும்.

11-வது இரண்டிருப்புகளிலும் இரண்டு கைகளையும், இரண்டு துடைகளின்பேரில் வைக்கிறதும், 12-வது அவ்விருப்புகளில் மடியை பார்க்கிறதும், 13-வது கொட்டாவி வரும்போதிலே வாயை மூடிக் கொள்கிறதும், 14-வது இருமலைப்பேணிக் கொள்கிறதும், 15-வது குருஆனில் ஒரு ஆயத்திற் சுதிகமாகவோதுகிறதும், 16-வது ஸஜ்தாவுக்குப் போகுமுதலிலே யிரண்டு முழங்கால்களையும் பூமியில் வைக்கிறதும் அப்பாலிரண்டு கைகளையும் வைக்கிறதும் பின்னர் மூக்கை வைக்கிறதும் பிறகு நெற்றியை வைக்கிறதும், 17-வது ஸஜ்தாவை விட்டு மீளும்போது முதலில் நெற்றியை யெடுக்கிறதும், அப்பால் மூக்கையெடுப்பதும், பிறகு இரண்டு கைகளை யெடுக்கிறதும், 18-வது

இரண்டு கைகளுக்குமிடையிலே ஸஜ்தாச் செய்கிறதும், 19-வது ஸஜ்தாச்செய்யும்போது கைவிரல்களுடைய முன்பக்கங்களைக் கிபுலாவை நோக்கிக்கொள்கிறதும், 20-வது நெற்றியிலொட்டிய மண்ணை ஸலாம் கொடுக்கிறதற்கு முன்னிதாய் தொடைக்காமலிருக்கிறதும், 21-வது ஸலாம் கொடுக்கும்போது வலது புறமும், இடது புறமும் முகத்தைத் திருப்பித் தோளைப்பார்க்கிறதும், 22-வது பெண்பிள்ளைகள் தக்பீறு கட்டுகிறபோதிலே கைகளைத் தோட்புயம் வரைக்கு முயர்த்துகிறதும் 23-வது பெண்பிள்ளைகள் முன் சொன்னவைகளுக்கு மாற்றமாய்ச் சேர்த்துக்கொள்கிறதும், 24-வது பறுலான தொழுகையிற் பிந்தின இரண்டு ரக அத்திலே அல்ஹம்தை யோதுகிறதும், 25-வது சலாம் கொடுக்கும்போது இமாமானவர் முக்ததிகளையும், மலாயிக்கத்துகளையும் நிய்யத்து வைக்கிறதும், 26-வது முக்ததிகள். இமாமையும் மலாஇக்கத்துகளையும் நிய்யத்து வைக்கிறதும், 27-வது ஒன்றியாய்த் தொழுகிறவன் மலாயிக்கத்துகளை மாத்திரம் நிய்யத்து வைக்கிறதும் ஆகிய இவ்விருபத்தேழும் தொழுகையில் முஸ்தஹப்புகளா யிருக்கும்.

## தொழுகையில் மக்ரூஹுகள் 60,

அவைகளாகிறது 1-வது கழுத்திற்கிடங்குந் துப்பட்டாவின் சிம்புகளை இரண்டுபக்கங்களிலும் நாலவிடுகிறதும், 2-வது ஸஜ்தாவிற்குப்போகும்போது சரீரத்திற் கிடைக்கிற துணிகளைத் தூக்கிக்கொள்கிறதும். 3-வது துணிகளைத் தொட்டுச் சேஷ்ட்டை செய்கிறதும், 4-வது தன்னுடைய சரீரத்தைக்கொண்டு சேஷ்டை செய்கிறதும், 5-வது நீக்களிப்பான உடைகளை உடுத்துகிறதும், 6-வது கிரு அத்தை விலக்காதிருக்கிற ஷற்த்துகொளவுடு பணங்காசுகளை வாயிலடக்கிக்கொள்கிறதும் அப்படிக் கிரு அத்தை விலக்குமேயானால் தொழுகை முறிந்துபோகும், 7-வது தலையைத் திறந்துகொண்டு வெருந்தலையாயிருக்கிறதும், 8-வது மலபாதை ஜலபாதைகளை யடக்கிக்கொண்டு தொழுகிறதும், 9-வது அபானவாயுவை யடக்கிக்கொண்டு தொழுகிறதும் 10-வது தொழுகைக்கு முன்னிலே தலைமுடியைச் சேர்த்து கட்டுகிறதும், 11-வது ஸஜ்தாத் தலத்திலுள்ள கல்லுகளை யெடுத்தெறிகிறதும், என்கிலும் ஸஜ்தாச் செய்யமுடியாத விஷயத்திலே ஒருதரஞ்செய்து கொள்ளலாகும், 12-வது கைவிரல்களை நெட்டி முறிக்கிறதும், 13-வது இரண்டு கைகளின் விரல்களை கோர்த்து முறுக்கிக்கொள்கிறதும், 13-வது இடுப்பைக் கைகொண்டு பிடித்து நெறித்து நெட்டியிடுகிறதும், 15-வது அக்கம்பக்கங்களிலே முகத்தைத்திருப்பிப்பார்க்கிறதும் 16 வது அத்தஹிய்யாத் திலிருக்கும்போது நாயிருப்பிருக்கிறதும், 17-வது ஸஜ்தாவிலே ஆண்பிள்ளைகள் கொடுங்கைகளையும் பூமியிற்

படும்படி வைக்கிறதும், 18-வது ஒருவனுடைய முகத்திற்கெதிரே தொழுகிறதும், 19-வது ஸலாத்திற்கு ஜவாபு கைகொண்டு சொல்லுகிறதும், 20-யாதாமொரு தங்கடமின்றிச்சம்மணங் கூட்டியிருக்கிறதும்.

21-வது கொட்டாவியிடுகிறதும், 22-வது அப்படிக் கொட்டாவி வந்தனுற் கைகொண்டு மூடாமலிருக்கிறதும், 23-வது இரண்டு கண்களையும் பொற்றிக்கொள்கிறதும் என்கிலும், கல்பு பராக்காகமலிருப்பதற்காகக் கண் பொற்றுவதாகும், 24-வது இமாமானவர் மிஹ்ராபுக்குள்ளே நிற்கிறதும், 25-வது உயிருள்ள வஸ்த்துக்களைபோல் சுரூபமெழுதப்பட்ட உடைகளையுடுத்துகிறதும், 26-வது தொழுகிறவனுக்கு மேற்புறத்தில் அதாவது எதிரில் அல்லது வலது பக்கத்தில், அல்லது இடதுபக்கத்தில் மேற்சொல்லிய சுரூபமெழுதியவைகளை வைக்கிறதும், 27-வது ஆயத்துகளையும், தஸ்பீஹுகளையும் கைகொண்டெண்ணுகிறதும், 28-வது பிஸ்மில்லை இறைந்தோதுகிறதும், 29-வது தக்பீரை யிரண்டுதரம் மூன்றுதரத்துக்கதிகஞ் சொல்கிறதும். 30-வது பல்லிற்கிடையிலே ஒரு கடலைக்குங் குறைவான வஸ்துவு மிருக்கிறதும் யாதாமொரு வஸ்துவை அதாவது விழுங்கிர வஸ்துவுங் கடலைப்பிரமாண்டமாயிருக்கிறது கொண்டு தொழுகை முறிந்துபோகும், 31-வது தொழுகையுடைய ஸுன்னத்துகளில் நின்று மெதையேனுமொன்றை விடுகிறதும், 32-வது குருஆனை றுக்கூவில் முடிக்கிறதும், 33-வது ஸஜ்தாவிற் போகிறபோதிலே ஸமி அல்லாஹு லிமன்ஹிமிதா வென்றும், ஸஜ்தாவிலானபோது அல்லாஹு அக்பறென்றுஞ் சொல்லுகிறதும், 34-வது யாதாமொரு சங்கடமின்றி ஸஜ்தாவிற்காக முழங்கால்களைப் பூமியில் வைப்பதற்கு முன்னிலேயிரண்டு கைகளையும் பூமியின்பேரில் வைக்கிறதும், 35-வது நிலையில் நிற்கிறபோது ஒரு காலின்பேரிலேயே பாரத்தைப்பொருக்க நிற்கிறதும், 36-வது றுக்குவல்லாததிலே கைவிரல்களாற் கட்டிக்கொள்கிறதும், 37-வது குரு ஆனைத் தீவிரமாக வோதுகிறதும், 38-வது றுக்கூவுடைய நேரத்திலே தலையைப்புரடி முதுகுக்கு மேலாக்கிறதும் அல்லது தலையை புரடி கீழாக்கிறதும், 39-வது வாயிலூருகிற வுமிழ் நீர்களை வெளியிற் துப்புகிறதும், 40-வது மோஜாவைக் கழற்றுகிறதும், ஆனுல் அதைச் சிரிய செயல் கொண்டல்லாது பெரிய செயல் கொண்டு கழற்றினுல் தொழுகை முறிந்துபோகும், 41-வது தொழுகையில் பாத்திஹாவுக்கு முன்பாக மற்ற சூறத்துகளை யோதுகிறதும், 42-வது முந்தின சூராவைக்கான பிந்தின சூரு பெரிதா ஓதுகிறது, 43-வது இரண்டு சின்ன சூருக்களுக்கிடையில் ஒரு சூருவை இரண்டாவது றகஅத்தில் விட்டு விடுகிறதும், 44-வது முந்தியோதின சூருவுக்கு மேலுள்ள சூராவை யெடுத்தோதுகிறதும், அதாகிறது ஒரு றக

அத்திலாவது,45-வது தொழுகையிலே சிறுபிள்ளையைச் சுமந்துகொண்டிருக்கிறதும், 46-வது இமாமானவர் காலடிச் சத்தத்திற்காக வேண்டி ருக்கூஐ தாமதப்படுத்திக்கொண்டு வழிபார்த்திருக்கிறதும், 47-வது முதல் ரக அத்தைக்கான இரண்டாம் றக அத்தை தாமதப்படுத்துகிறதும், 48-வது தலைப்பா நுனியின்பேரிலே ஸஜ்தாச் செய்கிறதும், 49-வது வயிற்றைத் துடையுடனும் துடையைப் பின் தட்டெனும், பின்தட்டை பூமியுடனும் சேர்த்துக்கொள்கிறதும், 50-வது சட்டை தொப்பி முதலியவைகளைக் கழற்றுகிறதும், அல்லது அவைகள்போற் கொற்றவைகளைப் போடுகிறதும் அது சிறு செயல் கொண்டானுலுஞ்சரி. 51-வது முக்ததிகளுக்குச் சடைவு வருகிறமட்டிலும் இமாமானவர் தொழுகையை நீட்டித் தொழுகிறதும், 52 வது முக்ததிகளுடைய தீவிரத்திற்காக இமாமானவர் தொழுகையைச் சுருக்கமாக தொழுகிறதும்,53-வது பகலையிற் தொழுகிற நபில் தொழுகையிலே குறானை யிரைந்தோதுகிறதும், 54-வது இமாமானவர் வாஜிபான கிரு அத்தையோதினதின் பின்னர் திக்கின விடத்திலே முக்ததிகள் சொல்லிக்கொடுப்பார்களென்பதை யெதிர்பார்க்கிறதும், 55-வது இமாமானவர் அமர்ந்தோதும்படியான தொழுகையிலே ஸஜ்தாவுடைய ஆயத்தை யோதுகிறதும் ஆனல் சூறத்துடைய கடைசியிலே ஸஜ்தாவுடைய ஆயத்திருந்தாலேயொழிய 56-வது பருலான தொழுகையிலே ஒரு ஆயத்தைத் திருப்பி யோதுகிறதும், 57-வது இமாமானவர் றஹ்மத்தான அல்லது பயங்கரமான ஆயத்தை யோதும்போது முக்ததிகள் ஸதக்கல்லாஹு என்று சொல்கிறதும், 58-வது யாதாமொரு சங்கடமின்றி பருலான தொழுகையிலே தூண்கள் பேரிலேனும் அல்லது மதிளின்பேரிலேனுஞ் சாய்ந்துகொள்கிறதும் ஆனல் நபில் தொழுகையிற் சாய்ந்துகொள்கிறதும் மக்றூஹு இல்லை, 59-வது நாசியை யுறுஞ்சிக்கொள்கிறதும், 60-வது வானத்தளவிலே தலையை யுயர்த்துகிறதும் பூமியளவிலே தலையைக்கவிழ்த்துகிறதும் ஆகிய இவ்வறுபதும் தொழுகையில் மக்றூஹுகளாயிருக்கும். இன்னுஞ்சில ரிவாயத்தின்படி இவைகளிற் சிலதை மக்றூஹென்றுஞ் சொல்லப்படுகின்றது.

தொழுகையில் முறிவுகள் 5.

அவைகளாகிறது 1-வது யாதாமொரு பேச்சை மனுடருடனே பேசுவதுபோலே பேசினுலும், 2-வது மனமுரண்டினுலாவது அல்லது அறியாமல் தூக்கத்தின் பேரிலாவது பேசினுலும், 3-வது தனக்குக் கேட்கும்படியாக வெடி சிரிப்புச் சிரித்தாலும், 4-வது யாதாமொரு வஸ்துவைத் தின்றுலும், 5-வது மிகுதியான செயலைச்செய்தாலுமாகிய இவ்வைந்து காரியங்களாற் தொழுகை முறிந்து போகும்.

## தொழுகைக்குப்பின் ஓதும் துஆ.

பதம்.

சலவாத்:—அல்லாஹும்ம ஸல்லி ஆலாசய்யிதினு முஹம்மதின் வஅலா ஆலி சய்யிதினு முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் அலேஹி.

பொருள்.

(=ஓ! அல்லாஹ்! எங்களுக்கு எஜமானரான முஹம்மது நபி சல்லல்லாஹு அலேஹிவசல்லம் அவர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் சாந்தமும் அனுக்கிரகம் உண்டாவதாக.)

பதம்.

துஆ:-"அல்லாஹும்ம றப்பனு ஆத்தினு பித்துன்யா ஹஸனதன் வபில் ஆகிறதி ஹஸனதன் வகினு அதாபன்னூர்.

சல்லல்லாஹுதஅலா அலா கைரி கல்கிஹி சய்யிதினு முஹம்மதின் வஅலாஆலிஹி வஅஸ்ஹாபிஹி அஜ்மஈன்.

சுப்ஹான ரப்பிக ரப்பில் இஜ்ஜதி அம்மாயஷிபூன் வசலாமுன் அலல் முர்சலீன் வல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்"

பொருள்.

ஓ! அல்லாஹ்! எங்களுக்கு இருவுலகத்திலும் நன்மையைக் கொடுப்பாயாக. நரகத்து தீயிலிருந்து எங்களை காப்பாற்றுவாயாக

அல்லாஹ்! மனிதர்களிலெல்லாம் சிறந்த எங்கள் எஜமானரான முஹம்மத் நபிக்கும், அவர்களின் சந்ததியார்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் சாந்தமுண்டாவதாக.

மகிமையான எங்களைப் படைத்துப் போஷித்து பரிபாலிக்கின்ற நாயனே! நீ மிகுந்த சங்கையானவன். உன்னைப்போல் புகழுக்கு அருகானவன் வேறுயாருமில்லை. எல்லா நபிகளுக்கும் சாந்தமுண்டாவதாக புகழுடங்களும் சகல படைப்புகளும் ரப்புக்கே உரித்தானது.

### இமாமத்துச் செய்பவர்களுக்கு பேணுதலான செயல்கள்.

1. மிஸ்வாக்கு செய்கிறவர்.
2. ஐந்து நேரம் தொழுகிறவர்.
3. மார்க்க சட்டம் தெரிந்தவர்.
4. குருஆனில் தொழுகைக்கு போதுமான கிராஅத்து பாடமிருக்கிறவர்.
5. மக்ரூஹைச் செய்யாதவர்.
6. முஸ்தஹப்பை விடாதவர்.
7. தலப்பா கட்டுகிறவர்.
8. ஜுப்பா போடுகிறவர்.
9. ஹராமை பயந்தவர்.
10. ஹலாலைப் பொருந்தினவர்.
11. மார்க்கப் பூனிப்பு என்னும் வரஃ உள்ளவர்.

## இமாமத்தின் ஷர்த்து 6.

1. இஸ்லாமாயிருக்கிறது.
2. பாலிகா இருக்கிறது.
3. புத்திசாலியாயிருக்கிறது.
4. ஆண் பிள்ளையாயிருக்கிறது.
5. குருஆனில் கிராஅத்து பாடம் இருக்கிறது.
6. சொல்பிரட்டாமல் ஓதுகிறவரும் ஒச்சமில்லாவருமாம்.

## இமாமை துயருகிறதற்கு சர்த்துகள் 10.

1. முக்ததி இமாமைத்துயர நிய்யத்துச்செய்கிறது.
2. இருவர் தலம் ஒன்ருயிருக்கிறது.
3. இருவர் தொழுகை ஒன்ருயிருக்கிறது.
4. முக்ததி உடைய எண்ணத்தில் இமாமுடைய தொழுகை துருஸ் தாகுமென்று நிய்யத்து இருக்கிறது.
5. ஆண் பிள்ளையுடன் பெண்பிள்ளை துயராதிருக்கிறது.
6. முக்ததி இமாமுடைய குதிங்காலுக்கு பிந்தி நிற்கிறது.
7. இமாமைக்காணுகிறது.
8. முக்ததி இமாமை முசாபரா அல்லது முகீமா என்றறிவது.
9. இமாமுக்கு முக்ததீ முந்தாமலிருக்குறது.
10. முக்ததி இமாமுடைய பருலு ஷர்த்துகளுக்கு குறைந்தவராயிருக்கிறது அல்லது சமமாயிருக்கிறது.

## ஜும்ஆ விதியாவதற்கு சருத்துகள் 9.

1. ஆண்பிள்ளையாய் இருக்கிறது.
2. சுவாத்தியகாரனுயிருக்கிறது.
3. அக்லு உள்ளவனுயிருக்கிறது.
4. புலூகானவனுயிருக்கிறது.
5. நாட்டான் மகனுயிருக்கிறது.
6. முகீமாயிருக்கிறது.
7. பார்வையுள்ளவனுயிருக்கிறது.
8. நடந்துபோக தராணியிருக்கிறது.
9. அநீதகாரனை விட்டு பயமில்லாமலிருக்கிறது.

## ஜும்ஆ தொழுகை விபரம்.

| | | |
|---|---|---|
| ஒலுவு நபில் | 2 | ரகஅத்து |
| மஸ்ஜிது நபில் | 2 | ரகஅத்து |
| சுண்ணத்துல் ஜும்அ | 4 | ரகஅத்து |
| ஜும்ஆ பருலு | 2 | ரகஅத்து |
| ஜுமஆ சுன்னத்து | 4 | ரகஅத்து |
| ஆகிர லுகரு | 4 | ரகஅத்து |
| வக்து சுன்னத்து | 2 | ரகஅத்து |
| நபில் | 2 | ரகஅத்து |

ஜும்ஆ கூடுகிறதற்கு ஷர்த்துகள் 7.

1. பட்டணமாயிருக்கிறது

2. சுல்தான் அல்லது நாயிபு உண்டாயிருக்கிறது

3. லுஹருடைய வகத்து வருகிறது

4. அந்த வகத்திலயே குதுபா ஓதுகிறது.

5. அந்த குதுபாவை ஜும்ஆ தொழுகுமுன் ஓதுகிறது.

6. இமாமை தவிர குறைந்தது புலூகை எத்திய 3 ஆண் பிள்ளைகள் இருக்கிறது.

7. பள்ளிவாசல் கட்டினவர்கள் ஜும்ஆ தொழ யாபேருக்கும் உத்திரவு அழித்திருக்கிறது.

கொத்பா ஓதக்கூடியவருக்கும் குத்பாவிலும் ஏர்பட்ட சுன்னத்துகள் 24.

1. கொத்பா ஓதக்கூடியவர் மிம்பருக்கு வலதுபுறம் உட்கார்ந்திருப்பது

2. கொத்பா ஓதக்கூடியவர் சிருந்துடக்கு பெருந்துடக்கு நீக்கி துப்புரவாயிருக்கிறது.

3. அவ்ரத்தை மறைக்கிறது.

4. கத்தீபு மிம்பரில் உட்கார்ந்திருக்கிறது.

5. கத்தீபு மிம்பரில் உட்கார்ந்த பிறகு கத்தீபுக்கு முன்பு பாங்கு சொல்கிறது.

6. இரண்டு கொத்பாவும் நின்று ஓதுகிறது.

7. கத்தீபு ஆசாவை இடது கையில் பிடிக்கிறது.

8. கத்தீபு ஜமாத்துகளுடைய முகத்துக்கு நேராக கொத்பா ஓதுகிறது

9. கத்தீபு அஊது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர்றஜீம் சிற்றுக ஓதிய பின் அல்லாவுடைய ஹம்தைக்கொண்டு குத்பா துடங்குகிறது.

10. அல்லா குத்த ஆலாவை புகழுகிறது.

11. இரண்டு சகாதத்தைக்கொண்டு ஓதுகிறது.

12. நாயகத்தின்பேரில் சலவாத்தை கத்தீபு ஓதுகிறது.

13. கதீபு ஜனங்கள் பாவங்களை விட்டும் நீங்குவதற்கு அச்சம் பூட்டுகிறது.

14. கதீபு ஜனங்கள் சலாமத்து பெருவதற்கு உபதேசம் செய்வது.

15. கதீபு முந்தின கொத்பா கடைசியில் குருஆண ஆயத்துக்கு முன் அநூது ஓதுகிறது.

16. அநூதுக்குப்பின் குருஆன் ஆயத்து ஓதுகிறது.

17. இரண்டு கொத்பாவுக்கிடையில் கத்தீபு மூன்று ஆயத்து கதருக்கு உட்காருகிறது.

18. இரண்டாவது கொத்பா ஓதுகிறது.

19. இரண்டாவது கொத்பாவில் அல்ஹம்துலில்லாவையும் சலவாத்தையும் மீளவைப்பது.

20. நாலு யார்களுடைய பேர் நாமமும், அம்ஜது, அப்பாசு, றலியல்லாஹூ அன்ஹூமா பேர்களையும் சொல்கிறது.

21. மூமினன ஆண் பெண்களுக்கு ஆண்டவனிடம் பிழைபொருக்க தேடுகிறது.

22. கலீபாகளுக்கு துஆ செய்கிறது.

23. இரண்டு கொத்பாவையும் கவுமுகள் காது தாழ்த்தி கேள்கிறது.

24. இரண்டு கொத்பாவையும் மிகைக்காமல் சுருக்கமாக ஒதுகிறது.

## எல்லாத் தொழுகைக்கும் ஒதும் துஆ.

அல்லாஹூம்ம இன்ஞ நஸ் அலுக்க ஈமானன் முஸ்தகீமன் வபலுலன் தாயிமன் வ நலுறன் ரஹ்மததன் வ அக்லன் காமிலன் வ கல்பன் மூனவ்வறன் வதௌபீக்கன் இருஷானன் வதௌபத்தன் நசூஹன் வலபுரன் ஜமீலன வ அஜ்ரன் அலீமா வலி ஷானன் தாக்கிரன் வபதனன் ஷாபிரன் வ ரிஜ்கன் வாஷிஅன் வ ஸஙீயன் மஷ்கூரன் வதன்பன் மகுபூரன் வ அமலன் மக்பூலன்வ துஆஅன் முஸ்தஜாபா வஜன்னத்தல்பிருதௌசி நயீமன் முஸ்தகீமன் ரப்பனுஆத்தினு பித்துன்யா ஹஸனத்தன் வபில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகினு அதாபன்னர் வசல்லலாஹூவஸல்லம அலா கைறி கல்கிஹி செய்யிதினு முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன் சுபுஹான ரப்பிக்க ரப்பில் இஜ்ஜத்தி அம்மாயசிபூன வஸலாமுன் அலல்முருஸலீன வல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.

## 2 பெருநாள் தொழுகை விபரம்

நிய்யத்து ஈதுல்பித்ரு வாஜிபாகிய தொழுகை இரண்டு ரகஅத்தையும் இந்த இமாமுடன் சேர்ந்து அல்லாவுக்காகத் தொழுகிறேன். அல்லாஹூ அக்பர் ஈதுப்பெருநாள் தொழுகையில் ஜாயிதான தகபீர்கள் சொல்லுகிற விபரம்.

1-வது ரகஅத்திற்கு இமாம் தக்பீர் தஹ்ரீமாச்சொல்லி தக்பீர் கட்டி சுபுஹானக்கல்லாஹூமம முடிய ஒதியபின் சேர்ந்தரணியாக 3 தக்பீர் சொல்லவும் அந்த மூன்று தக்பீரிலும் கையை கட்டாமல் கீழே தொங்க விட்டு 3-வது தக்பீர் முடிந்தவுடன் கட்டிக்கொள்ளவும் பின்பு இமாம் கிரா அத்து ஒதி முடிந்து 1-வது ரகஅத்து தொழுது தீர்ந்து 2-வது ரகஅத்துக்கு கிரா அத்து ஒதி முடிந்து ருகூஉக்கு போகும் முன் கையை உயர்த்தி 3 தக்பீர் முன்போல் சொல்லி கைகட்டாமல் சோரவிட்டு தக்பீர் சொல்லி ருகூஉக்கு போவார் ஈதுல் அல்ஹா வாஜிபாஹிய தொழுகை இரண்டு ரகஅத்தையும் இந்த இமாமுடன் சேர்ந்து அல்லாவுக்காக தொழுகிறேன் என்று தக்பீர் கட்டவும்.

## மையத்து தொழுகை விபரம் நிய்யத்து.

ஜனசா தொழுகை நாலு தக்பீர் இந்த இமாமுடன் சேர்ந்து அல்லாவுக்காகத் தொழுகிறேன் இந்த மையத்துக்காஹதுஆ செய்கிறேன் என்று தக்பீர் கட்டி 1-வது தக்பீரில் சுபுஹான கல்லாஹூம்ம வபிஹம்திக வதபார

கஸ்முக வத ஆலா ஜத்துக வஜல்ல தனூஉக வலாயிலாஹ கைருக. 2-வது தக்பீரில் சலவாத்தே இபுராஹீம் ஓதவும் 3-வது தக்பீரில் அல்லாஹும்மஃபிர் லிஹய்யினு வமய்யிதினு வஷாஹிதினு வகாயிபினு வஸகீரினு வகபீரினு வதகரினு வஉன்தானு அல்லாஹும்ம மன் அஹ்யைதஹு மின்னு ப அஹ்யிஹி அலல் இஸ்லாமி வமன் தவப்பய்தஹு மின்னு பதவப்பாஹு அலல்யீமான் யென்று ஓதவும் ஆணுயிருந்தால் ஹு வென்றும் பெண்ணுயிருந்தால் ஹா வென்றும் ஓதவும்.

4-வது தகபீரில் ரப்பனு ஆத்தினு பித்துன்யா ஹஸனத்தன் வபில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகினு அதாபன்னுர்.

ரமலான் நோம்பின் நிய்யத்து.

இந்த வருஷம் ரமலான் மாதம் பருலான நோம்பை அதாவாக அல்லாவுக்காக நாளைப்பிடிக்க நிய்யத்துச்செய்தேன்.

நோன்பு திறக்க நிய்யத்து.

அல்லாவே உனக்காக நோன்பு பிடித்தேன்.
உன்னைக்கொண்டு ஈமான் கொண்டேன்.
உன்பேரில் தவக்கலானேன்.
உன் ரிஜக்கைக்கொண்டு நோன்பு திறந்தேன்.

குபுரை வருத்துகிற பாபு.

1-வது அல்லாஹுதஆலா புதிதானவனென்று சொல்கிறது.

2-வது ஒரு இடத்தை குறிப்பிட்டு அதில் இருக்கிறுனென்பது.

3-வது குபுரை பொருந்துகிறது. 4-வது அச்சம்பூட்டி மார்க்கம் சொல்ல பயப்படாமலிருக்கிறது. 5 வது வருமை வரும்போது அல்லாஹுதஆலா பிடுங்கிக்கொண்டான் என்கிறது 6-வது ஆண்டவன் மோசக்காரன் என்பது 7-வது என்னை அல்லாஹுதஆலா ஏழையாய் எதற்கு படைத்தானென்பது நான் கஷ்ட்டப்படுகிறது ஆண்டவா உனக்கு சரிதானு 8-வது கேலி பரிகாசமான குபுர் வார்த்தைகளை பேசுகிறது. 9-வது அல்லாஹுதஆலா என்னைக் கெடுத்தானென்பது. 10-வது ஆண்டவன் சுகமாக உன்னை வைத்தானென்பது. 11-வது நாயனிடம் நீதியில்லை என்பது. 12 குருஆனை பொடுபோக்காய் வைக்கிறது 13ஓதுகிறவனைப்பார்த்து இது என்ன அவயசத்தம் என்கிறது 14-வது குரு ஆயத்துகளை பரிகாசம் பண்ணுகிறது 15-வது ஆதம் அலைஹிஸ்ஸலாம் கோதும்பைக்கனியைத்தின்னுவிடில் நாமள் பாவியாகமாட்டோம் என்கிறது. 16-வது ஒரு நபி அவர்களும் கபுரிலில்லை எல்லாரும் இற்றவிந்துபோனுர்கள் என்பது. 17-வது நபிமார்களைக்கொண்டு ஐபு பேசுவது. 18-வது நபி அரபிகளுக்குத்தான் மார்க்கம் சொன்னுரென்பது 19-வது நபி அவர்கள் சுரைக்காயை பிரியம் வைத்தார்களென்பது 20-வது

நபி அவர்கள் விரலை சூப்பவில்லை என்பது, 21-வது நபி மிஹ்றாஜுக்குப் போனதை சந்தேகம் வைப்பது, 22-வது கியாமத்தைப்பற்றி எனக்கு பயம் இல்லை என்பது, 23-வது நன்மையையும் தீமையையும் நாயன்தான் செய்ய சொன்னுன் என்பது, 24-வது அல்லாஹுத ஆலா எழுப்புகிறதைப்பற்றி சந்தேகம் வைப்பது, 25-வது நபி யுல்லாவுடைய ஹுக்குமுகளை பரிகாசம் பண்ணுவது, 26-வது நான் தொழுகையை விட்டு கடந்துவிட்டேன் என்பது 27-வது எதற்காக தொழுகிறதென்று சொல்வது, 28-வது ஒரு வீட்டுக்கு ஒருவர் தொழுதால் போதும் என்கிறது, 29-வது தொழுகை பெரிய சுமை பாரமாயிருக்கிறதென்பது, 30-வது குபுருடைய செய்கை செய்வது 31வது ஹராமான முதலைஎடுத்து ஸதக்கா செய்வது, 32-வது வாங்கினேர் தெரிந்து அவனுக்கு துஆ செய்கிறது, 33-வது ஒரு மூஸ்லீமை காபீர் என்று சொல்வது, 34-வது பொய், சூது, மோசம் இல்லாவிடில் பிழைக்க முடியாது என்பது 35-வது ஹராமை ஹலால் என்று சொல்வது, 36-வது ஹலாலை ஹராமென்று கருதுவது, 37-வது மௌத்துடைய அதாபைவிட்டும் தப்பித்துக் கொன்டேன் என்பது, 38-வது ஒரு இஸ்லாமும் எனக்குத்தேவை இல்லை என்பது, 39-வது நரகத்தைப்பற்றி எனக்கு பயமில்லை என்பது, 40-வது குபுரைவிட்டு தௌபாச் செய் என்ருல் செய்யமாட்டேன் என்பது 41-வது ஈமான் இஸ்லாம் தெரியாது என்பது, 42-வது வேதக்கட்டளையை புறக்கனிக்கிறது, 43-வது மீஜான் திராஸை பொய் என்பது, 44-வது சதா கோடி சங்கத்தில் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிருனே என்பது 45-வது நபியுடைய ஷபாயத்தை இல்லையென்பது 46-வது நால்யார்கள் நம்மைப் போல் பாவம் செய்தார்களென்பது 47-வது ஆயிசா, மரியம் இருவரை படர் சொல்வது, 48-வது ஈசுபு நபியையும் ஜுலேகா அம்மாவையும் படுதூர்ச் சொல்வது, 49 வது இதையெல்லாம் வீண்மொழியென்பது 50-வது மார்க்கங்கள் இமாம்களுடைய சொல் என்பது மூமினை முஸ்லீம்கள் இதில்வரக் கூடிய குபுர் நடத்தையை விட்டு நாவை பேன நாயன் கிருபைசெய்வானுகவும் மற்றும் சங்கதிகளுக்கு பெரிய கித்தாபுகளைப் பார்த்துக்கொள்ளவும்.

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

அல்ஹம்து ஸூரா.

"அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் அற்றஹ்மானிற்றஹீம் மாலிக்கி யௌமித்தீன் இய்யாக்க நஉபுது வஇய்யாக நஸ்தஈன் இஹ்திநஸ்ஸிராத்தல் முஸ்தக்கீம ஸிராத்தல்லதீன அன் அம்த அலைஹிம் கைரில் மக்லூபி அலைஹிம் வலல்லாலீன் (ஆமீன்"—

பொருள்.

எல்லாப்புகழும் அல்லாவுக்கே. அவன் எல்லாவற்றையும் படைத்து போஷித்து, பரிபாலிப்போன். அளவற்ற அருளாளன், நிகரற்ற தயாளன் தவிர தீர்ப்புநாளின் அதிபதி. நாங்கள் உன்னையே வணங்குகிறோம். மேலும் உன்னிடமே உதவி தேடுகிறோம். நீ எவர்களுக்கு சன்மார்க்க வழியை அருள் புரிந்தாயோ அவ்வழியை எங்களுக்கு நேமமாக்கி வைப்பாயாக. அதல்லாமல் உன் கோபத்திற்குள்ளானவர்களே, வழிதப்பியவர்களே சென்ற வழியல்ல. (அங்கனம் ஆகாமல்)

பின்னர் பிஸ்மில்லாவைச் சொல்லி, அடியிற்கண்ட ஸூராக்களில் ஒன்றை வரிசைக்கிரமமாய் ஓதவும்.

786

1. "அலம்தற கைப - பஅல றப்புக்க பிஅஸ்ஹாபில்பீல் அலம் எஜ்அல் கைதஹூம் பீதலுலீலின் வஅர்சல அலைஹிம் தைரன் அபாபீல தர்மீஹிம் பிஹிஜாறத்தின் மின்ஸிஜ்ஜீலின் பஜஅலஹூம் கஅஸ்பின்மஃகூல்."

யானையின் கூட்டத்தாரை உன் ரப்பு என்ன கெதியாக்கினன் என்பதை நீர் அறியவில்லையா? அவன் அவர்களின் துர் ஏற்பாட்டை பாழாக்கினன். இன்னும் அவர்கள்மீது அபாபீல் என்னும் பக்ஷிக்கூட்டங்களை அனுப்பினன் அவைகள் அவர்களை சுட்ட கற்களால் அடிபடும்படி செய்தன, அவர்களை பூச்சி அரித்த வைக்கோல்போல் ஆக்கிவிட்டான்.

786

2. "லிஈலாபி குரைஷின் ஈலாபிஹிம் ரிஹ்லதஷ்ஷிதாயி வஸ்ஸைப் பல் யஉபுதூ றப்பஹாதல் பைத்தில்லதீ அத் அமஹூம் மின்ஜூஇன் வஆமனஹூம் மின்கௌப்"

பொருள்.

மாரிகாலத்திலும் கோடை காலத்திலும் (வர்த்தகத்திற்காக) குரைஷிகள் பிரயாணிப்பதை அவர்களுக்கு பாதுகாத்து வருவதற்காக அவ்வீட்டின் (அதாவது கஃபதுல்லாவின்) ரப்பை அவர்கள் வணங்குவோர்களாக. அவன் அவர்களுக்கு பசிக்கு உணவளித்தான் அவர்கள் பயத்தை நீக்கினன்,

786

3. "அற அய்தல்லதீ யுகதிபு பித்தீனி பதாலிகல்லதீ எதுஉல் எத்தீம வலாயஹூள்ளு அலாதஆமில் மிஸ்கீன் பவைலுன் லில்முஸல்லீ நல்லதீனஹூம் அன்ஸலாத்திஹிம் ஸாஹூ னல்லதீனஹூம் யுறூஊன வயம்னஊனல் மாஊன்"

பொருள்.

தீர்ப்புநாளை பொய் என்று சொல்பவனைப்பற்றி நீ பார்க்கில்லையா? அவன் அனுதைகளை குரூரமாய் விரட்டுபவன் ஏழைகளுக்கு அன்னமளிக்க பிறரை தூண்டாதவன். அவ்விதமே தொழுகையில் அசட்டையாய் தொழுகிறவர்களும், கீர்த்திக்காக நன்மை செய்கிறவர்களும், வழக்கத்தில் கொடுத்து உதவிக்கொள்ளும் அற்ப வஸ்துக்களைக்கூட கொடாமல் தடுப்பவர்களும் வைல் என்ற நரகத்திற்குள் ளாவார்கள்.

786

4. "இன்ஞ அஃமைதஞ கல்கவ்தர் பஸல்லிறப்பிக வன்ஹர் இன்ன ஷானி அக ஹுவல் அப்தர்."

பொருள்.

நிச்சயமாக நாம் உமக்கு மிகுந்த பாக்கியத்தை கொடுத்திருக்கிறோம். ஆதலால். நீ உன் ரட்பை தொழும் குறுபானியும் கொடும், உண்மையாக உம்மை வெருப்பவனே செல்வமற்றுப்போனவன்.

786

5. "குல்யா அய்யூஹல் காபிருன லாஅஉபுது மாதஉபுதூன வலா அன்தும் ஆபிதூன மாஅஉபுது வலாஅன ஆபிதுன் மாஅபத்தும் வலா அன்தும் ஆபிதூன மாஅஉபுது லகும் தீனுக்கும் வலியதீன்"

பொருள்.

முஹம்மதே சொல்லும்: — ஓ விசுவாசமற்றவர்களே நீங்கள் வணங்குபவைகளை நான் வணங்கேன் நான் வணங்குவதை நீங்கள் வணங்கவுமில்லை. நீங்கள் வணங்கியவைகளை நான் வணங்குகிறவனுமல்ல. நான் வணங்குவதை நீங்கள் வணங்குவோர்களாயுமில்லை. உங்களுக்கு தக்க கூலி உங்களுக்கும் எனக்கு தக்க கூலி எனக்கும் கிடைககும்.

786

6. "இதாஜா அ நஸ்ருல்லாஹி வல்பத்ஹு வரஐத்தன்னுஸ யெத்குலூன பீதீனில்லாஹி அப்வாஜன் பஸப்பிஹ் பிஹம்தி றப்பிக வஸ்தகுபிர்ஹு இன்னஹுகான தவ்வாபா"

பொருள்.

அல்லாஹ்வின் உதவியும், ஜயமும் வந்து கூட்டங்கூட்டமாய் அல்லாஹ்வின் மார்க்கத்தில் மனிதர்கள் வருவதைப்பார்க்கும்பொழுது உம் ரப்பின் புகழாம் (அவனை) துதிசெய்யும். இன்னும் அவனிடம் மன்னிப்பு கேளும் நிச்சயமாக அவன் மன்னிப்புக்கொடுக்கச் சித்தமுள்ளவன்.

786

7. "தப்பத்யதா அபீலஹபின் வதப்ப மாஅகுனு அன்ஹு மாலுஹு வமாகஸப் ஸயஸ்லாநாரன் தாத்தலஹபின் வம்ரஅத்ஹு ஹம்மாலத்தல் ஹத்தபு பீஜீதிஹா ஹபுலுன் மிம்மஸத்" —

பொருள்.

(தியவின் தந்தை என்னும்) அபீலஹபின் இரு கைகளும் பாழாய் விடக்கடவது. (அவ்வாறே பாழாய் விட்டன.) அவன் திரவியமும் அவன் தேடியவையும் அவனுக்குப் பயனளிக்கா. சுடர்விட்டெரியும் அக்கினியில் அவனும் திரித்த கயிற்றைக் கழுத்தில் போட்டுக் கொண்டு சுள்ளி சுமக்கும் அவன் மனைவியும் சேர்ந்துவிடுவார்கள்.

786

8. "குல்ஹுவல்லாஹு அஹது அல்லாஹுஸ்ஸமது லம்யலிது வலம்யூலது வலம் யகுன்லஹு குபுவன் அஹது"

பொருள்.

சொல்லும் முஹம்மதே:—அல்லாஹ் ஒருவன். அல்லாஹ் எல்லாவற்றிற்கும் ஆதாரமானவன். அவன் (யாரையும்) பெறவமில்லை, அவன் (யாருக்கும்) பிறக்கவுமில்லை. அவனுக்கு சமமானவன் யாருமில்லை.

786

9. "குல் அஊது பிறப்பில் பலக் மின் ஷர்ரிமாகலக. வமின்ஷர்ரி காஸிகின் யிதாவகப வமின்ஷர்ரின் நப்பாதாத்தி பில்உகதி வமின் ஷர்ரி ஹாஸிதின் இதாஹஸத்"

முஹம்மதே சொல்லும்:—காலையின் ரப்பிடம், அவன் படைத்தவைகளின் தீங்கைவிட்டும், இரவின் தீங்கைவிட்டும், முடிச்சு முடிப்பவர்கள் தீங்கைவிட்டும்,பொறாமையால் உண்டாகும் தீங்கை விட்டும், நான் காவல் தேடுகிறேன்.

786

10. "குல் அஊது பிறப்பின்னாஸி மலிக்கின்னாஸி இலாஹின்னாஸி மின்ஷர்ரில் வஸ்வாஸ் அல்கன்னாஸில்லதீ யுவஸ்விஸு பீஸுதூ ரின்னாஸி மினல் ஜின்னத்தி வன்னாஸ்"—

முஹம்மதே சொல்லும்:— மனிதன் ரப்பு, மனிதரின் இறைவனும் மனிதரின் வணக்கத்துக்கு உரித்தானவனுமானவனிடத்தில் ஜின் வர்க்கத்திலும் மனிதர் வர்க்கத்திலும் மனிதரின் இருதயங்களை கலைத்துப்பதுங்குவோனின் (ஷைத்தானின்) தீங்கைவிட்டும் நான் காவல் தேடுகிறேன்.

ஸுஜுரா ஒதியபின்.

"அல்லாஹு அக்பர்" (=ஆண்டவன் மகாப் பெரியவன்) என்று குனிந்து "ஸுப்ஹான ரப்பியல் அலீம்" (=மகாப் பெரிய என் ரப்புக்கே மகிமையெல்லாம்) என்று 3-விடுத்தம் சொல்லி நிமிரும்போது "ஸமி அல்லாஹு லிமன் ஹமிதஹ்" (=அல்லாவை புகழ்கின்றவனின் புகழை அவன் ஒப்புக்கொள்வானாக) என்றும் நிமிர்ந்தபின் "ரப்பனா வலகல் ஹம்து" (=எங்கள் ரப்பே! புகழடங்கலும் உனக்கே) என்று சொல்லவும், ஸஜ்தாவில் "ஸுப்ஹான ரப்பியல் அஃலா" (=மகா மேன்மையான என் ரபபுக்கே மகிமையெல்லாம்) என்று 3-விடுத்தம் சொல்லவும் ஸஜ்தாவுக்குப் போகும்போதும் உயரும்போதும் "அல்லாஹு அக்பர்" என்று சொல்லவும்.

இருப்பில் ஒதுவது.

1. "அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாது வத்தைய்யிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வறஹ்மதுல்லாஹி வபறகாத்துஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா யிபாதில்லாஹிஸ்ஸாலிஹீன் அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹு வறசூலுஹு"—

(தொழுகையும் பரிசுத்தவாக்குகளும் அல்லாவிற்கு உரித்தானது ஓ! நபியே! உங்களுக்கு சாந்தமும், அல்லாவின் கருணையும் அனுக்கிரகமும் உண்டாவதாக. எங்களுக்கும் அல்லாவின் சன்மார்க்கமான அடியார்களுக்கும்

சாந்தமுண்டாவதாக. அல்லாவைத்தவிர வேறுயாரும் வணக்கத்துக்கு தகுதியானவனில்லை என்று நான் உறுதியாகச் சொல்லுகிறேன். முகம்மது நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் அவனுடைய அடியாரும் சிறப்புவாய்ந்த தூதருமாய் இருக்கிறார்கள் என்று உருதியாய்ச் சொல்லுகிறேன்) என்று ஓதி எழுந்து அதற்குப்பின் தொழுது கடைசி இருப்பில் இருந்து முன் ஓதிய அத்தஹிய்யாத்துடன்—

2 "அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத அலாஇப்ராஹீம் வஅலா ஆலி இப்ராஹீம் இன்னக ஹமீதுன் மஜீத்:— அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமாபாரக்த அலா இப்ராஹீம் வஅலா ஆலி இப்ராஹீம் இன்னக ஹமீதுன் மஜீத்."—

(ஓ! அல்லாஹ்! இபுறாஹீம் நபிக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் நீ கருணை செய்ததுபோல் முஹம்மது நபிக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் கருணை செய்வாயாக. நிச்சயமாக புகழடங்களும் உனக்கே உரித்தானது நீ மகத்துவம் பொருந்தியவன். ஓ! அல்லாஹ்! இப்ராஹீம் நபிக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நீ அனுக்கிரகம் செய்ததுபோல் முஹம்மது நபிக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நீஅனுக்கிரகம் செய்வாயாக. நிச்சயமாக புகழடங்களும் உனக்கே நீ மகத்துவம் பொருந்தியவன்) என்றும்;

3. "அல்லாஹும்மஹ்பிர்லி வலிவாலிதைய வலிஉஸ்தாதி வலிஜமீஇல் மூமினீன வல்மூமினாத் வல்முஸ்லிமீன வல்முஸ்லிமாத் அல்அஹ்யாயி மின்ஹும் வல்அம்வாத் இன்னக முஜீபுத்தஅவாத் பிறஹ்மதிக யா அர்கமர்றாஹிமீன்"—

( ஓ! அல்லாஹ்! என்னையும் என்னைப் பெற்றவர்களையும், என் உபாத்தியாயர்களையும், முஸ்லீமான ஆண் பெண்களையும், விசுவாசமான ஆண் பெண்களையும், அவர்களில் இறந்தவர்களையும், உயிரோடிருப்பவர்களையும் மன்னிப்பாயாக உண்மையாக நீ துஆக்களை கபூல் செய்பவன் கிருபையாளர்களுக் கெல்லாம் கிருபையாளனே, கிருபை செய்வாயாக) என்றும்

ஓதியபின்:—

தொழுகைக்குப்பின் ஓதும் ஆயத்துல் குர்ஸி.

" அல்லாஹு லாயிலாஹ இல்லாஹுவல் ஹைய்யுல் கையூம் லாதவ்குதுஹு ஸினதுன் வலாநவ்முன் லகுமாபிஸ்ஸமாவாதி வமாபில்அர்லி மன்தல்லதீ யஸ்பஉ இன்தஹு இல்லா பிஇத்னிஹி யஃலமு மாபைன அய்தீஹிம் வமாகல்பஹும் வலாயுஹீதூன பிஷைஇன் மின்இல்மிஹி இல்லாபிமாஷாஅ வஸிஅ குர்ஸிய்யு ஹுஸ்ஸமாவாதி வல்அர்ல வலாயஊதுஹு ஹிப்லுஹுமா வஹுவல் அலிய்யுல் அலீம"—

அல்லாஹ் வணக்கத்துக்கு தகுதியானவன் அல்லாவைத்தவிர வேறு யாருமில்லை. தனக்குத்தானே ஆதாரமாய் எக்காலத்திலும் ஜீவித்துக்கொண்டு இருக்கிறவன். அவனுக்கு அசதியுமில்லை. தூக்கமுமில்லை, வானலோகத்திலும் பூலோகத்திலுள்ளவையாவும் அவனுடையவை. அவன் அனுமதியின்றி அவனிடம் யார் சிபாரிசு செய்யமுடியும்? முன் நடந்தவை பின் நடக்கப் போகிறவை யாவும் அவனுக்குத்தெரியும். அவன் அறிவில் அவனுய் அறி

வித்தது மட்டில் மனிதனுக்குத்தெரியும், பூலோகத்தின் வானலோகத்தின் ராஜியங்கள் அவனுடையது. இந்த இரண்டைபரிபாலனம் செய்வதில் அவனுக்குப் பாரமில்லை. அவன் மேன்மையும் வல்லமையுமுள்ளவன்.

வித்றின் குனூத்து.

"அல்லாஹும்ம இன்னா நஸ்தஈனுக வநஸ்தஹ்தீக வநஸ்தக்பிறுக வநதூபுஇலைக வனுமினுபிக வனதவக்கலு அலைக வனுதனீ அலைகல் கைர குல்லஹு நஷ்குருக வலாநக்புருக வநஹ்லஉ வநத்ருக மன்யபுஜுருக அல்லாஹும்ம இய்யாக நஉபுது வலக நுசல்லீ வநஷ்ஜுது வஇலைக நஸ்ஆ வநஹ்றபிது வநர்ஜூ றஹ்மதக வநஹூஷா அதாபக இன்ன அதாபகல் ஜித்க பில்குப்பாரி முல்ஹிக்"—

ஓ! அல்லாஹ் உன் உதவியையும் உன் மன்னிப்பையும் நாங்கள் தேடுகிறோம். உன்னை விசுவாசிக்கின்றோம் உன்னிடம் நாங்கள் பொருப்பு சாட்டுகிறோம். உன்பேரில் நாங்கள் நலவை சொரிகின்றோம். மகா உயர்ந்த விதமாய் உன்னை நாங்கள் கொண்டாடுகிறோம். நாங்கள் நன்றி கெட்டவர்களல்ல. உன் கட்டளையை மீறியவர்களை விட்டு விலகி அவர்களை கைவிட்டோம். ஓ! அல்லாஹ் உன்னையே நாங்கள் வணங்குகிறோம். உன்னையே தொழுது அடிபணிகின்றோம். உன்னிடத்திற்கே நாங்கள் வேகமாய் ஓடுகின்றோம் உன் கருணைமேல். இச்சை வைக்கிறோம். உன் தண்டனைக்கு நாங்கள் பயப்படுகிறோம். உன்னை விசுவாசியாதவர்களுக்கு நிச்சயமாய் உன் தண்டனை சேரும்.

இதை வித்ருவாஜிபு மூன்றாம் ரகஅத்தில் கையைவிட்டு கட்டியபின் ஓதவும், தெரியாவிட்டால் "அல்லாஹும் மஹ்பிர்லீ (=அல்லாஹ்! என்னை மன்னிப்பாயாக!) என்று மூன்றுவிடுத்தம் சொல்லவும்

அஊது—நான் காவல் தேடுகிறேன். பில்லாஹி—அல்லாவைக்கொண்டும் மினஷைதானிற்றஜீம்—எடுத்தெரியப்பட்ட ஷைத்தானுடைய தீங்கைவிட்டும் பிஸ்மில்லா—உன் திருநாமங்கொண்டு துடங்குகிறேன், ஹிற்றஹ்மா—உலகத்தில் எல்லோருக்கும் கிருபை செய்கிறவன், நிற்றஹீம்—ஆகிரத்தில் மூமின்களுக்கு தனது கிருபை செய்கிறவன்.

தலீல்.

வலக்கது தரௌனா லிஜஹன்னம கதீரன் மினல் ஜின்னி வல்இன்சி.

பொருள்.

திடனாக நாம் ஆக்கினோம் மனிதர்கள் ஜின்களில் நின்றும் மிகுதத்தை நரகலோகத்திற்கு.

தலீல்.

லஹும் குலூபுன் லாயபுக்கஹூன பிஹா.

பொருள்.

அவர்களுக்கு கல்புகள் உண்டாயிருக்கிறது. அந்தக் கல்பைக்கொண்டு அறியமாட்டார்கள்.

தலீல்.

வலஹும் அஉயுனுன் லாயுபு ஸிரூன பிஹா.

பொருள்.

அவர்களுக்கு கண்கள் உண்டாயிருக்கிறது. அந்த கண்களைக்கொண்டும் அவர்கள் பார்க்கமாட்டார்கள்

தலீல்.

வலஹுூம் ஆதானுன் லாயெஸ்மஊன பிஹா.

பொருள்.

அவர்களுக்கு காதுகள் உண்டாயிருக்கிறது. அந்த காதுகளைக் கொண்டு கேழ்கமாட்டார்கள்.

தலீல்.

உலாயிக்க கல்அன் ஆமி.

பொருள்.

அன்னவர்கள் ஜவா மிருகங்கள் போலவாயிருக்கும்.

தலீல்.

பல்ஹுூம் அளல்லு.

பொருள்.

ஆனாலும் அவர்கள் வழிகெட்டவர்கள்.

தலீல்.

உலாயிக ஹுூமுல் காபிலூன்

பொருள்.

அவர்கள் மரதிவாளர்கள்,

தலீல்.

கத மல்லாஹுூ அலா குலூபிஹிம்.

பொருள்.

அல்லா சுபுஹானஹுூவத ஆலா அவர்களுடைய கள்புகளின்பேரில் மூத்திரை போட்டுவிட்டான்

தலீல்.

வஅலா சம்விஹிம்.

பொருள்.

அவர்களுடைய காதுகளின்பேரிலும்

தலீல்.

வஅலா அபுசாரிஹிம் கிஸாவத்துன்

பொருள்

அவர்களுடைய காதுகளின் பேரிலும் மூடியாகிறது போட்டுவிட்டான்.

தலீல்,

வலஹுூம் அதாபுன் அலீம்

பொருள்.

அவர்களுக்கு நொம்பலமான வேதனை உண்டாயிருக்கிறது.

தலீல்.

வமன் அஙுரல.

பொருள்.

யாராகிலும் ஒருவன் என்திக்ரைவிட்டு பிரக்கனிப்பானேயானல்

தலீல்.

பயின்னலஹு மஙீலத்தன்லனக்கா.

பொருள்.

அவனுக்கு கிட்டுமையாகிய ஜீவிப்பாகிறது அவனுக்குண்டாயிருக்கிறது

தலீல்.

வனஹு−ஷு−ருஹு− யெளமவ் கியாமத்தி அஙுமா.

பொருள்.

அவனை நாம் கியாமநாளில் குருடாக எழுப்புவோம்.

தலீல்.

காலரப்பி லிம−ஹஷர்த்தனீ அஙுமா.

பொருள்.

நாயனே என்னை என் குருடாக எழுப்பினய் என்று கேட்பான்.

தலீல்.

வகதுகுன்த்து பஸீரா.

பொருள்.

நான் பார்வை உடையவனக உலகத்தில் இருந்தேனே.

தலீல்.

கால கதாலிக்க அதத்துக ஆயாதுனு பனஸீத்தஹா.

பொருள்.

அதற்கு நாயன் சொல்வான்−உன்னிடத்தில் நம்முடைய திவ்ஷ்டாந்திரங்கள் வந்தது அதை நீ மறந்துவிட்டாய்.

தலீல்.

வகதாலிகல் யெளமதுன்ஸா.

பொருள்.

அதே விதமாக இன்றையில் நீ மரக்கப்பட்டாய்.

அறுப்பில் பருனு 4.

1. அறுப்பவன் இஸ்லாமாக இருக்கவேண்டும்.
2. பிஸ்மில்லா சொல்லவேண்டியது.

3. கழுத்து முடிச்சுக்கும் குரவளைக்கும் நடுவே ஒதுங்காமல் அறுக்க வேண்டியது.

4. நான்கு நரம்பும் தெரிக்க அறுக்க வேண்டியது.

அறுப்பின் சுன்னத்து 4.

1. ஒலுச்செய்து கொள்ளவேண்டும்.

2. பதமான கத்தியைக்கொண்டு அறுப்பது.

3. கிபுலாவை முன்னோக்கி நிற்பது.

4. உயிர் பிராணியை உசும்பாமல் பிடிப்பது.

அறுப்பின் முஸ்தஹப்பு 4.

1. உயிர்போகிறமட்டும் கத்தியை கழுவாமல் இருக்கிறது.

2. அறுத்தவன் வாய் பேசாமலிருக்கிறது.

3. சுன்னத்துகளைக் கவனித்துக்கொள்கிறது.

4. அறுப்பதற்கு முன்னும் அறுத்ததற்கு பின்னும் கலிமா ஷஹாதத் தோதுவது.

அறுப்பின் மக்ரூஹுகள் 4.

1. அறுக்கப்பட்டதை காலைப்பிடித்திழுத்து அறுக்கும் தலத்திற்கு கொண்டுபோவது.

2. படுக்கப்போட்டபின் கத்தியை தீட்டுகிறது.

3. ஒன்று பார்த்திருக்க ஒன்றை அறுப்பது.

4. தலை துண்டுபட அறுக்கிறது.



வசனம் முற்றிற்று.

786

## விருத்தம்.

பிஸ்மிலை துதித்தவர்கள் பெரியோனை பயந்திடுவார்
துஸ்மனை வென்றவர்கள் துய்யோனின் அருள்பெருவார்
குஸ்யாகத் தொழுதவர்கள் குணுக்களை யண்டவொட்டார்
இஸ்லாமின் ஆண்பெண்கள் இறையோனை வணங்கிடுவார்

இதுவும்

முச்சுடரில் முன்னான முதலவா உன்னருளால்
இச்சையாய்க் கேள்க்குகிறேன் இறையவா கிருபைசெய்து
தச்சில்லா மாளிகையில் தனியரசாளுகின்றோன்
அக்ஷரம் பிசகில்லாமல் அமைக்கநீ துணைசெய்வாயே

இதுவும்

வரமுறையறியாதவர் வல்லவன் சொல் எடுக்காதவர்
இறைவனை உணராதவர் இருந்தும் இறந்தவர்தான்
மறைமொழி பாராதவர் மனுஷராயிருப்பதேனோ
குறையறத் தொழுதபேர்க்கு குதாயவன் கிருபையாமே.

இதுவும்

முன்னுக்கு முன்னொளிவாய் முதலோனமைத் தொளிவாய்
தன்னுக்குத் தன்னொளிவே தனியோனுகந்தொளிவே
கண்ணுக்கு மெய்யொளிவே அனைவோரின் கலியகல
புண்ணியராய் வந்துதித்த புருகான்நபி முஹம்மதுவே.

பாட்டு.

யுமதுட ராகம்.

1 லக்ஷத்திருபத் நாலாயிரம் நபிகளின் பரக்கத்தினால்
தக்ஷகா கிருபைசெய்து தாஹாநபி ஷரஹிலாக்கு

2 முன்னூற்றி பதிமூன்று முறுசலீன்கள் உண்மையினால்
முன்னுற்ற பாவம்நீக்கி முறையாக நடக்கருள்வாய்

3 உலுல்அஜ்மி ஆருபேர்கள் உத்தமரின் சங்கையினால்
உகப்பாக என்மனதை உடயோனே துய்தாக்கு

4 முத்தான முஹம்மதவர் முன்அமைந்து பின்னுதித்தோர்
முறையான மார்க்கமதை குறையாமல் எடுக்கச்செய்வாய்

5 ஆலநபி தோழமார்கள் அன்பான நால்யார்களும்
ஆசையாக அநுதினமும் அடியேனும் போற்றிடுவேன்
6 நாலு இமாமவர்கள் நல்மார்க்கம் நவின்றவர்கள்
நாயகமானவரை நான்தினமும் போற்றி செய்வேன்
7 குத்துபு ஒலிமார்கள் குணமான சாமிலீன்கள்
குற்றம்நீக்கும் பெரியோரை குணமாக யான்துதிப்பேன்
8 நாயன்கிருபையாலும் நன்னபியின் பறக்கத்தாலும்
நஷ்டனி புலீஸைநீக்கி நாநிலத்தோர் நடந்துகொள்வீர்
9 இருபத்தி நான்கெழுத்தாய் இலங்குகின்ற கலிமாவை
இறையோனிறசூலையுமே இருதயத்தில் நான் இணைப்பேன்
10 ஜெகத்திலுள்ளோர் விளங்க ஷரீஅத்தின் வழியதுவை
சரிஹியோர்க்கு உபதேசம் சாற்றினேன் அப்துல்காதர்
11 கலங்காணி நகர்தனிலே கண்ணியமான முஸ்லீம்களும்
கல்பொத்து பொருள் அளித்தோர் காலகாலம் பெருகஅமீன்
12 பாட்டுக்கு பொருள் அளித்தோர் பாவத்தை நீபொருத்து
தேட்டம்போல் திருலிகாவும் தீனோர்க்கு அருள்புரிவாய்

விருத்தம்.

உடையோனே உன்கிருபை உகப்புடன் தேடுகின்ற
அடிமையை ஆதரித்து அன்பாக அருள்புரிந்து
மடையனிபிலீஸின் மாயத்தி லாக்கிடாமல்
கடை பிடிக்க மார்க்கசட்டம் காத்தருள்வாய் யாரஹீமே.

## முனாஜாத்து.

1 ஆதியே உன்கிருபை ஆலநபி தன்கிருபை
சோதியே உன்மகிமை சுருதியினில் கேட்டிருந்தும்
யோதியுணர்ந்து உள்ளம் தெளிந்திலான்
வாதியாய் தொழுகைவிட்டாய் வல்லவன் பொருப்பதுண்டோ

2 முன்னாலே மீதாக்கில் மொழிந்திட்டாய் முதலோனிடம்
இந்நாளில் ஷரஹதுவை இருத்திடாக் காரணமேன்
சொன்னாலும் தேசியமேன் சோரமது செய்தவரும்
பின்னாலே நாகம்போய் பேயனே யதாபடைவாய்

3 இருபத்தி நாலெழுத்தை இருதயத்தில் தியானே
உற்பத்தி செய்தமைத்தாய் யுண்மைநபி பரக்கத்தினால்
துற்புத்தியாலெ தொழுகைவிட பாவமாச்சி
கர்பித்து யுனவழித்த கர்த்தனை யுணர்ந்தானில்லை

4 நம்பினோர் துன்பம்பெறாய் நாடாதோர் நஷ்டமாவார்
இன்பமா ஷரஹெடுத்தோர் எரிநரகம் காணமாட்டார்
முன்புதித்த நபிபொருட்டால் மௌத்துடைய அந்நேரம்
அன்பான உன்கிருபை அச்சமயம் அருள்புரிவாய்

5 மட்டியெனும் பாவிமனம் மாதவத்தை யறியாதோடும்
கட்டிகபன்மூடு மட்டும் கருதிலேன் ஷரஹதுவை
விட்டிலான் இபிலீசவன் விரட்டுரான் மவுத்தளவும்
சுட்டிதனம் விட்டுநான் சுல்ஹாய் நடக்கருள்வாய்

6 இவ்வுலகம் நம்பியோன் இருமூன்றின் நேரம்தொளான்
அவ்வுலகம்நம்பி அவன் அமலெதுவும் செய்தானில்லை
செவ்வயாய் வணங்கா சிந்தயினில் பொருந்தாதோன்
சவ்வுந் தோல்கருக சண்டாலன் நரகிலாவான்

7 சட்டமென்ர ஷரீஹத்தை சண்டாளன் எடுத்திடாதோர்
கொட்டுந்தேள் நரக கொடுமைக்கு பயந்திடாதேன்
மட்டியெனும் பாவிமனம் மயங்கிடாமல் ஷரஹதுபோல்
திட்டமாய் யெனக்கருளும் தீநபியின் பரக்கத்தினல்

8 உன்னைவிட்டு மன்னை நம்பி உலகத்தினிற்றிறிந்தலைந்தேன்
என்னை இக்கோலம்செய்து இரங்காததேன் தானே
தன்னை மதிப்பொடும் தவஞ்செய்யா வீனனைப்போல்
பின்னை யொருவராக்காய் பெரியவாயொன் கிருபை

9 மன்னைநம்பி யாம்மிக மதிமோஸ மாகியவன்
பெண்ணை பிரியம்வைத்த பேயனென்று தள்ளிடாதே
அன்னை தந்தை அவர்கள்செய்த அருந்தவத்திற்காக நீ
மன்னறையில் போகுமுன் மலரடி தந்தாள்வாய் நீ

10 கெஞ்சுதலென்னிடமா கிருபைவைப்பதுன்னிடமா
அஞ்சுதல் என்னிடமா ஆதரிப்ப தொன்புரமா
ஒஞ்சுதல் உனதடிமை உகப்புவைப்ப துனக்கழகு
மிஞ்சிய பாவமெல்லாம் மேலவா நீ பொருப்பாய்

11 சத்தியமா கேள்குகிறேன் சமயத்தி லெந்தனக்கு
மௌனமா நீ இருந்தால் மனம்பதறி கறைந்திடுவேன்
வெற்றிநபி கிருபை வேந்தனே எந்தனுக்கு
முத்திபெரும் வழிஒன்றை முதலவா காட்டிடுவாய்

12 பெருமையான யாகுதாயே பிழைபொருக்க சடையாய்நீ
வெறுமையாய் நீ இருந்தால் வேறொருவறெனக்குமுண்டோ
அருமை நபிபொருட்டால் அடியேன் துயர்தீர்க்க
தருமமாய் கேள்குகிறேன் தனியவா கிருபைசெய்வாய்

13 உன்னைபோல் கிருபையுள்ளோன் யுண்மையா யொருவனில்லை
என்னைப்போல் பாவியானேன் எங்குமே கண்டதில்லை
அன்னை தந்தை யெந்தனையும் அன்புடன் ஆதரித்து
முன்செய்த வினைகள்போக்கி முத்தி தந்தாள்வாய்நீ

14 வல்லதோர் காகமெல்லா வருசையாய் கூடிநின்றால்
மெள்ளவே கல்லெறிந்தால் மிரண்டது ஓடுமாப்போல்
அல்லாவின் திக்குரதுவை அமைத்திட கல்பிடத்தே
பொல்லாத பாவங்களும் போயிடுமாம் பரந்தோடி

15 வருமைநோய் பாவமெல்லா வல்லவா நீதான்போக்கி
தருமமா குடையொன்டீந்து தாஹாநபி பொருட்டால்
மருமையின் நேரந்தன்னில் மவுத்தையும் ஷஹாத்துடன்
கிருபையாய் ஆக்கிவைத்து கர்த்தனே அருள்புரிவாய்

16 அய்யரிவான எந்தன் ஐம்புலன் பதருதையா
வையகமீதினிடை யென்துயர் தீர்ப்பாருண்டோ
பய்யலெனும் அப்துல்காதிர் பாவியென் பிழைபொருக்க
கையெடுத் தேந்தினேனே கருணையாய் கிருபைசெய்வாய்

நீதிமொழிகள்

முன்னவா முதலவா முன்னுன பெரியவா
தன்னவா தனியவா தம்பிரானவா
மன்னவா கல்க்குகளை மரையோத அமைத்தவா
சொன்னனே யொன்னருலால் சொல்போல் நடக்கவைப்பாய்

இதுவும்

வேதம் ஓதிய வேதியரும் வாழ
நீதிமன்னர் நெரியினரும் வாழ
ஆதியை பயந்திடும் ஆதமியும் வாழ
யோதியுணர்ந்தோர் யொழுங்கற்ற காரணமேன்

விருத்தம்.

ஓதிபடித்து யுள்ளமையரியாத யுகமையென்னு
காதினில்கேட்டு மார்க்கம்விட்டோர் கருத்துமென்னு
ஆதியைபயந்து பாவத்தை நீக்காத அறிவுமென்னு
வாதுகள் செய்வோர் வருவீர் மஹ்ஷர்வெயிலதிலே.

பாட்டு.

வேதம்.

17 அஹதான நாயனே அஹமதரை சிருஷ்டித்தாய்
அவ்வொழியில் நின்றுமே அனைத்தையும் படைக்கலானுய்
18 இச்சையாய் நபியமைத்தாய் இறசூலென்ற பேருடனே
லக்ஷத்திருபத் நாலாயிரம் நபிகள்க்கு ஸர் தாராக
19 நபியைப் பொருந்திடுவார் நல்வேதம் மறந்திடுவார்
நானும் இஸ்லாமென்று நாடெங்கும் நடித்திடுவார்
20 உன்மனைபி வேதங்கொண்டு யொருமூன்று வேதமதை
ஸமதான நாயனுந்தான் ஸாற்றினுன் மாற்றினதாய்
21 பொழுது நிலவிருக்குமட்டும் பொங்கும் வேதம்புருக்கான் சட்டம்
பொருந்தும்நபி சட்டமதை பொடுபோக்காய்விட்டதென்ன
22 குருஆனை ஓதிடுவாய் குருமுஹம்மத் உம்மத்தென்பாய்
குருஆனுக்கு மாற்றம்செய்யும் குணமதை எனக்குறையும்

23 வேதத்தை ஓதிடுவாய் வேதாம்பர் உம்மத்தென்பாய்
வேதநபி மார்க்கத்திடை வெருப்பான காரணமேன்

24 வேதத்தையோதுவதும் வேண்டாசெயல் நீக்கவேதான்
வேண்டாத அமலதனை மாண்டாலும் விட்டீர்இல்லை

25 ஓதுவது குருஆனும் உழருவதும் பொய்புரமாம்
எதுவான இடந்தனிலே எடுப்பாயே ஊரார்முதல்

26 சொர்க்கந்தேட கசப்பானாய் தோஜக்கென்றால் பிரியமானாய்
உருத்தான வேதம்விட்டு உன்னாயுளை போக்கலாமா

27 நல்அமலை விட்டோரை நரகமது விட்டிடுமோ
நாம் இல்லாமென்றுசொல்லி நாடெங்கும் திரியலாமா

28 இதுதானோ உமதுபுத்தி இல்லாத்தின் சரஹதனை
கெதியென்ற வேதம்போல் கிஞ்சித்தும் நடந்தாயில்லை

29 ஓதுவதும் குருஆனும் ஒக்த்தொகத்து தொழுவதில்லை
காதினில் நரகம்கேட்டும் கடுகளவும் பயந்தீரில்லை

30 கலாமென்றால் என்னகாணும் கர்த்தோனின் திருவசனம்
கலாம் ஓதிப்பாவம்செய்யும் கருத்ததை எனக்குறையும்

31 வேதத்தை நம்பாதவர் வேதாம்பரை நம்பமாட்டார்
ஆதியை நம்பாதவர் ஆலநபி உம்மத்தாகார்

32 தானுமே யோதிட்டாலும் தகாத செயல்விட்டொழியார்
மானுக்குப் பிணையாய் நின்றமஹ்மூதர் உம்மத்தென்பார்

33 மக்களை யோதவையார் மார்க்கமதைப் படிக்கவையார்
ஹக்கான பாதையிலே கருத்துகொண்டு நடக்கவிடார்

34 துன்யாவைத் தேடும்படி தூண்டுராயே அநுதினமும்
அநியாயத்தை நீக்கிவர அணுவளவும் உரைத்தீரில்லை

35 கல்பது பிரண்டவர்க்கு கலாமதுவும் பொய்யாச்சு
மனமது மாறினோர்க்கு மார்க்கச்சட்டம் பறக்கலாச்சு

36 வேதமென்றால் வழிகாட்டும் விரும்பினோர்க்கு ஒழிகாட்டும்
ஓதியுணர்ந்தவர்கள் ஒழுங்காய்நடக்க ஆமீன்

37 கவுத்துவம்செய் இங்கிலீஷை கல்பொற்று கருதச்சொல்வாய்
வயிற்றுப் பிழைப்புக்காக வழமைத்தமிழ் படிக்கவைப்பாய்

38 மஹத்தான வேதமதை மனமொத்து ஓதவையாய்
அகத்தியம் வேதம்ஓதி ஆகாச்செயல் விட்டீரில்லை

39 ஓதிப்படித்தறியேன் ஓர்மையாய் இருந்தறியேன்
ஆதியின் தொண்டறியா அப்துல்காதிர் உரைக்கலானேன்

விருத்தம்.

நாயன் கிருபையாலே நரகத்ததாப் எடுத்துரைக்க
மாயன் வினைகள்போக்கி மார்க்கச்சட்டம் கருதியோரே
தாய்மாரும் தந்தையோரும் தாஹாநபி ஷரஹதுபோல்
காயம் அழியுமட்டும் கவனிப்பீர் தொழுகை நோம்பை

## பஞ்சவர்ணமெட்டு.

நரகம்

40 எழ்நரகில் தேழ்பாம்பும் எக நமைத்திருக்க
எமாந்து மார்க்கம்விட்டோர் எகிடுவார் நரகமதில்

41 சொல்லுக்கு நரகமாகும் சுகிப்பவர்க்கு தொல்லையாகும்
கல்லைப்போட்டால் உருகிடுமே கடுநரகம் சொல்லிவாரேன்

42 நரகம்சுட்டால் கருகிடுவாய் அரவங்கொட்ட உருகிடுவாய்
சரஹைத்தொட்ட தொழுகைவிட்டோன் சஹிக்கான் நரகத்ததாபு

43 முதல்வாசல் ஹாவியாவாம் முன்னேனின்பயமில்லாரே
விண்ணமது செய்திட்ட வீண்பாவி போய்ப்புகுவான்

44 முனுபிக் குடியிருப்பு முனிவுப்பாவம் செய்தோனும்
இனம்ரெண்டும் வேருகும் இருதயம் நாவாமே

45 இரண்டாம்வாசல் ஜஹீமாகும் இருப்பிடமாம் பாம்புதேள்கள்
கண்டாலும் பயந்திடுவாய் கலாவிடவும் பொருந்திடாதே

46 முஷ்ரிக்கீன்கள் குடி இருப்பாம் முன்சொன்ன நரகமாகும்
பஸ்காரமாய் இணைசெய்கின்ற பாவியும் போயழுவான்

47 மூன்ரும்வாசல் ஸகராகும் முன்னேனின் மார்க்கமதை
வீணனுக்குச் சொல்லப்போனல் வினையாக முடிந்திடுமே

48 நக்ஷத்திரம் நாயனென்பான் அச்சமில்லாப் பாவியாக்கும்
எச்சரிக்கையாகிடாமல் எகிடுவான் நரகவாழ்வில்

49 நாலாம்வாசல் லலாவாகும் நாசிலத்தை நம்பினேரே
நாயனின் தொழுகைவிட்டால் லலாவதனைச் சார்ந்திடுவீர்

50 இபுலீசு குடியிருப்பான் நபிமாரை வெறுத்தவனும்
லலாலுன்மு பீனுக்கும் அலாமத்தைச் சொல்லொண்ணுது

51 ஐந்தாம்வாசல் ஹுத்மாவாம் அறிவுடைய மார்க்கம்விட்டோன்
வெந்துருக நரகமதில் சொந்தமாய் அடையப்போரான்

52 எகூதிக்காபிராகும் தஹாதசெயல் அவனுக்காஹும்
ஆகாத மார்க்கமதை யூகமில்லான் விட்டானில்லை

53 ஆராம்வாசல் ஸயீராகும் பூராவும் சொல்லவென்ருல்
பாராழும் நாயனன்றி பாரிலுள்ளோர் சொல்லொண்ணுது

54 நஸாராவென்ற பாவியாகும் விசுவாசமில்லாதவன்
அசையாத கல்நெஞ்சன் அடையப்போரான் நரகத்ததாப்

55 உலகம்தேடி உருண்டிடாதே நலவுதேட மறந்திடாதே
பெலனும் தேடித்திண்டிடாதே பெரும்பாவி நரகிலாவான்

56 சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் வாய்ப்பழக்கம்
உத்தமர்க்கு நற்பழக்கம் உலகத்தாலை திற்பழக்கம்

57 துக்கமென்னும் பாவம்தேடாய் துன்பம்பட நரகம்தேடாய்
வெட்கமில்லா மானிடரும் வேதம்ஓதி லாபமென்ன

58 நரகம்தேட நாயமுண்டோ அரவங்கொட்ட ஆசையுண்டோ
ஷரஹைவிட மதிதானுச்சோ ஜஹன்னமும் கண்டிடுவாய்
59 காணும் நபிகளிலே கடைசிநபி வேதங்கொண்டும்
மூன்றுவேதம்மாற்றியும் முரடரும் விட்டாரில்லை
60 ஏழாம்வாசல் ஜஹன்னமாகும் காலகாலம் அதாபாகும்
பாழான நரகத்திடை பாவியும் போயழுவான்
61 வேதமுறை தௌபாவிட்டு வீணாக தொழுகைவிட்டோன்
ஆதமக்களென்றுசொல்லி அடையலாமா அதாபதனை
62 பேடியேநீ கெட்டாயே பெரியோனேவல் விட்டாயே
தேடியே நரகம்போய் திகைத்தழுக ஞாயம்உண்டோ
63 நரகத்ததாப் சொல்லொண்ணாது நல்ஷரஹை விட்டதினால்
நரகத்தின் பாம்பதற்கு நல்உடலை இறையாக்காய்
64 நரகத்தின் கொடுமைகளை நல்முஸ்லீம் கேட்டவர்கள்
நல்மார்க்கம் விட்டிடவும் நடுங்கிடுவார் உலகத்திடை
65 அதாபுகள் விதவிதமாய ஆதமக்களனுபவிக்க
அதாபில்கடுசாமே அன்னவர்கள் பசியாகும்
66 வாயாலே கேட்டிடுவார் வல்லஜபானிய்யாக்களிடம்
ஆயிரம் வருஷஞ்சென்று அழுகாதே அமர்ந்திடென்பார்
67 உலகத்திடை மார்க்கம்விட்டாய் அலகைபோல் பாடுபட்டாய்
விலக்கலான கருமங்களை விருப்பமாய் செய்யலானாய்
68 விக்குதலின் ஒஜீபனம் திக்கப்பட கொடுக்கலாகும்
விக்கிக்கொள்ளும தொண்டையினில் வெந்துருகும் தணலாக
69 தண்ணி தண்ணி என்றல்லவோ கண்ணீர்வர அழுதிடுவார்
எண்ணற காச்சிட்ட வெண்ணீர் இன்னைவர்க்கு புகட்டலாகும்
70 முகத்தினிடம் வந்திடவே முகமுழுதும் கருகிப்போகும்
அகத்தில்போய் செயும்வேலை ஆற்றொண்ணா துயரமாமே
71 குடித்த தண்ணீர் உள்ளிலாக இடித்திடித்து வெளியாக்கும்
தடித்தனமாய் மார்க்கம்விட்டோரடையப் போராடிக்கொடுமை
72 சின்னக்குடல் பெரியகுடல் சிநேகிதரே சொல்லக்கேளும்
கண்டகண்டமாய் வெடித்து கழண்டிடுமே துபுர்வழியாய்
73 இவ்வளவு போதாதா இவ்வுலகின் முஸ்லிம்களே
கவ்வும் துன்யாவிட்டல்லவோ கடைபிடிப்பீர் மார்க்கச்சட்டம்
74 எண்ணி எண்ணியொன்றாக இனைத்திட்டேன் நரகத்ததாப்
கவனித்துப்பார்த்தவர்கள் கருதிடார்கள் துன்யாவாசை
75 வாடியே அப்துல்காதிர் வல்லோனைக் கெஞ்சுறதால்
பாடியே அருளைப்பெற பக்தியை கிருபைசெய்வாய்

இஸ்லாத்தின் எடுப்பு.

76 முகத்திலே தாடியில்லை மொட்டைத்தலையாய்த் திரிவார்
யகத்தினில் பயமுமில்லை யுகத்தினில கேட்டதில்லை

77 தாடி சிறைப்பதுவும் தலையில் சில்பாவைப்பதுவும்
தேடியே வைத்தவரை பேடியே சட்டங்காட்டும்

78 இஸ்லாத்தின் எடுப்புமில்லை இறசூலின் நடப்புமில்லை
குஸ்யான ஷரகுலட்டம் குறைவுசெய்ய காரணமேன்

79 பயந்தோர்க்கு மார்க்கமாக்கும் துயர்ந்தோர்க்கு ஷரஹாகும்
நயந்தோர்க்கு கிருபையாக்கும் நாளைமஹ்ஷர் கஷ்ட்டமில்லை

80 துய்தான மார்க்கமென்பான் தொழுகைநோன்பு வணக்கமெடான்
தோஷிதலைதிறந்தலைய துய்யவனுங்கோபமாவான்

81 இஸ்லாமானோன் தலைதிறக்க இப்லீசுக்கு சிம்மாஸனம்
பஸ்காரமாய் கவனியாமல் பாவிக்கிடங்கொடுக்கலாமா

82 இலிங்குகின்ற மார்க்கமாக்கும் இஸ்லாங்களே சொல்லக்கேளும்
அலங்கோலமாக்குமிப்லீஸ் அமைந்திடுவான் தலைமேலே

83 சிரஸது அருஸாகும் சிநேகிதரே சொல்லக்கேளும்
வரிசைநபி மார்க்கத்திலே வருகுதோ ஷிறஸ் திறந்தலைய

84 பொழுது நிலாவிருக்குமட்டும் பொங்கும்வேதம் புருக்கான் சட்டம்
எழுதியவேதம்போல் எல்லோரும் நடக்ககடன்

85 தாடிவைப்பது வாஜிபாகும் தான்வளர்க்க சுன்னத்தாகும்
தாடி சிறைப்பதற்கு தாஹாநபி சட்டங்காட்டும்

86 முகத்திற்கழகு தாடியாகும் அகத்தழகு ஈமானாகும்
யுகத்திற்கழகு மார்க்கமாகும் உலகத்தோரே விடவொண்ணாது

87 இதுதானோ யுமதுதிட்டம் இறசூலுக்குப் பொருத்தமுண்டோ
இவ்வுலகை விட்டகலா இருந்தோரை எனக்குக்காட்டும்

88 புத்தியுள்ளோர்க் கிதுபோதும் மெத்தசொல்ல தேவையில்லை
செத்திறந்து போகுமுன்னே சுத்தமார்க்கம் எடுத்துக்கொள்ளும்

இஸ்லாத்தின் வாஜிபு.

தாய் தகப்பன் கிதுமத்.

89 தாயை வெறுக்கவேண்டாம் தகப்பனை மறக்கவேண்டாம்
நாயனும் பொருக்கானும் நாட்டிலுள்ள முஸ்லீம்களே

90 தாயிக்கிட்டுதான் உண்ணதனியோனின் சொல்லாக்கும்
தாயை மறந்தவனும் நாய்ரூபம் நரகிலாவான்

91 தன் துஆ கபூல்இல்லை தாயிதகப்பன் பொருத்தமன்றி
தாயுடைய பதுவாவைப்போல் தரணியில்வேறொன்றில்லை

92 ஐந்துநேரம் தொழுதிட்டாலும் அழகாய்நோன்பு வைத்திட்டாலும்
பாய்ந்துபேசும் பேயனுக்கு பாக்கிய சுவர்க்கமில்லை

93 தகப்பன் தாய்பொருத்தமன்றி தனியோனும் கிருபைசெய்யான்
அகப்படுவாய் நரகந்தனில் அரவந்தேள் கொட்டிடவே

94 அன்னைதந்தை சொல்லதற்கு விண்ணமது செய்திடாதே
இன்னல்லா நரகமாக்கி எரித்திடுவான் பஸ்பமாக

95 பெண்ஜாதி சொல்லைக்கேட்டு பெற்றதாயை யடித்தோனும்
என்ஜானுடம்புடனே எரிநரகில் வேகப்போறான்

96 தலையணை மந்திரத்தால் தாயையடித்துதைத்தோனும்
புலையனும் நரகம்போக பிடுங்கிடுமே பாம்புதேள்கள்

97 தாய்தகப்பன் பார்த்திருக்க தான்தின்பான் பன்றியைப்போல்
நாய்ரூபம் அவனாகி நரகம்போய்ச் சென்றிடுவான்

98 தாய்மனம் நொந்திடிலும் தாஹாநபி உம்மத்தாஹான்
தனியோனின் கலிமாவும் தவறிடுமே சக்ராத்ததினில்

99 இவ்வுலகில் தாய்தந்தைக்கு இடஞ்சலேதும் செய்தோரும்
இஸ்லாமின் பேரும்போயி எழாநரகம் போய்புகுவான்

100 கனியான முஸ்லீங்களே கலக்கம்வேணடாம் என்பேரில்
கத்தோனின் கிருமையினால் கவனிப்பீறிக்கவியை

101 அல்லாவை பயந்தவர்க்கு எல்லாஞ்சொல்லத்தேவையில்லை
சல்விஸலாத் லாபம்பெற சருகிடாதே மானிடரே

102 பால்உறைய மோராகும் ஆள்அறியஹதீதாகும்
நாள்அறிய நஹ்ஸாகும் நஷ்டத்தை உணர்ந்தானில்லை

103 எல்லார்க்குமுபதேசம் வில்லாவுக்காய்ச் சொல்லிவிட்டேன்
பொல்லாத அப்துல்காதிர் பொருந்திட்டேன் இக்கவியை

## இஸ்லாத்தின்வாஜிபு புருஷனுக்கு பெண்ஜாதி கிதுமத்செய்வது.

104 புருஷனை ஏஷிப்பேசும் பூவையரே சொல்லக்கேளும்
வரிசையாய் புருஷனுக்கு வணங்கிடுவாய் சிரஸன்றி

105 புருஷன்மனம் நொந்திடிலும் பொருந்தானொரு அமலும்
அரிசினிலேறி நின்றோர் அருளியதைக் கேட்டிலையோ

106 என்ஜானுடம்புள்ள வஞ்சியரே சொல்லக்கேளும்
தஞ்சமென்ற புருஷனையும் அஞ்சாமல்பேசலாமா

107 நரகம்தேடும் நாரியரே நாயனைப்பயந்துகொள்ளும்
உரக்கத்திலும் புருஷனையும் உதாசினம் பேஷிடாதே

108 புத்திகுறை பெண்களுக்குபேஷினார் ஹதீததிலே
உத்தமரைப் பகைத்துநீயும் யுருகப்போராய் நரகமதில்

109 குணமாய் இருக்கும்போது கொஞ்சிடுவாய் ராப்பகலாய்
கோபமது வந்தவுடன் கொடுவென்பாய் மகர்துகையை

110 தனியோனுக்கு பொருத்தமில்லை தலாக்கது கேட்டதற்கு
அநியாயமாய் நரகத்திலே அதாபின் அலங்கோலமாம்

## விருந்தின்கொடுமை.

111 ஆடுகோழி குர்மாச்செய்து அகினிபலா சோர்அமைத்து
தேடியே சீமானுக்கு தின்னவும் கொடுக்கலாவாய்

112 இதுவுமே ஸதகா இல்லே இறையோனுக்கு பொருத்தமில்லே
துதியாகமிஸ்கீனுக்கு துப்பரவாய் உணவளிப்பாய்

113 நாடியேமிஸ்கீன்வர நஷ்ட்டமாவான் சீரிப்பேசி
பேடியே நில்லென்று தான்பிரியமானேர்க் குணவழிப்பான்

114 பள்ளியிலும் பார்த்தும்போவாய் பசியாறவே மினவமாட்டாய்
அல்லாவீட்டில் விருந்திருக்க அள்ளி உங்கபோக ஹராம்

115 தெள்ளிய முஸ்லீம் என்பாய் தினந்தினமும் தொழுதுகொள்வாய்
லில்லாவீட்டில் மிஸ்கீன்நிற்க ரெம்பவயிற் தின்ன ஹராம்

116 உரட்டிசோர் கேட்டவுடன் சுருட்டி உயிர்போகுதய்யா
மெரட்டியே பேசிநீயும் வெரட்டுராயே மிஸ்கீன்களே

117 காசொன்று கேட்டவுடன் கடுங்கோபமாகச்சீறி
ஏசுராயே பேசுருயே ஏகனும்கோபமாக

118 யாரு கொடுத்தபணம் எங்கிருந்து வந்தபணம்
பாராளும் நாயன் அன்றி பணங்கொடுத்தார் சொல்லும்

119 பலிக்காக சோரும் ஈயாய் பாவம்போக தௌபாசெய்யாய்
துஷியாகத்தொழுகை நோன்பு துன்பம்தேட விட்டதென்ன

120 இன்சுஜின் நரகத்திற்கு இறையோ நமைத்திருக்க
இருமூண்டும் நேரம்விட்டோர் இருள்நரகம் போய்புகுவார்

121 குருடாக எழுப்பப்படும் குருனுக்கு மாத்தம்செய்தோர்
குதாயவனின் சொல்லதற்கு கொடுமைசெய்த பாவியராம்

122 ஆலத்தோர் கூடிட்டாலும் அருவாஹெல்லாம் உரைத்திட்டாலும்
அகத்தில் பொருந்தி நீயும் அரைக்காசும் ஈயமாட்டாய்

123 என்னத்தைச் சொல்லப்போறேன் எதை எடுத்துரைக்கப்போறேன்
மன்னவனுக்கஞ்சாதோன் மனுஷனுக்கும் அஞ்சுவானே

124 ஏகனின் உதிப்பாலே எடுததுரைத்தேன் இக்கவியை
ஏகனிடம் என்தனுக்கு எப்பிழையும் பொருக்கத்தேடும்

ஜினு.

விருத்தம்

ஜினுசெய்து கேட்டோர்கள் ஷைத்தானின் கூட்டமாவார்
பனுவான செயலதினல் பலிஹுத்து ரெம்பவாமே
கினுயத்து குறைந்துபோம் கல்புகெட்ட பாவியர்க்கு
மனமார தௌபாச்செய்து மானிலத்தில் ஜினுவைப்போக்கும்

பாட்டு.

125 பொய்யதை போக்கினவர் பொல்லாஜினு நீக்கினவர்
மெய்யோனிடந்தனிலே மேலான பதவிபெற்றோர்

126 ஜினுச்செய்த பேர்களுமே செத்தபின்பு மஹ்ஷரிலே
குனுவான செயலதினல் குதாயவனும் வெறுத்திடுவான்

127 குட்டிகலைக்கவேண்டாம் கொடுமைசெய்த பாவியரே
அட்டியில்லா குட்டியது அவள்பேரில் வழக்குரைக்கும்

128 கள்ளுகுடிப்பதுவும் காமவித்தை செய்வதுவும்
பள்ளுபறையரைப்போல் பாரில் ஈமான்கெடுக்கலானாய்

129 ஹராமான கள்ளருந்த கசடனும் பயந்தானில்லை
ஷராபன் தஹூராத்தான் தனியோன் கொடுப்பதுண்டோ

130 பாவமான இச்செயலை பார்தனிலே செய்வோரைத்தான்
நானிலத்தில் யாபேர்களும் நாயனிடம் பதுவாச்செய்வார்

131 நல்லவூரில் ஒரிஜினாவும் நடக்குமானால் நகரத்தோரே
நாயனின் கோபத்தாலே நாட்டோர்க்கு கஷ்ட்டமாமே

132 மாயனுட ஊசாட்டத்தால் மானிலத்தில் ஜானியானாய்
பேயனே பனாவாக்கும் பெற்றிட்டாய் நரகவாழ்வு

133 ஜினாவதனை நீக்கிடாத சிநேகிதரைச் சொல்லக்கேளும்
பனாவாகி படைத்தோனிடம் பதவியை இழந்திடுவாய்

134 ஜினாவதுவும் செய்யவேண்டாம் சேகரமாய்ப்பழக்க வேண்டாம்
பனாவான செயலினாலே பணங்காசு பறக்குமடா

135 குனாச்செய்து கெட்டவனே கொடுத்தமுதல் விட்டவனே
பனாவான செயலினாலே பாவியென பேருபட்டாய்

136 பாவிபேர் தொட்டிடாதே பயங்காம்பர் உம்மத்தென்றால்
ஹாவியா நரகம்நீக்க ஆலத்தில் ஜினாவைப்போக்கும்

137 இப்லீசுட மக்களுக்கு இச்செயலும் வழமையாமே
இறையோனைகொண்டஞ்சாதவர் இச்செயலைவிட்டானில்லை

138 முஹம்மதுட உம்மத்தோரே ஜினாவைவிட்டு தௌபாச்செய்யும்
ஹிம்மத்தில்லா இஸ்லாமுக்கு என்னசொல்லி யாவதென்ன

139 அல்லாவே எந்தனையும் ஆலநபிச் சட்டம்போல்
ஜினாவைவிட்டு நீங்கினோரின் சேகரத்திலாக்கிவிடு

140 பாடினேன் இக்கவியைபாவி அப்துல்காதிரென்போன்
கேடுகேட்ட ஜினாவதுக்கு கிருபையாழா விட்டிடாதே

விருத்தம்.

நானிலத்தோரீடேர கதிகள்முற்ற நவிலானமார்க்கமதை
நன்றாய்க்கூற
வானிடத்தே யிருந்தநபி யுலகிலாகி வழமான மார்க்கமதை
வரைந்திட்டாரே
சலமென்று எடுத்தோர்கள் நல்முஸ்லீம் தன்னோடும்
தரணியை விட்டுநீங்க தனியவா துணைச்செய்வாயே,

முழுக்கு பாட்டு.
அம்மானைக் கண்ணிகள்.

141 புவியினில் இஸ்லாங்களே பொழுது தயமுழுக்காளியும்
போக்கிடாத பேர்களுக்கு புவியினில் லஙுனத்தாமே

142 வேண்டுசெயல் செய்துவிட்டு வேலையெல்லாம் பார்த்துகெட்டு
தூண்டும் பசிவந்தவுடன் துடக்நீக்க நேரம்பார்ப்பாய்

143 நாயனும் ஒப்பவில்லை நல்மார்க்கம் சொல்லவில்லை
மாயனிபுலீசை நீக்கி மார்க்கம் போல் குளித்து தொழும்

144 கிழக்வெளுக்க முளித்தெவரும் கிருபை தேட இஸ்லாங்களே
அசுத்தங்கள் நீக்கியே தான் அழகாய் இமாமில் சேரும்

145 பாவமெனருல் யுகந்திடுவாய் பாரினில் தேடியோரே
ஹாவியா நரகத்ததாப் கடுசதனை பயந்தீரில்லை

146 ஒலுமுழுக்கு பேணுதால் உன்வணக்கம் குறையலாச்சு
இல்மைப்படித்தரியாவிடில் இஸ்லாமது பொருந்துமோ சொல்

147 முழுக்கொலுவு பேணுதோர் முத்திபெற மார்க்கமெடார்
பழுதாக்கி போட்டவரை பாரில் இஸ்லாமென்பதென்ன

148 பர்லு சுன்னத் பேணுதோர் பாரினிலெங்க வந்தீர்
அருள்பெறவே மார்க்கம்பாரா ஆயுளை போக்குவதேன்

149 தண்ணிதொட்டு தடவிடுவான் தாடி கோதி கழுவமாட்டாய்
எண்ணி சுன்னத்பேணமாட்டாய் எங்கவந்தாய் முஸ்லீமென்று

150 சுன்னத்ஜமாத்தென்றுரைப்பாய் சுன்னத்தொன்றும் பேணமாட்டாய்
என்னத்துக்கு வந்தோமென்று எண்ணியே பார்க்கமாட்டாய்

151 நபியுடைய சுன்னத் பேணுர் நாட்டிற்கொப்ப வேலமிட்டாய்
ஹபீபுநபி உம்மத்தைப்போல் யசடனுமே பேரமைத்தான்

152 சுன்னத்தைப் பேணுதவர் துன்யாவேஷம் பூட்டியென்ன
அநியாயத்தை கேள்கப்போனுல் அழுது சலிக்கலாவார்

153 தொழுகைவிட்டோன் தீனுக்கெட்டாய் துன்யாவுக்கு பாடுபட்டான்
தூதர் நபியும்மத்தென்று துஸ்மனும் உரைக்கலானுர் [கெட்டாய்

154 பார்தனிலே தொழுகைவிட்டோன் படைத்தோனை பகைத்து
யாருடைய படைப்பென்று யவனுமே சொல்லப்போரான்

155 ஒலுவுடைய பர்லுபேணுர் தழுவியே மார்க்கம் காணுர்
நலுவியே செய்கையாலே நாட்டோரும் ஏலலாவார்

156 நூற்றிமுப்பத் பருலதுவும் எற்றியவர் அறியாமலே
காற்றுய் பறக்கவிட்ட காரணம் எனக்குறையும்

157 ஐந்தும் ஆறும் அறியாமலே ஆலத்தை கவ்வியோரே
வஞ்சகரே மஹ்ஷருக்கு வருவதுனக்கழகோ

158 மால்தேட வட்டியெடாய் மவுத்தளவும் பாவம்விடாய்
நாளோடி தொழுகைவிட நரகமது விட்டிடுமோ

159 காசுபணம் பெரிதாமோ கன்னிமக்கள் தான் வருமோ
ஆசைமுங்கி பாவம் செய்ய அல்லாவை பயந்தீரில்லை

160 ஏழை புத்தி யுலகம்தேடி வேளை வேளை தொழுகைவிட்டாய்
நாளை மஹ்ஷர் கொடுமைக்குத்தான் நாயனிடம் முளிக்கப்போராய்

161 மஹ்ஷரின் கொடுமைகளை மஹ்மூதரும்மத்தோர்க்கு
அகற்றியே கிருபை செய்து அவ்வேளை யருள்புரிவாய்

162 குருமுஹமத் மார்க்கமதை குறையாமல் எடுப்பவர்க்கு
அருமையான முழுக்கின் கவி அப்துல் காதிர் உரைக்கலானேன்

விருத்தம்.

ஆதிசொல் தட்டிபாவி அஜாஜீலும் இப்லீஸானன்
ஓதுதல் ரெம்பவாக்கும் ஒருமித்துத் தொழுதான் பாவி
யேதுவும் பலன் கொடாமல் ஏகனின் கோபத்தாலே
வாதெனும் தர்க்கம் பேஸ வம்பனும் ஸஹுனத்தானன்

பாட்டு.

163 இருசஜ்தா செய்யாததால் இபுலீஸும் காபரானன்
மருநிலத்திலறியாத மாயமென்ன இஸ்லாமிய்யா

164 விண்டுரைக்கக் கேட்டவர்கள் விடவொண்ணாது ஐந்து நேரம்
சண்டாளன் சஜ்தாவிட்டான் கொண்டானே நரக வாழ்வு

165 மூன்றுபத்து நால் சஜ்தா முழுதும் விட்டாய் நாவொன்றுக்கு
யீனமான துன்யாத்தேட இஸ்லாமானோர் சட்டங் காட்டும்

166 வீணுக்கமைக்கவில்லை விளையாட்டுக்காய் படைக்கவில்லை
வீணுடைய துன்யாவாசை வினையதுனல் மோஸமாகும்

167 ஆதம்மக்கள் சஜ்தா ஆயத்தோதியே சஜ்தாச்செய்ய
நீதங்கெட்ட இப்லீஸவன் நிர்மூடன் அழுதுபோறான்

168 சஜ்தாச்செய்ய ஆதமக்கள் சந்தோஷ சொர்க்மாச்சு
சண்டாளனன் மருத்ததாலே ஸதாகாலம் நரகமாச்சு

169 மடத்தனமாய் நடக்கின்றோன் மார்க்கமதை பேணமாட்டான்
கிடைத்த பலனிது தானென்று கீழ்நரகம் போய்ப்புகுவான்

170 நரகத்திடை போவதிலும் நாஸமாய் போவதேற்றம்
அரவத்தேள் கடித்தவுடன் அக்கினியாலுருகிடுவான்

171 நரகத்தை நினைத்தவுடன் நடுங்குதே ஈரல்குலை
ஷரகைவிட்டுத் திரிவதிலும் சாவதுவும் சிலாக்யமாமே

172 பொழுதுடைய சூட்டையுமே புவியினில் பொருக்கொணுதோன்
கழுதையைப்போல் மஹ்ஷரிலே கலங்கி முழிக்கப்போராய்

173 இவ்வுலகில் பொழுதின் சூடு· எட்டினிலொன்றுமே
அவ்வுலகில் எட்டுப்பங்கை யார் பொருப்பார் மார்க்கம் விட்டால்

174 இம்மட்டும் போதுமேதான் இவ்வுலகம் கவ்வினோரே
தெ்ன்பட்டாய் உலகத்திடை தினந்தினமும் தொழுகைவிட

175 தன்கூடப் பிறந்தோனை தழுவி இஸ்லாமாக்கிடாமல்
அன்னியனைச் சேர்த்துக்கொள்ள அலைவதுனக்கழகோ

176 ஒக்கப் பிறந்தோனும் உனக்குப் பகையாழனும்
ஹக்கனைப் பயந்து நீதான் அகற்றிடுவாய் மல்ஊனை

177 துஷ்மனை யுரவாக்கி தொழுகை நோன்பை வெருப்பாக்கி
இஸ்மதுவும் மாறிப்போயி எரி நரகம் போவதென்ன

இஸ்லாம்.

விருத்தம்.

இஸ்லாத்தில் பிறந்து இஸ்லாத்தில் வளர்ந்து இஸ்லாத்தையறியா
[மலிருப்பதேனோ
அஸலான முஹம்மதர் ஹதீதையும் கேட்டு நீ அமல்செய்யா புதுமை
[யென்ன
வஸயான இப்லீஸின் வலையிலகப்பட்டுநீ வல்லோனை மறப்பதென்ன
வம்பாக துனியாவில் வயதெல்லாம் போக்கியே வாழ்வோர்க்கு
[மகிமையுண்டோ.

178 இஸ்லாமென்றால் ரெம்ப ரெம்ப எல்லா அமல் கொஞ்சம் கொஞ்சம்
இஸ்லாத்தில் சிலபேர்கள் எடுப்பாரே நல் அமலை
179 இஸ்லாத்தின் எடுப்புமில்லை இறசூலின் நடப்புமில்லை
இஸ்லாம்போல் நடககாமல் ஏகப்போரான் நரகத்திடை
180 சொல்லுருதி ஈமானுக்கும் செயலுருதி இஸ்லாமாக்கும்
இல்லதி விரண்டுமில்லை இவனுமே இஸ்லாமாகான்
181 இஸ்லாமென்று தானுரைப்பார் இறசூலின் உம்மத்தென்பார்
துஷ்மனிபுலீசுடைய சொல்போலே தான் நடப்பான்
182 இஸ்லாத்திலிருப்பவன்போல் எல்லா வேஷம் போட்டுக் கொள்வான்
இஸ்லாத்தின் சட்டதிட்டம் எடுத்துமே நடக்கானய்யா
183 இஸலாத்தில் பிறந்தாலென்ன இவ்வுலகில் வாழ்ந்தாலென்ன
இஸ்லாம்போல் நடக்காதவன் எங்கெ வந்தான் மோசக்காரன்
184 சொல்லைப்பார்த்தால் சுல்தானுச்சு செயலைப்பார்த்தால் ஷைத்தானுச்சு
இல்லையப்பா சொர்க்கம்போச்சு இஸ்லாத்துக்கு மாற்றம் செய்ய
185 ரோஜுமீதாக்கதிலே ஹாஜரான கல்குகலே
ராஜனும் என்ன கேட்டான் தாஜ்முஹ்ம்மத் உம்மத்தோரே
186 அலஸ்து பிறப்பிக்கென்றும் அனைவோரிடம் கேட்கும்போது
சவிஸ்தமும் படைத்த நாயன் சர்வ வல்லோன் நீயென்றாயே
187 காலூ பலாவென்றல்லவோ கர்த்தோனிடம் விடையழித்து
தாலத்தில் மறந்துவிட்ட தவருக்குத்தான் என்ன சொல்வாய்
188 அரூபியாய் இருக்கும்போது அல்லாவுக்கு சஜ்தாச்செய்து
சுரூபியாய் வந்த பின்பு தொழுகை யெடா காரணம் சொல்
189 மணியாலுனைப்படைத்தான் மறைவாக கர்ப்பத்திலே
தனியோனும் செவ்வையாக தாலத்திடை வெளியாக்கினன்
190 பதினாலு பங்குடனே படைத்தானே இன்ஷானென்று
அதிகாரத்தை உனக்கழிக்க ஆலாபி உம்மத்தானாய்

191 சும்மா அனுப்பவில்லை சுமனைபோல் திரியச்சொல்லி
ஹிம்மத்தாக இஸ்லாம் சட்டம் எடுத்துக்கொள்ளும் நன்றாகவே

192 கருவாயமைத்திட்டான் கர்த்தோனுபமில் என்னசெய்தான்
அர்வாஹிலே உருதிவாங்கி ஆதம் வழி அனுப்பினனே

193 மக்கத்தில் பிறந்த நபி மதீனத்தில் அமைந்த நபி
ஹக்கி ரசூல் கட்டளையில் கடுகளவும் பிசகிடாதே

194 இறசூலின் சொல்லைபாரும் இமாம்களின் செயலைபாரும்
பெரியோரின் நடப்புபோலே பேணியே நடவுமய்யா

195 கலிமாவை உண்மைகொண்டு நல்பொத்த மார்க்கத்தோர்க்கு
அலிமாமனுர் கிருபை ஆனந்தம் பொங்கிடுமே

196 வேதமார்க்கம் விதிப்படியே வேண்டும் செயல் செய்யாதவர்
போதமார்க்க இபுலீஸின் பொல்லாத கூட்டமாமே

197 ஊரார் சிரிப்பாரென்று உலகுக்கொப்ப வேஷமிட்டு
யாருக்கோ மார்க்கமென்று அகற்றலானாய் வயசளவும்

198 இஸ்லாத்தைக் கொண்டுவந்த இறசூலின் மார்க்கமதை
சரிகியே விட்டுக்கெட்ட சண்டாளர்க் கென்ன சொல்வேன்

199 நபிகள் சொன்ன சொற்படியே நாம் செய்து நடப்போமானல்
ஹபீபுநபி உம்மத்தைப்போல் ஹக்கனும் ரூஹழைப்பான்

200 இம்மட்டும் போதுமேதான் இஸ்லாமான ஆண் பெண்களே
என்பேரில் கோபம் வேண்டாம் எடுத்துரைத்தேன் அப்துல்காதிர்.

விருத்தம்.

முன்னவா உன் கிருபை முத்துநபி உம்மகிமை
மன்னவா உன்னருளும் மஹ்மூதர் மார்க்கத்தோர்க்கு
கண்ணாரக்கண்டு நல்பொத்து தொழுதவரை
அன்னை தந்தைபோலே ஆதரிப்பாய் மஹ்ஷரிலே

இதுவும்.

கார்குடை நபியுல்லாவை கருத்தினிலிருத்தி வாழ
நேர்வழி பெறவே தீனேர் நிகழ்த்திடும் நீதியைத்தான்
ஊருள்ளோர் ஒன்றாய்க்கூடி ஒருவனின் வேதம்போலே
பாருள்ளோர் தொழுதுமீழ பாக்கியம் பெருவார்தாமே

இதுவும்.

மண்டலமெல்லாம் புகழ மாணிடரும் மகிழ
கண்டவர்களுன்னை கடுகளவும் விட்டொழியார்
கொண்டாடியே உன்னை கூர்க்கவே அறிந்தவற்கு
மண்டாடும் நபியவரின் மஹ்ஷரிடன் கிருபையாமே.

பாட்டு. தொழுகை.

201 இஸ்லாத்தின் பேரமைத்து இருமூன்றும் நேரம் தொழாய்
இஸ்லாம்போல் நடக்காதவர் இவ்வுலகில் வேலையென்ன

202 தொழுகை தொழாதவரே தொல்லுலகிலிருக்கொண்ணாது
பழுதாக்கி போட்டவரே படைத்தோனின் கிஜ்கை தின்னாய்

203 தொழுகையிலும் சிறந்த தவம் தோன்றவில்லை பார்த்தமட்டும்
எழுதிய வேதம்போல் எங்கான் தொழுதீரில்லை

204 நுபுவ்வத்நபி மார்க்கத்திலே நூற்றுக்கு பத்துமில்லை
ஹபீபு நபி உம்மத்தென்பாய் ஐந்துநேரம் தொழுதீரில்லை

205 நபியும் நடந்ததுபோல் நபிஸஹபா தொழுததுபோல்
எவனொருவன் அமலில்லையோ இறசூலின் உம்மத்தாகான்

206 வேஷம்பார்த்தால் இஸ்லாமிய்யா வேண்டசெயல் ஷைத்தானிய்யா
ஆசைபார்த்தால் நப்ஸானிய்யா யாருமே தடராதைய்யா

207 ஆதமக்கள் முன்வேதத்தில் ஐம்பதொகத் தொழுகையாமே
வேதமதைபொருந்தியோரும் வேணடும் சலாத் விட்டாரில்லை

208 ஆலநபி கிருபையாமே ஐம்பதொகத் தைந் தொக்கதாய்
மேலோனிடம் கேட்டுத்தர மெய்தானென்று தொழுதீரில்லை

209 நபியுல்லா கேட்டதினால் நாற்பத்தைந்து நேரம் நீக்கி
ஆலநபி வாக்குக்காக அய்ந்தொகதை பருலாக்கினான்

210 நூற்றுககு ஒன்றுகும் நுனுக்கமான துன்யாவாழ்வு
ஊற்றுத்தண்ணீர சோற்றுக்காக ஒன்மார்க்கம் தொழுகைவிட்டாய்

211 மரமும் மலை வணங்கும்போது மானிடரும் வணங்கொண்ணாதா
ஆடு மாடு வணஙகும்போது ஆதமக்கள் வணங்காதேது

212 குரு ஆனைப்பார்த்தீரில்லை குருமுஹமத் சட்டமதை
அறவே நீ விட்டதினால் அனல் நரகம் விட்டிடுமோ

213 வீணுக்கமைக்கவில்லை விளையாட்டுக்காய்ப் படைக்கவில்லை
ஈனமாய் துன்யாத்தேடி இருமூன்றும் நேரம்விட்டாய்

214 இன்ஸ ஜின் படைத்தானும் இறையோனை வணங்குதற்காய்
மனுஷனும் வணங்காத மதிமோஸம் யானறியேன்

215 மூன்றுபத்துரெண்டுபரல் முறையாக தொழுதெவரும்
முன்செய்த பாவம்போக முதலோனிடங் கெஞ்சிக்கேளும்

216 மண்ணுக்குள் போகும்முன்னே மார்க்கமதை எடுக்காதோரெ
பின்னுக்கு மஹ்ஷரீலே பெரியோனும் விடவுமாட்டான்

217 தாலத்திடையூட்டை நம்பி ஆலத்திடை தொழுகை விட்டாய்
பாலத்திடையேறிப் போய்பற்றிடுவாய் நரகமதை

218 கபுரை மறந்திட்டாய் கர்த்தோனை வெருத்திட்டாய்
சபுருடன் தொழுகையெடா சண்டாளா எங்கேவந்தாய்

219 ஹாவியா நரகத்துக்கு அஞ்சியே பயந்தாயில்லை
பாவியும் அதாபதனை படும்போது உணர்ந்திடுவான்

விருத்தம்.

கடுமையாய் நரகம் தேடி கலாவிட கருத்துமென்ன [னென்ன
மடமயாய் துன்யாத்தேடி மஹத்தான தொழுகைவிட மதிதா
அடுமையே பேருநீங்கி அனல் நரகம் வீடு புக்க அறிவுமென்ன
மிடுமை நோயுற்றபோதுமேலவன் தொழுகை விடாய் மேன்மை
[நபியும்மத்தோரே

பாட்டு.

220 கலாவும் விட்டவரே கபுரிலதாப் பட்டபின்பு
கடுமையான மஹ்ஷரிலே கொடுமை அதாபடைவாய்

221 கலாவும் இருக்கமாட்டான் கர்த்தோனைக்கொண்டஞ்சாதவன்
கடல்சாடுக்கம் மஹ்ஷரிலே கல்பார கண்டிடுவான்

222 ஆளுக்கொப்பத்தொழுதவரே ஆழ நரகத்திலே
ஊழி அதாபுமெதான் உனக்குத்தான் கொடுக்கப்போறுன்

223 கோழி கொத்தி தொழுகையேரா கோலமான அமலுஞ்சேரா
ஆலத்திலே கல்பொத்து தொழா அநியாயம் என்ன சொல்வாய்

224 வைவினேடை படைத்தாளும் வணங்காத இல்லாமுக்கு
கைலிவேஷ்ட்டி கட்டி நீதா காலத்தைக் கடத்தலாமா

225 ஒருவனே வனங்காமல் உன் ஆயுளை போக்கியோனே
மருநாள் மஹ்ஷரிலே மயங்கி முழிககப்போராய்

226 காலத்தின் கொடுமையிலும் கற்றறிந்தோர் கொடுமை பெரிது
ஆலத்தில் தொழுகை விட்டோன் ஆடு கோழி அறுக்கொன்னுது

விருத்தம்.

பஞ்சமாபாவம் நீக்க படைத்தோனின் சட்டம்பாரும்
அஞ்சியே இமாமுக்கேக ஆலநபி ஷரஹைச்சேரும்
கொஞ்சியே இமாமத்தாளுல் கொற்றவன் பொருத்தமாகான்
ஒஞ்சியே இமாமத்தாளுல் உடையவன் பொருத்தமாமே

பாட்டு.

227 கலாவிட்டு தொழுபவரின் கனவான்களே இமாமத்தையும்
கடுகளவும் துயரவேண்டாம் கடத்தியே நீக்கிவிடு

228 சாஹிப் தர்த்தீப் சட்டமதை சரியொத்து பாத்தீரில்லை
ஏகிட்டாய் இமாமத்துக்கு இருக்கும் கலா தொழுகாதோரும்

229 ஹராமைப்போக்கவேண்டும் போராமை நீக்கவேண்டும்
கூரான மார்க்கச்சட்டம் குறையாதோர் இமாமத்தாவார்

230 வணங்கும் தொழுகைவிட்டோரை இணங்கியே பேசலாகா
மணமொத்து வட்டிவாங்கும் மாபாவியின் வீட்டிலாகாய்

231 ஜாணியின் வீட்டிலாக கேணியில் விழுவதுற்றம்
வாணிபத்தில் வட்டிவாங்க வல்லோனும் சொல்லவில்லை

232 இம்மூன்றும் நீக்கினேரே இமாமத்துக்கு முன்பிலாகும்
தென்பட்டதை செய்தெவரும் சேர்த்து தொழ இமாமத்தாகாய்

233 மார்க்கத்தை பேணுதோர் மணமொத்து இமாமத்தாகாய்
தீர்க்கமாய்க் கண்டீரோ தீனபியின் சட்டமதில்

234 கபுரையும் மறந்துவிட்டு கல்பொத்து பாவம்செய்து
கர்த்தோனின் அருள்பெறவும் கடுகளவும் நினைக்கலாமோ

235 தொழுகையை பத்திளொன்று துய்யோனிடம் கேட்ட நபி
தொழுகை தொழாதவரின் தோஷமது நரகமாமே

236 தோஷி இபுலீஸுடைய துன்யாவாசை நம்பியல்லோ
தொழுகைவிட்டீர் இவ்வுலகில் துய்யோனிடம் என்ன சொல்வாய்

237 இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்த ஈன்
ஏகானை தொழுகாமலும் யாரிடம் உதவி கேள்பாய்

238 இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீமென்று சொல்வினேரே
இவ்வுலகில் வணங்காமல் இறையோனிடம் கேள்ப்பதென்ன

239 தொழுகைக்கு ஷௌக்கில்லயோ துய்யோனிடம் என்னசொல்வாய்
வையகத்தை விட்டுப்போக வருமௌத்து விட்டிடுமோ

240 மௌத்துதான் வாராதோ சொல் மஹ்ஷருக்கு சேராயோ நீ
மன்னவனும் கேள்க்கும்போது மருமொழி என்ன சொல்வாய்

241 குஷ்யாக தொழுகை தொழான் குணக்களை விட்டொழியான்
பஷ்காரமாய் தொழுகை தொழா பாவியே எங்கே போவாய்

242 வருஜையான தொழுகைவிட்டாய் வருமௌத்து உனைவிடுமோ
பிரியமான மனைவி மக்கள் பின்துடரா அனுப்பிடுவார்

243 சண்டாளனுக் சலாமுமில்லை ஸலவாத்தின் மகிமையில்லை
கண்டாலும் முசாபாயில்லை காத்திம் நபி உம்மத்தோரே

244 பணம்வந்தால் பகைத்திடுவாய் பந்துக்களை வெறுத்திடுவாய்
குணமென்ற தொழுகைவிட குருஆனில் வருகுதோ சொல்

விருத்தம்.

எட்டாம் நாள் தொழுகையதை எடுக்காதே இஸ்லாம்களே
விட்டுமே ஜும்ஆவுக்கு விருப்பமாய் வருவதென்ன
மட்டிகள் மனம்போல மார்க்கத்தில் தொழுகையுண்டோ
சுட்டியும் தொழுகை விட்டு துடர்ந்திட்டான் நரகவாழ்வு

245 எட்டுநாளைக் கொருவிடுத்தம் எதற்காக தொழுகவாராய்
கெட்டோரே நேரம் நேரம் கிருபையோனை தொழுதீரில்லை

246 எந்த தலீலைக்கொண்டு எடுத்திட்டீர் ஜும்ஆ மட்டும்
வந்த தலீலதையும் வாயாலெனக்குரையும்

247 ஆகாதமார்க்கத்தோற்கு ஆதிவாரம் ஒரு நேரம்
யூகமான இஸ்லாங்களே ஒன் மார்க்கம் ஐந்துநேரம்

248 ஊரார் சிரிப்பாரென்று ஓடிவாராய் வெள்ளி வெள்ளி
பாராளும் நாயனுட பயமதுவும் உமக்கில்லையோ

249 வக்தைந்தும் குறித்திட்டான் வல்லநபி உம்மத்தோரே
பக்தறிவால் பார்த்தறியா பாவமதும் விட்டிடுமோ

250 தருத்தின்மேலிருந்திட்டாலும் தனியோனை மறந்திடாதே
அகற்றியே இஸ்லாமென்றால் யார்தான் பொருந்தப்போறார்
251 நாற்பது நேரம்விட்டாய் நல்முஸ்லீம் பேரும் தொட்டாய்
பார்ப்போர்க்கு இஸ்லாம் வேஷம் பாரினில் பூட்டியென்ன
252 நபியும் நடந்ததுபோல் நல்தொழுகை எடாதோரே
ஹபீபுநபி உம்மத்தென்க அவருக்கு ஹயாவில்லையோ
253 இஸ்லாமின் வேஷமிட்டாய் இருமூன்றும் நேரம்விட்டாய்
குஃயான உம்மத்துடன் கூட்டத்தில் கலக்கலாமா
254 நித்தமைந்து நேரம்தொழா நீரும் ஜும்ஆ தொழுதுமென்ன
முத்திபெற நாட்டம்வைத்தால் முறைபோல் வணங்கவேண்டும்
255 மாயமான துன்யாதேடி மாத்தானைப்போல் தொழுகைவிட்டாய்
தாயிம்காயிமாய்த்தொழான் தாஹாநபி உம்மத்தென்பாய்
256 இவ்வுலகிலுனைப்படைத்து இறையோனைத் தொழுக சொன்னான்
சொல்லெல்லாம் சூது மோசம் சுயேக்ஷயாய் எடுத்துக்கொண்டாய்
257 குபுருக்கும் இஸ்லாத்திடை குதாயவனின் தொழுகையாகும்
கபூர்றஹீம் தொழுகை தொழா கருத்தை எனக்குறையும்
258 அற்பமான துன்யாத்தேடி ஆதமக்கள் தொழுதாரில்லை
எப்போதும் மௌத்தில்லாமல் இருந்தோரை எனக்குக்காட்டும்
259 அரசனும் அன்றுக்கேள்பான் ஹக்கனும் பின்பு கேள்க
வரிசைநபி வாக்குக்காக வல்லவன் பொருக்குறானே
260 வணக்கம்விட ஒரு வஸ்தும் வந்ததில்லை உலகத்திற்கு
சுணங்காமலய்ந்து நேரம் சுருக்காய்த் தொழுதுகொள்ளும்
261 மறையோதி தொழுகைவிட்டாய் மஹ்ஷரைப் பயந்தீரில்லை
இறையோனுக்கு மோசக்காரன் இப்லீஸானன்றி வேறொன்றில்லை
262 இத்தனையும்போதாதா இஸ்லாமானோர் தொழுதுவர
குத்தம் நீக்கி நடப்போர்க்கு குறிப்பொன்றும் சொல்லவேண்டாம்

விருத்தம்.

ஆலநபி நின்றிடத்தில் ஆலிம்கள் நிற்கவேண்டும்
சீலமுடன் தொழுதோர்கள் சிறப்பாக ஓதவேண்டும்
வேளை வேளை தொழுகாதவர் வேண்டாமே மிம்பர் ஏற
ஆலத்திலறியாதோர்க்கு அனல் நரகம் அதாபாமே.

பாட்டு

263 நல்லோரின் வேஷமிட்டு நாற்பது நேரம் விட்டோர்
முல்லாவென்றா மிம்பர் ஏற முஸ்லீம்கள் பொருந்தலாமா
264 வேளை வேளை தொழுகையெட்டாய் நீளமான சட்டையிட்டாய்
ஆலத்திடை மிம்பர் ஏறி ஆகமதை ஓதலாமா
265 தாடி வளர்க்காராம் தலப்பாவும் கட்டாராம்
ஆடி ஆடி குத்பா ஓத ஆலநபி சட்டம்காட்டும்

266 பிசகான கருமம்செய்வார் பெரியமல்லி என்றுறைப்பார்
உசக்கேறி குத்பா ஓத உனக்குமே பயமில்லையோ

267 மஹல்லமும் பார்த்திடுவாய் மார்க்கத்துக்கு மோசம் செய்வாய்
இல்லல்லா தொழுகையெடார் ஏகிடுவார் இமாமத்துக்கு

268 வாங்குவது வட்டியாகும் தூங்குவது கெட்டியாக்கும்
தாங்குவது மட்டியாக்கும் தகாத செயல் ரெட்டிப்பாகும்

269 தெள்பாயில்லான் இஸ்லாமில்லை தக்வாயில்லான் மூமின் இல்லை
அமலில்லான் ஆஷிக்கில்லை ஆகத்தின் சொல்லைப்பாரும்

270 தம்பிரானின் ரிஜகைத்தின்று தனியோனின் தொழுகை தொழாய்
கெம்பிரமாய் குத்பா ஓத தம்பி நீ போகவேண்டாம்

271 நரகத்தை பயந்தாயில்லை நாகசர்ப்பம் பிடுங்கும்போது
தாகம் நீ பொருக்காமல் தலைவெடிக்க கதரப்போராய்

272 நல்லாயிருந்தால் நாயனில்லை நஷ்ட்டம் வந்தால் அல்லா என்பாய்
இல்லல்லா ஷரகெடுக்காய் இதுதானோ உமது புத்தி

273 விபாஸல் மூமினீன் குஹுபுல் காபிரீன்
ஆபர்தாய் இருக்கும்போது அல்லாவை பயந்திடுவாய்

274 ஸாஹிப்தர்த்தீப் தொழுகையாக்கும் தகாதசெயல் செய்யலாமா
வாஹிதாயிருக்கும் ரப்பை வணங்காத காரணம் சொல்

275 அம்மாரா நப்ஸொடுக்கி அஞ்சுநேரம் தொழுகாதோரும்
சிம்மாசனமேறிக் கொத்பா சீக்கிறம் ஓதலாமா

276 குலாமென்ற அடிமைகளே குறைப்பாவம் செய்தவரே
கலாமோதி தொழுகைவிட்ட கசடர்களே மோசம்போவீர்

277 முத்திபெறும் முஸ்லீம்களுக்கு மெத்தச்சொல்ல தேவையில்லை
கர்த்தனின் பயமுள்ளோர் கலாவன்றி தொழுதிடுவீர்

278 அப்துல்காதிர் உரைத்திட்டேன் ஆண் பெண்கள் தொழுதுவர
அஹ்மதுறசூல்ஷரீஅத் அனைவரும் எடுத்திடுவீர்

விருத்தம்.

பணம் உண்டால் சொர்க்கம் வாஙக பாரினில் பெரிதொன தில்லை
மணமுண்டால் வாசம்காண இடையினில் மறைவொன்றில்லை
அனைத்தையும் வெளிக்கிட்ட ஆதியை பயந்தோர்கள்
குணமாக ஜகாத்தழித்து கூடிடுவார் சொர்க்கலோகம்.

பாட்டு

279 ஜகாத்து கொடுக்கமாட்டாய் சதக்காவும் ஈயமாட்டாய்
பக்கத்திலுள்ளவரை பண்புடனே கொடுக்கவொட்டாய்

280 ஹக்கன் கொடுத்த முதல் அளவுடன் ஜகாத்துமீயாய்
எக்காலம் இம்முதலும் இருந்திடுமோ உம்மிடத்தே

281 ஜகாத்தழிக்க முதல்போகா ஸதக்கா கொடுக்க நஷ்ட்டமாகா
ஹக்கன்பேரில் கொடுக்காதோரே அறிந்திடுவாய் கபுருக்குள்

282 பாம்பு தேள் பிடுக்கிடுமே பலீஹத்து ரெம்பவாமே
வீம்பாக ஜகாத்தளிக்கா வீனனுக்கு இதுதான் கூலி

283 கைற் கொடுத்தால் நரகம் தொடா காசினியிலுள்ளவரே
வயிர் நிறைத்தோர் அமலையெடார் வாது செய்வோர் நரகம்போவார்

284 வெட்கமில்லா மானிடரும் வேதத்திடை பார்த்துணரா
மக்கநபி உம்மத்தென்று மானிலத்தில் பறை அடிப்பாய்

285 நபியைத் துயரவேண்டும் நல்ஜகாத்தழிக்கவேணடும்
நாயன் சொல்கு மாற்றம் செய்து நானுமே இஸ்லாமென்பாய்

286 எளியோரின் ஹக்கைச் சேர்த்து என் அளித்தான் உமதிடத்தே
இறப்பவற்கு ஜகாத்தளியா எகப்போராய் நரகமதில்

287 பொருள் கொடுத்தான் சொர்க்கம் வாங்க புவியினில் முஸ்லீம்களே
பொருளும் ஈயாய் நரகம்தேட புத்தி உனக்கிதுதானோ

288 அருமையான மார்க்கத்திடை அரக்காசு மீயாமலே
பெருமைக்காக பொருள் அழித்து பெருவதென்ன நரகவாழ்வு

289 கொடுத்தோனும் விடுத்துக்கேள்க அடுத்தோரை யேலலாவாய்
எடுத்திட்டாய் கெட்டதொழில் இதுபோலே வேறொன்றில்லை

290 முஸாபரைஏசும்போது முன்னோனுக்கு மறைவொன்றில்லை
உஷாராக பேசாவிடில் உடயோனின் கோபமாமே

291 எழியோரைப் பேசுவதால் வலியோனும் வுடவுமாட்டான்
கழியில்லா அடியாக கத்தோனடிப்பான் நரகத்திடை

292 பணமுனக்கு சொந்தமில்லை பாரில் வந்த பிச்சையாகும்
மனமானல் கொடுத்திடுவான் மார்க்கம்விட்டால் கெடுத்திடுவான்

293 கத்தோனும்மில் பணங்கொடுத்தான் கணககாக உண்டுதின்று
உத்தமரை ஸகாவத்திட்டு உன்னுயுளை போக்குவீரே

294 பவித்தோர்க்கு சோரும் ஈயாய் பாவம்போக தௌபாச்செய்யாய்
குஷ்யாகப் பொருளும் ஈயா கொடுமைக்கு நரகமாமே

295 சதக்காவு மீயாப்பணம் சர்க்காருக்கு அழியலாகும்
அநீதமாய்த்தேடும்பணம் அழியுமே கோட்டுக்காக

விருத்தம்.

பொருளைக் கொடுத்தான் புவியினில் ஜக்காத்திட போதுமாமே
அருளைக்கொடுத்தான் சதகாயீய ஆதமிய்யா சொர்க்கமாமே
மருளை அடித்து மகத்தான வேதம்போல் மாணிடரும்
பொருள் உள்ளோர் ஜகாத்தளிக்க புருக்கானின் சட்டமாமே

பாட்டு.

296 முன்னோன் முதல்கொடுத்தான் முஸாபரின் ஹக்கைச்சேர்த்து
பின்னல் முசாபர்எக பேசி யேசி முடுக்கவேண்டாம்

297 முஸாபரை முனியும்போது முன்னோனுக்கு வருத்தமாமே
முதலவனின் வருத்தமதை முஸ்லீமும் தேடவேணடாம்

298 நாயனும் வருத்தமாக நாட்டினிட கெதிதானென்ன
மாயமான துன்யாவிட்டு மார்க்கம்போல் ஜகாத்தளிப்பாய்

299 மூலாபரின் ஹக்கைச்சேர்த்து மூட்டையாக கட்டி வைப்பாய்
முதலவனின் கோபத்தாலே முதல்போகும் வழியைக்கேளும்

300 கோட்டுக்குக் கொடுபோவாய் கூத்துக்குமே வாரிப்போவாய்
ஓட்டுக்கு யுகப்பாயழிப்பாய் உடயோனென்றால் கிடையாதென்பாய்

301 ஓட்டின் சிலவுமேதான் உடயோனுக்கு பொருத்தமில்லை
கேட்டபேர்க்கு ஸதக்காயிய கிருபையாளன் சொல்லைப்பாரும்

302 உங்களுக்கு உகப்பான ஒரு வஸ்தை கொடுத்தாலன்றி
தங்கம்பேலே இலங்கும் சொர்க்கம் தனியோன் கொடுக்கமாட்டான்

303 பொருள் பணமும் பிள்ளைகுட்டி பூலோகத்தில் சிறப்பாமே
அருள்பெற ஜகாதளித்தால் ஆகிரத்தில் சிறப்பாமே

304 கிஞயத்துக்கில்லாரும் கேட்டாலும் கொடுக்கமாட்டாய்
ஜிஞவதற்கு தானழித்து சீரளிய நரகம்போவாய்

305 ஜகாத்தளிக்க முதலைக்கார்க்கும் சதக்காயிய பலாயை நீக்கும்
ஹக்கன்பேரில் கொடுக்கும்படி அருமைநபி செப்பினரே

306 முதலுக்கு ஜகாத்துமில்லை முத்திபெற யீகையில்லை
உதவத்தக்க சதக்காயில்லை யுலகத்தாசை யெடுக்கலமா

307 ஜகாத் சதகா ஈயாதோர்க்கு தனியோனும் கிருபை செய்யான்
அநியாயமாய் நரகம்போய் அதாபின்மேல் அலங்கோலமாம்

308 தங்கிருந்தாய் கெற்பக்குழி தனித்திருந்தாய் உதிரக்குழி
எங்கு பணம்தேடி நீ இங்குவந்தாய் யுலகத்திடை

309 இஸ்ராபாக சிலவழிக்க இறையோனுக்கு பொருத்தமுண்டோ
உஸாராகச் சிலவிட்டோர்க்கு உடயோனின் கிருபையாமே

310 ஹக்காளியின் ஹக்கிருக்க ஆதமிய்யா மோலமென்ன
எட்டுப்பங்காளி ஹக்கை எடுத்துத்தின்ன ஹராமாச்சு

311 காசொன்று கேட்டவுடன் கடுங்கோபமாகச் சீறி
ஏசுராயே பேசுராயே ஏகனுங்கோபமாக

312 யாரு கொடுத்த பணம் எங்கிருந்து வந்த பணம்
பாராளும் நாயனன்றி பணங்கொடுத்ததார் சொல்லும்

313 பனீஇசுராயீல் கூட்டத்திலே பணத்தின் ஜகாத் நாலிலொன்று
பயக்காம்பர் பரக்கத்தாலே பாக்கியர்க்கு லேசாச்சு

314 நயியுல்லா கேட்டதிஞல் நாற்பதிலொன்ருக்கிஞன்
நல்முஸ்லீம் கொடுத்துவர நாயனும் துணை செய்வானே

315 நபியைத் துயர்ந்திடுவார் நல்ஜகாத் மறந்திடுவார்
ஹபீபுநபி உம்மத்தோர்க்கு ஆசையென்ன பணத்தின்மேல்

316 கல்லாத அப்துல் காதிர் எல்லோர்க்கும் சொல்லிவிட்டேன்
வல்லோனின் சொல்போலே வரிசை ஜகாத்தழித்திடுவீர்.

## விருத்தம். நோம்பு.

துய்யோனைபயந்தோ ரெல்லாம் துன்பமெண்ணார் நோம்பிருக்க
வையகத்தை உகந்தோ ருக்குவல்லோனின் நோன்புமில்லை
செய்யிதிறசூலின் ஷராஹதுவாம் நோன்பிருக்க சகோதரரே
சய்யூமின் காட்ச்சிபெற அவிழ்கையுள்ளோர் கருதுவாரே.

## பாட்டு.

317 நோன்பைப்பிடித்தாக்கால் நொம்பலங்கள் வருகுமென்று
வீம்பாகத்தின்றவரும் வேந்தனைப்பயந்தாயில்லை

318 நோன்பதுவும் மருந்தாகும் நொம்பலம் முடையோர்க்கு
நோன்பன்றி தின்றுமவன் நோம்பாளி முன்வரலாமா

319 வெற்றிலை போட்டிடுவாய் சுற்றிசுருட்குடித்திடுவாய்
எத்திசையும் படைத்தாளும் ஏகனிடம் என்ன சொல்வாய்

320 நோம்பு நாளில் தின்பதுபோல் நொம்பலங்கள் வேறொன்றில்லை
வீன்பாவி தினறல்லவோ வீணாக நரகம் போவாய்

321 பகலயிலே உண்டுதின்ற பாவம் போல் வேறொன்றில்லை
சவலைக்கு சோர் கொடுக்க சகிக்காராம் பீவியர்கள்

322 முப்பதுடன் முந்நூராகும் எப்போதும் உண்டு தின்றாய்
செப்பொண்ணாது ரம்லானிலே தப்பிதமா தின்னலாமா

323 மூன்னூருடன் முப்பதிலும் உன்னுயுளை போக்கிட்டாயே
எண்ணியே ரம்லானிலே இறையோனேவல் கைவிட்டாயே

324 இவ்வுலகில் நோம்பை பேண இந்துவுமே இஸ்லாமானன்
அவ்வலிய நோம்பைப் பேணார் ஆலநபி உம்மத்தாமோ

325 வேஷம் பார்த்தால் இஸ்லாமிய்யா வேண்டாசெயல் ஷைத்தானிய்யா
ஆசைபார்த்தால் நபுஷானிய்யா ஆலத்திடை நோன்பு வைய்யான்

326 நோம்புதனைப்பேணமல் நோக்கம்போல் தின்றவனே
பாம்புதேள் குடியிருக்கும் பாழ் நரகம் உனக்காச்சு

327 உலகத்திடை உடல் வளர்த்து உடயோ நோன்பு விட்ட பாவி
இழிவான நரகத்திடை ஏகிடுவாய் சொந்தமாக

328 நரகம் சுட்டால் கருகிடுவாய் அரவம் கொட்ட உருகிடுவாய்
சரஹைத்தட்டி நோன்பு வையா சண்டாளன் இஸ்லாமென்பான்

329 என்னத்தை சொல்லப்போரேன் எதையெடுத்துரைக்கப்போறேன்
சுன்னத் ஜமாத் கல்லாது சொல்லொன்றும் பலன் கொடாது

230 நோக்காடு என்ன சொல்லும் நோம்பைப்பிடியாதோரே
ஊக்கங்களால் நோன்பை விட்டால் சீய்க்கிரையாகிடுவாய்

331 சாக்காலம் வருமபோது ஊக்கங்கள் நிலைநில்லாது
தீய்க்கிரை கொடுப்பதற்கு தேடுகிறாய் உடலதனை

332 ரம்லான் நோன்பை பேணாதோர் ராப்பகலாய் அமலைக்காணார்
அமரர்கள் கூட்டிச்செல்வார் அனல் நரகம் போட்டடைக்க

333 பாம்பு தேள் பிடுங்கிடுமே பலீஹத்து ரெம்பவாமே
வீம்பாக நோன்பை விட்ட வீணனுக்கு இதுதான் கூலி
334 மூனுபத்து நோம்பதுவை முறையாய்ப் பிடியாதவர்
காணும்படி நரகத்திலே கதரி யழுகப்போருன்
335 சொல்லுக்கு நரகமாக்கும் சுகிப்பவர்க்கு தொல்லையாக்கும்
கல்லைப்போட்டால் உருகிடுமாம் கடு நரகம் உனக்காகும்
336 ஷரஹுடுத்த நோன்புவையா சண்டாளா என்ன சொல்வேன்
உரைவின்முறை விட்டல்லவோ உருளப்போராய் நரகத்திடை
337 பிள்ளைதனைக்காணுமென்று பெற்றவர்கள் தேடுமாப்போல்
தொல்லை அதாபு செய்ய தோஜக்குன்னை தேடுதாமே

விருத்தம்.

விருதமெனும் நோம்பதுவை விரும்பியே தான் பிடித்து
உருதியாய் வாயைப்பேனியுன் நோம்பை அனுப்புவோர்கள்
சுருதிமரை சொல்பிசகார் சொன்ன சொல்கு மாற்றம் செய்யார்
இன்னல்லா கிருபை செய்து இவர்களின் பாவம் போக்கு

பாட்டு,

338 ரம்லான் பரக்கத்தாலே நரகமெல்லாம் பூட்டசசொல்லி
அமரரினுல் சொர்க்கமதை யன்புடனே திறக்கச் சொல்வான்
339 அல்லாவின் அடியாரே ஆலநபி உம்மத்தோரே
இல்லல்லா நோன்பதுவை இவ்வுலகில் விடவொண்ணுது
340 இறையோனின் நோன்பிருக்க இஸ்லாமிய்யா சொர்க்கமாமே
இரசூலின் அமல் எடுக்க இரா முழுதும் சுன்னத்தாமே
341 சொன்ன சொல்லெடுத்தவர்க்கு தொல்லையில்லை ஆகிரத்தில்
இன்னல்லாவின் நோம்பை விட்டோன் இவ்வுலகிலிருக்கொண்ணுது
342 தனியவன் நோன்பதனை தரனியில் பிடியாதவன்
அநியாயமாய் ஷரஹைவிட்டால் அரவந்தேள் விட்டிடுமோ
343 தக்கோனுமைப்படைத்து தரனியில் வெளியாக்கிட்ட
ஹக்கனின் தொழுகை நோன்பு அநியாயமாய் விட்டதென்ன
344 கனியான நோம் தொழுகை கண் குறைவாய்க் காணமல்
இனியாகிலும் ஷரகெடுக்க இருதயத்தை திருப்பிவையும்
345 அருபது பருலு கூடும் அனல் நரகம் பூட்டும் நோன்பு
மருஹபாவென்றல்லவோ வருட மெல்லாம் நோன்பிருப்பாய்
346 மாற்றப்பட்ட வேதத்தினில் மாசமாரும் நோன்பாமே
பார்த்துக்கேட்ட வேதத்திடை பாக்கியரும் பிடித்துவந்தார்
347 ஆருமாச நோன்பதனை ஹக்கனிடம் மன்ருடியே
ஒரு மாசமாக்கித்தந்த உண்மை நபி நாயகமாம்
348 ஒருமாசம் நோன்பதனை உகப்பாய் பிடியாதவர்
குருமுஹம்மத் உம்மத்தென்று விருதாவில் உரைப்பதென்ன

349 நபுவ்வத் நபிகேட்ட நோன்பு நூற்றியெண்பது முப்பதாச்சி
ஹபீபுநபி ஷரகை விட்டாய் அரவங்தேள் கொட்டிடுமே
350 முஸ்லீம் என்று வேஷமிட்டாய் மூனுபத்து நோன்பதனை
இஸ்லாமும் விடுவதினுல் இழிவதுபோல் வேறொன்றில்லை
351 முப்பதை முன்னூராக்கி தப்பிதங்கள் நீக்குகின்ற
செப்பொன்னுத நோன்பதனை சிந்தைமகிழ பிடித்தீரில்லை
352 நபியுல்லா கேட்ட நோன்பு நல்லோர்க்கு பருலாச்சு
நசீபு கெட்டோன் நோன்பை விட்டு நரகத்தை தேடலாச்சு
353 பகலையிலே தின்பதுவும் பயந்தோர்க்கு ஹராமாச்சு
பாரில் தண்ணீர் குடிப்பதுவும் பத்வா சொல் ஹைலாச்சு
354 நோன்பை பிடியாதோரே பாம்பு தேள் விட்டிடுமோ
வீண்பாவி நரகம்போய் வேகப்போராய் நெருப்பினிலே
355 நபியுடைய உம்மத்தோர்கள் நல்ல நோன்பை வழிபார்ப்பார்
ஹபீபுநபி உம்மத் சிலர் ஐயாறு நோன்பு வையார்
356 தனக்குமே பயம் ஒன்றில்லை தரணியில் நோம்பைவிட
கணக்குப்பார்க்கும் சமயத்திலே கவலையாகி லாபமென்ன
357 மஹத்தான நோன்பைவிட மஹ்ஷரை பயந்தீரில்லை
அகத்தியம் இக்கொடுமை ஆருமே பொருக்கொண்ணுத
358 ஆயிரம் மாசம்விட அமைத்தான் லைலதுல்கதுரை
அவ்விரவில் வணங்குவோர்கள் அவனருளை பெற்றிடுவார்
359 ரூஹூல் அமீனுடனே ரஹ்மான் மலக்குகளும்
ராஹத்தாயிரங்குமிரவ் லைலத்துல்கதுராக்கும்
360 கிழக் வெழுக்கு நேரமட்டும் சல்குகளே துஆக்கேளும்
மலக்குகளின் ஆமினுலே மன்னேன் கபூல் செய்வான்
361 விட்டிடாதே இவ்விரவை தட்டிடாதே நல் அமலை
தொட்டிடாதே துன்யாவாசை தோஜக்குன்னை விட்டிடுமோ
362 நுணுக்கமான கூலியுண்டு நோன்பு பிடித்த இஸ்லாம்களே
உனக்குத் தெரியுமானுல் யொரு நோன்பும் விடவொண்ணுய்
363 மௌத்துனிடம் தாகமில்லை மஹ்ஷரின் வருத்தமில்லை
அழகான தீன்குடிப்பும் ஆண்டவன் கொடுத்திடுவான்
364 மார்க்கத்திலுள்ள நோன்பை மனமுரண்டாய் விட்டாராகில்
தீர்க்கமான மஹ்ஷரிலே திகைத்தவனமுகலாவான்
365 நபுஸை ஒடுக்கியல்லோ நல்வழியில் சேர்க்கும் நோன்பு
சபுருடனே நோன்பு வைக்க சந்தோஷமா மஹ்ஷரிடம்

## விருத்தம்.

துய்ய சொர்க்கந்தான் திறந்து துன்பமெனும் நரசடைத்து
வையகத்தில் ரம்லானில் வருஹைஷயாய் நோன்பு வைத்தால்
கையூமின் காகூியினுல் காத்திம் நபி கிருபையினுல்
செய்யும்தவம் கபூலாகி சேர்ந்திடுவார் சவ்னபதி.

பாட்டு.

366 பாலங்கடத்தும் நோம்பு பாக்கியர்கள் வைத்த நோன்பு
ஆலநபி உம்மத்தோரே அன்புடனே காக்கும் நோன்பு
367 நபியை துயரவேண்டும் நல்ஷரகை எடுக்கவேண்டும்
ஷரகுக்கு மாற்றம் செய்ய சண்டாளன் நரகிலாவான்
368 ரம்லானின் பதவிபாரும் நாயனிடும் உரிமை பாரும்
நாளொன்றுக்கு பத்து லக்ஷம் நரகம் விட்டு நீக்குருனும்
369 ஜூம்ஆவுக்கு பத்து லக்ஷம் என்பிரானும் வெளியாக்கிட
ஆகமொத்தம் கூடினதை அல்லாவும் உரிமை செய்வான்
370 அல்லாவும் பேனும்போது அடியானும் பேனுவிடில்
ஆகிரத்து நாளையிலே அழுது சலிக்கலாவான்
371 ஏழு நரகத்தெரியை அமைத்தே கதவை
தாளிட்டடைக்குகின்ற தகுதி ரம்லானுக்கும்
372 எட்டு சுவர்க்க திலகருமொழி வாசலெல்லாம்
திட்டமுடனே அதுவும் திறக்கும் ரம்லானுக்கும்
373 ரய்யானென்னும் வாஷலாமே நல்ல சொர்க்கத் தலங்காரம்
அய்யாறு நோன்பு வைத்தோர் அவ்வழியாய் சொர்க்கம் போவார்
374 நல்ல நோன்பு வைத்தவர்க்கு நரகமது தூராக்கிட
எல்லா வஸ்தும் வல்லோனிடம் எகோபித்து துஆ கேள்கும்
375 பாவமும் மன்னித்திட படைத்தோன் ரஹ்மத்தாகும்
கோபமான மஹ்ஷரிலே கொடுத்திடுவான் நபிஷபாஅத்
376 ரம்லானில் நலவு செய்ய நாயனின் சொல்லாக்கும்
ரம்லானில் நோம்பைவிட்டு நரகத்தைத்தேடுவதேன்
377 சுன்னத்துக்கு பருவின் கூலி சுன்னத் ஜமாத் விட்டிடாதே
என்னத்துக்கு கொடுக்கிருனும் இறையோன் ரம்லானுலே
378 நித்திரை வணக்கமாச்சு மூச்சதுவும் தஸ்பீஹாச்சு
சத்துருவை வென்றவர்கள் செத்தாலும் நோன்பைவிடார்
379 வாய்வாடை கஸ்தூரியாம் வல்லோனிடந்தனிலே
தாய்மாரே நோன்பைவிட்டு தடித்தனமாய்த் திரியவேண்டாம்
380 காயமழிந்திமே கவலைக்கிடமாகிடுமே
நாயதுபோல் கடைகெட்டு நரகத்திடை அதாபடைவான்
381 தாயிம் காயிம் ரம்லானிலே தவரிடாமல் நோன்பிருக்க
ஒயாக்கவலைபோய் உனக்குமே சொர்க்கமாமே
382 பாவமும் மன்னிப்பானும் பயந்தஞ்சி நோன்பிருந்தால்
கோபமான மஹ்ஷரிலே கோமான் ரஹ்மத்தாமே
383 ரம்லான் பரக்கத்தாலே நல்லோரைக் காற்கவேண்டும்
நபியுடைய உம்மத்தோரை நரகம் விட்டு நீக்கவேண்டும்
684 ஒலிமா றவ்லியாக்கள் உண்மை ஸாலிஹீன் பொருட்டால்
கலிமாவுடன் கரைசேர கையூமே கிருபைசெய்வாய்

385 சந்திரனும் சூரியனும் ஸாகிர நாளுள்ளமட்டும்
சரமழைபோல் சலவாத்து தாஹா நபிமீதுண்டாக

386 பாடிநேனப்துல்காதர் பார்த்துனரும் முல்லீங்களும்
கூடிடுங்கள் நோம்பிருக்க குருஆனின் சொற்படியே

பித்ராக் கொடுக்குதல்.

387 பித்ராவும் கொடுக்காமல் பெரியோரிடம் கேளாமல்
சத்துராதிபோல் பித்ராப்பணம் தான் தின்ன மார்க்கமுண்டோ

388 உத்தமரும் பித்ராவை உடனேக்குடன் கொடுத்திடுவார்
சுத்தமான நோன்பதற்கு சுருக்கில் துணை தேடிடுவீர்

389 பெருநாள் சுபுஹுக்குபின் பேணியே கொடுக்கவேண்டும்
வெரு நாள் போல் எண்ணாமல் விரைவில் போய் கொடுத்திடுமே

390 கருத்தாக நோன்பு வைத்து கணக்குடன் பித்ராவைக்கொடான்
உருத்தான நோம்பதுவும் உடயோனிடம் போகாதாமே

391 பித்ராவை கணக்குப்பார்த்து பிரியமாய் கொடுத்தவரின்
அத்தாச்சியான நோன்பு ஆண்டவந்தன் சேர்த்திடுவான்

392 காலமெல்லாம் கவனியாமல் கடத்திட்டீர் வீண்பொழுதை
ஆலத்தை விட்டகன்றால் அல்லா இடம் என்ன சொல்வாய்

393 இந்த விதம் கொடுக்காதோர் இஸ்லாமின் வேஷமென்ன
சொந்தமான ஷரகுசட்டம் சோருதே துன்யாத்தேட

394 மானிடரே மௌத்திருக்க மார்கத்தை இழக்கவேண்டாம்
கோனிடத்தே போவதுன்மை குணக்கேளை விட்டொழியும்

395 தோணி கவிழுமுன் துய்யோனைபயந்திடுவீர்
காணியை கவ்வி நியும் கைவிட்டாய் மார்க்கச்சட்டம்

396 காத்திம்நபி உம்மத்தோரே கல்பைமௌத்தாக்கியோரே
நூற்றுக்கு பத்து வீதம் சேர்த்திடும் அமலைக்காணும்

ஹஜ்ஜு விருத்தம்.

மக்காநபி ஷரஹதுபோல் மானிடரும் நடக்க வேண்டும்
சக்கன்றி ஹிர்லை விட்டு சரேலென்று மக்கமேகி
ஹக்குடைய வீடு சென்று ஹஜ்ஜுடைய அமலதுவை
முக்கியமாய் செய்தோரும் மூமினெனப்பேர் பெருவார்

பாட்டு.

397 ஹஜ்ஜுக்கு போனக்கால் அதிகப்பணம் சிலவென்றெண்ணி
கச்சவடம் செய்தல்லவோ காசுபணம் பெருக்கலாமா

398 இறசூலின் சொல்லாக்கும் என்னை வந்து காணாவிடில்
உருத்தான சபா அத்துவும் உனக்குமே வேண்டாமோ சொல்

399 மக்கத்துக்கு போனவர்க்கு மானிலத்தில் கீர்த்தி யுண்டும்
ஹக்கனிடந்தனிலே அளவிடொன்ன வரிசையுண்டும்

400 இவ்வுலகம் தேடுவோர்கள் இறசூலின் உம்மத்தாஹ்றார்
அவ்வுலகம் நம்பினோர்க்கு அல்லாவும் அருள்புரிவான்

401 கஃபாவை கண்டவர்க்கு கல்பு சலாமத்தாச்சு
தௌபாவும் செய்தல்லவோ தாஹாநபி ஷரதைவிடாய்

402 உம்ராவும் செய்யவுமே யோடுதே ஒன் பாவம்
நம்ராட்டி பெண்களும் போய் நல்ல ஹஜ்ஜு செய்யவேணும்

403 மக்கம் போய் வந்தவர்கள் மார்க்கப்படி நடந்தீரானால்
ஹக்கிரசூல் கிருபை கொண்டு அணல் நரகம் காண ஹராம்

404 கஃபாவின் வரிசை பாரும் தவாபால் மிகுத்த இடம்
பாவம் போகும் தலமாகும் பக்தியர்கள் போய்வாரார்

405 நாட்டுக்கு நடுத்தலமாம் நபியிற சூல்பிறந்திடமாம்
கேட்டுப்பாரும் பொது தலமாம் கிருபையோனின் கஃபாவாம்

406 ஒன்றுக்கு லக்ஷம் தரும் உடயோன் கஃபாவாம்
எண்ணிக்கையில்லாமலக்கு எந்நேரமும் வந்துபோவார்

407 சொந்தமான கஃபாவுக்கு சிந்தையோடு ஹஜ்ஜுக்கேகும்
வந்த பாவம் போய் அவர் வரிசையது பெற்றிடுவார்

408 இந்த பாடல் பாடியோன் இவ்வுலகில் அப்துல்காதர்
வந்த பாவம் நீங்கும்படி வணங்கினோர் துஆ கேளும்

## விருத்தம் பெருநாள்.

பெரு நாள் தொழுகையதை பெருமானைத் தொழுவதற்கு
அருமையாய் இஸ்லாங்களே அகத்தியமொன்றாய்க்கூடி
தருமமும் சதகாயீந்து தனியோனை தொழுதபின்பு
வருஷயாய் இறப்போருக்கு வகைந்ததை கொடையுமீவாய்

## பாட்டு.

409 யீதுடைய நேரம் பாரும் ஓதிவரும் ஷரஹைகேளும்
நீதியாய்த்தொழுதபேர்க்கு ஆதி நாயன் கிருபை செய்வான்

410 வித்தியாஸமாய்த்தொழுதோரே ஒத்துப்பாரும் மார்க்கமதை
எத்தொழுகை காகாத மத்திபத்தில் தொழுகப்போராய்

411 ஓதிப்படித்தவரே ஒகத்துவிட்டு தொழலாமா
மூதேவி நேரத்திலே எதாகிலும் தொழப்படாது

412 அவாம்களே சொல்லக்கேளும் ஜவாலுக்கு முன்பதாக
லாபம் பெற தொழுதல்லவோ பாவம் போக கெஞ்சிக்கேளும்

413 விட்டாயோ மார்க்கமதை கேட்டுதான் படித்தாயில்லை
தாட்டிகமாய் கொட்டிப்போயி தகாத நேரம் தொழப்போராய்

414 வாச்சுதே உச்சி நேரம் ஆச்சுதே ஹராம் ஒகத்து
பேச்சிலே நேரம் போக்கி பேயனும் தொழப்போரான்

415 மூச்சு ஒடுங்குமுன்னே முத்துநபி சட்டம்போலே
எச்சிடாமல் நல் ஒகத்தில் எல்லோரும் ஈதைத்தொழும்

416 நாயன் கிருபையினல் நானூரும் சொச்சமாமே
நல் முஸ்லிம் எந்தனுக்கு நாயனிடம் துஆ கேள்பீர்

## மேளத்தைப்பற்றி சோல்வது.

விருத்தம்.

தூலத்தை வளர்க்க நாடி துன்யாவை சதமென்றெண்ணி
ஆலத்தை விட்டகலா ஆதமிய்யா இருந்ததாரு
கோலத்தைவிட்டு நீங்க குறிப்புகள் காண்பாராயின்
காலனர் வேளைபார்த்து கடுந்துயிர் பிடிப்பாராமே

பாட்டு.

417 மௌத்தையும் கேட்டிருப்பாய் மௌத்தானபேரை தூக்கிருப்பாய்
மௌத்துமே தனக்கிருக்க மண்டலத்தில் ஷரகொண்டில்லை
418 மௌத்தை நினையாத மானிடரும் இஸ்லாமென்பார்
கவுத்துவம்செய் துன்யாவாலை கல்பை விட்டொழிவதில்லை
419 நேசரே மௌத்திருக்க நேரம் தொழா மோஸமென்ன
ஆலை துன்யா விட்டகலா அக்கொடுமை பின் தொடரும்
420 மௌத்திருக்க மஹத்துவமேன் மானிலத்தை கவ்விடாதே
பௌத்திரி மனைவி மக்கள் பார்த்திடா கபுரறையாம்
421 மரணத்தை கவனியாமல் மார்க்கமதை எடுத்தீரில்லை
மரணி வந்திழுககும்போது மயங்கி முழிக்கப்போரூய்
422 சத்தியமாய்த் துன்யாத்தேடி சதிகாரனல் மோஸமானய்
எத்திசையும் படைத்தாளும் எகனிடம் என்ன சொல்வாய்
423 புத்தியுள்ளோர்க்கிதுபோதும் செத்திறந்து போம்போது
சொத்து மக்கள் மனைவியையும் சுமந்துபோகக் கண்டீரோ
424 மரணமிருக்குதென்பார் மார்க்கச் சட்டம் தொழுகையெடார்
இரணத்தைத் தின்றவரும் எமாந்து மோஸம்போனர்
425 ஒகத்துவிடா நீ தொழுது ஒரு பாவமும் செய்யாருந்தான்
தருதின் மேலிருந்திட்டாலும் தனியோன் மௌத் விட்டிடுமோ
426 மானிலத்தை விட்டு நீங்க மௌத்திருந்தும் பயமில்லையா
தானியத்தை உண்டுதின்று தகாதசெயல் செய்யலாமா
427 உயிர் இருக்கும்போதிலவன் ஒரு அமலும் செய்யாமலே
உயிர்போகும் தருவாயிலே உருகிக் கரையலாவான்
428 காசு பணம் பெரிதென்றெண்ணி வாசியுமற்றுப்போச்சு
தோசியே இங்கு நீ தொழுகைவிட காரணமேன்
429 பூவுலகம் நம்பியோனே பொருள் பணமும் தேடி ஓடி
அவ்வுலகம் போவோமென்று அமலதுவும் செய்தாயில்லை
430 துன்யாத்தேடி கொடுபோகாய் துன்பம் தேட விட்டுப்போகா
கனியான மார்க்கச்சட்டம் கடைபிடிக்கா காரணமேன்

431 காணும் சிலயிடத்தே கபுருகள் கண்டிருந்தும்
தானுமே போவோமென்று தாலத்தாசை விட்டிரில்லை

432 என்னத்தைக் கொண்டுபோவாய் எல்லாம்விட்டு போரவனே
கண்ணாரக்கண்டிடுவாய் கபுருக்குள் பாம்புதேளும்

விருத்தகம்.

பொருளை வெருத்து புருகானின் சட்டம்போல்
அருளதைத்தேட அல்லாவின் கிருபை ஆதமியா
இருளைக்கரித்தால் இரகுவின் தெரிசனம் இருதயத்தில்
மருளை வெருத்தால் மௌத்திடம் கலிமா மானிடரே

## மௌத்தின் சீக்கு.

பாட்டு

433 சீக்கானாய் யூக்கமற்று பயனமாக சிநேகிதரே
சாக்காலம் வருமளவும் சாடிடாதே உலகத்தாலை

434 சோற்றின் ருசி யற்றும்போச்சு காற்றின் சுகம் மாறிப்போச்சு
தாத்தின்னிறம் வேறாச்சு சாங்காலம் மூடுகலாச்சு

435 பேச்சும் குளறிப்போச்சு பேயனைப்போல் புலம்பலாச்சு
மூச்சும் இழுக்கலாச்சு முன் வினைகள் நினைக்கலாச்சு

436 பாவி இபுலீஸுடைய மாயத்திலாக்கிடாமல்
படைத்தோனே உன்காவல் பயகாம்பரும்மத்தாக்

437 மௌத்தின் கசப்பதுபோல் மானிலத்தி லொன்றுமில்லை
மௌத்தாக்களறிவதன்றி மற்றோரறியொண்ணாது

438 மௌத்து சகராத்ததிலே கசப்பு வந்தணுகிடாமல்
ஸௌத்துள்ள கலிமாவை சருகாமல் வரச்செய்வாய்

439 மௌத்தினிடம் தாகமதை மகான்களுமே பொருக்கொண்ணாது
மௌடீகமாய் இருந்தோர்க்கு மகா கொடுமையாகிடுமே

440 தனியவனே மௌத்தினிடம் தாகமதை லேசாக்கியும்
தாஹா நபி கலிமாவை தயாளமாய் நடத்தி வைப்பாய்

441 மௌத்தின் வருத்தங்களை மறையோனுந் தீர்ப்பதற்கு
பகுத்தறிவால் பாவம்போக்கி படைத்தோனிடங் கெஞ்சிக்கேளும்

442 மௌத்தின் வருத்தமதை மானிடர்கள் அறிந்ததுபோல்
ஆடு மாடு அறியுமானால் அது நினைந்தே உருகிடுமா

443 கலிமாவுடன் மௌத்தாக கையூமே அருள்புரிந்து
அலிமாமனார் உம்மத்தைப்போல் அலயாமல் ஈமானுக்கு

444 உருப்புகள் ஒடுங்கியல்லோ உடல்களுமசைந்திடாமல்
கருத்துகள் அழிந்துமேதான் காணும் காக்ஷி பயமாவாய்

445 நரகம் சொர்கம் காண்பதுவும் நல்லார் பொல்லார் வாரதுவும்
அருகில் காணும் காக்ஷியதை யாருமே அறியொண்ணாது

446 அந்த சமயத்திலே அஸடனிபுலீசவனும்
சொந்தக்காரன்போலே சொல்குபாடம் அறியொன்னுது

447 துர்க்குணத்தோரை துஷ்மனிபுலீஸவனும்
அர்ப்பமாய் கண்டு பாவி அவனுமே என்னலாவான்

448 இவனைக் கலைப்பதுவும் எனக்கு பெரிதல்லவென்று
இணக்கமாய்ப் பேசியேதான் இழுத்திடுவான் அவன் புரமாய்

449 சகராத்து வேளையிலே தாகம் பொருக்கொன்னுது
வைக்குரான் பிரழவிசை வகைமோஸம் கேளுமய்யா

விருத்தம்.

பாத்திலே யதிர்ந்தெல்லோரும் பயகாம்பர் சட்டம் போலே
யேற்றியே தொழுதோருக்கு இபுலீசவன் விலகிடுவான்
காத்திடுமிப்லீசுடைய கபடத்திலாகிடாமல்
நேர்த்தியாத்தொழுதபேர்க்கு நெடியவன் கிருபையாமே

பாட்டு இபுலீஸின் குபாடம்.

450 அல்லாவும் இரண்டென்றும் ஆலஙபி பொய்யென்றும்
சொல்லென்றும் சொல்லி சுனை நீரும் காட்டிடுவான்

451 சொல்வானே துர்க்குணத்தான் துஷ்மனைப்போலவனும்
வெல்வதற்கறியாமல் வீண்பாவியாகிடுவான்

452 சொன்னவுடனிப்லீஸூம் சுனை நீறை போட்டுடைத்து
போனவிடம் தெரியாமல் போய் விடுவான் வழிகெடுத்து

453 நல்லவர்களிடந்தனிலே கள்ளனும் வந்து பார்ப்பான்
அல்லாவின் திகர் நடக்க அசடனும் பயந்திடுவான்

454 நற்குணமுள்ளவர்கள் நஊதுபில்லாஹி என்பார்
நற்குணத்தோர் சொல்வதற்கு நடுங்கிடுவானிப்லீஸூம்

455 இவர்களும் சொன்னவுடன் இப்லீஸவன் முகங்கருகி
இவர்களைவிட்டு நீங்கி எடுத்திடுவான் ஓட்டமதே

456 ரிஜ்குடைய மலக்கு சொல்வார் ருஜூவாகயில்லை யென்பார்
அஜல்முடுகி பயணமாக ஆய்த்தமாய் இருந்திடுமே

457 மூச்சுடைய மலக்கு சொல்வார் ஆச்சுதே உன் காலம்
பேச்சுப்பேசியிருக்கையிலே பிரளப்போராய் மய்யத்தாக

458 தண்ணீரின் மலக்கு சொல்வார் கண்ணுக்கெட்ட சுற்றிபார்த்தேன்
இன்னிருக்க ஞாயமில்லை ஏகிடுவாய் துன்யாவிட்டு

459 தவனையுட மலக்கு சொல்வார் அவனியெல்லாம் சுற்றிப்பார்த்தேன்
பவனிவா ஞாயமில்லை பயணப்படு சுருக்காக

460 வையகத்தை விட்டு நீங்க மய்யத்தென்ற பேராச்சு
கய்யூமின் காட்சி பெற கபன் புடவை வாங்கலாச்சு

## விருத்தம் மய்யத்தென்ற பெயர்

அழுவதும் விழுவதுவும் அவரவர் துக்கத்தாலே
தொழுவதும் துடருவதும் துய்யோனின் பள்ளியிலே
ஒழுவதும் விழுவதுவும் ஒட்டின் உலவினாலே
எழுபதும் எழுபதுமே நூற்றியே நாற்பதென்றார்

### பாட்டு

461 சந்தைக்கு வந்திடுவார் சாமான் வாங்கிப்போயிடுவார்
சொந்தமோ இந்த வூரே சுணையிருந்தால் கவனிப்பீரே

462 உலகமதை தேடி நீ ஒரு பலனும் காணவில்லை
அலகைபோல் திரிந்தவனே அடங்கப்போறாய் கபுரரையில்

463 கழுவி வெடிப்பாக்கியல்லோ கபனிலேவைத்த பின்பு
முகமெடுத்து பாராயென்று மூடியே கட்டிடுவார்

464 மூன்று கட்டிகட்டியல்லோ முன்னாலே போறவனே
மூதேவியாலையாலே முன்னோனை மறந்தாயடா

465 தோளின்மேல் ஏறியபின் தூரஸபர் போறவனே
மீளாப்பயணத்துக்கு மிச்சமென்ன கொண்டு போறாய்

466 துன்யாவிட்டு போவோமென்று துய்யோனை தொழுதாயில்லை
தூக்கிவந்து தொழுவித்தோமே தூதர்நபி சட்டப்படி

467 போனதை கேட்டிருந்தும் புதைக்குழியை பார்த்திருந்தும்
தானுமே போவோமென்று தாலத்தாசைவிட்டாயில்லை

468 கூடியவர் கபுரில் வைத்து கூட்டத்தோர் மண்ணைத்தள்ளி
எங்களுடன் வந்திடாதே எதிட்டுப்பார்கோமென்பார்

469 உயிருடனிருக்கும்போது உன் வீடு புழுங்குதென்றாய்
குழியிலே வைத்கபின்பு குளிர்ந்த காற்றுக்கென்னசெய்வாய்

470 கபுரின் வருத்தமதை கற்றோனும் நீக்கவேண்டும்
கண்டவர்கள் வினவுரைக்க கபுரைவிட்டுவாரதெப்போ

471 குளியும் நெருக்கிடுமே கொடுமைசெய்த பாவியரே
வெளியே திரியும்போது வேந்தனைத் தொழுதாயில்லை

472 மண்ணைக்கொண்டு படைத்தானும் மண்மேல் வளர்த்தானும்
மண்ணுக்குள் பூர்த்தியுன்னை மண்ணில் நின்றெழுப்பிடுவான்

473 கபுரினில் வைத்தபின்பு கர்த்தன் மலக் றூகாயீலும்
நன்மை தின்மை யெழுதுமென்று நவின்றிடுவாரன்னேரம்

474 எழுதவும் கலமுமில்லை இறங்கிடவும் மய்யுமில்லை
எழுதுவது எந்தவிதம் என்றுமே கேட்டிடுவார்

475 கலிமாவிரல் கலமாமே கபன்புடவை காகிதமாம்
சலியாத வாய் நீரும் சரியான மய்யுமாமே

476 என்று சொல்லி றூகாயீல் ஏவுவார் எழுதுமென்று
மண்ணினில் செய்ததெல்லாம் மறக்காமல் எழுதியீவான்

477 எழுதியதை வாங்கியல்லோ இறையோனுத்தாரப்படி
கழுத்திலே கட்டியல்லோ ககனமே போயிடுவார்

478 நன்மை தின்மை யுருவெடுத்து நவிழ்ந்திடுமே கபுரிடத்தே
உண்மை நபி உம்மத்தோரே ஒன்றுமே பொய்யென்காய்

479 நல்லோரும் காணலாவார் நல்ல ரூபத்தின் வடிவாய்
பொல்லாரின் அமலதுவும் புரக்கணிக்கும் மருமொழிபார்

480 என்னைக்கெடுத்ததுபோல் எழாம் நரகம் யெடுத்தல்லவோ
சுன்னம்போல் நீற்றெழுப்ப விண்ணமாய் அதாபடைவாய்

481 சொல்லுக்கு நரகமாக்கும் சுகிப்பவர்க்கு தொல்லையாக்கும்
கல்லைப்போட்டாலுருகிடுமா கடுநரகம் உனக்குத்தாண்டா

482 நரகம் சுட்டால் கருகிடுவாய் அரவம் கொட்ட உருகிடுவாய்
ஷரகைத்தட்டி பாவம் செய்தாய் சாரப்போறுய் நரகமதில்

483 இன்னல்லாவின் கிருபையாலே சொன்னதெல்லா உண்மையாக்கும்
விண்ணமேது நினைத்திடாதே வேதாம்பர் உம்மத்தோரே

விருத்தம்

எல்லாரும் கூடி என்னை எடுத்து கபுர் றடக்கி
நில்லாது போயிடுவார் நிச்சயமாய் முங்கர் நகீர்
உள்ளாலே வந்து என்னை யுருக்கி உடல் நடுங்க
பல்லால் நெருநெரென்று பார்த்தென்னைக்கேட்பதற்கு

இதுவும்

அல்லாவே என்ன சொல்வேன் எதுசொல்வேன் எழை நான்
கல்லாத மூடனென்று தள்ளாதே நல் உதவி செய்
சொல்லாத பேர்களைப்போல் சோரமது போயிடாமல்
இல்லல்லா வாக்கழிக்க எனக்குதவியருள்புரிவாய்

பாட்டு.

484 எண்ணியோர் எழடியில் எகன் மலக்கிரங்கி
கண்ணுரெண்டும் அக்கினிபோல் கபுருக்குள் வந்திடுவார்

485 முங்கர் நகீர்எனுமலக்கு முன்னாலே வந்தவுடன்
அங்கமெல்லாம் நொந்துமே ஆற்றென்னுதுயரமாவார்

486 கண்டவர்கள் அஞ்சியல்லோ கை கால் நடுங்கிடுவார்
அண்டமெல்லாந்தான் மறந்து அல்லாவெனக்கதரிடுவார் [போலாம்

487 முழிகள் ரெண்டும் நெருப்பைபோலாம் முழுது மேனு இருளை
ளியின் நீளம் எழுபத்தாம் கடின சத்தம் இடியைபோலாம்

488 உடயோன் மலக் உள்ளே வந்து உனக்கு ரப்பு உரைத்திடுவாய்
படைத்த நபி பேரு நாமம் பகர்ந்ததீனின் பேருமென்ன

489 உனக்குமே கூட்டாளி யார் தனக்குமே கிபுலாவெது
கனக்கான இமாமென்ன கருத்துடன் ஜவாப்பளிப்பாய்

490 அல்லாஹு ரப்பியென்றும் ஆலநபி மூஹம்மதென்றும்
நல்லதீன் இஸ்லாமென நாட்டில் தோஸ்த்தி மூமினாமே

491 தனக்கு இமாம் குருஆனுகும் தவத்திற் கிபுலா கஉபாவாகும்
கணக்காம் ஜவாபாச்சு உனக்கவர்க்கும் இதுதானென்றுர்

492 எல்லாரும் மௌத்தாகி அல்லாவும் தனியாகி
பொல்லாத பாவிகளும் பொருந்தா ரதீதெல்லாம்

493 அல்லாவும் வருத்தமாகி அநேக நாள் செல்லலாகி
யெல்லாம் வெளியாக்க ஏகனுமே நினைக்குரானும்

494 ஒரு வஸ்தும் இல்லாமல் உலகுபானம் அழிந்திடுமாம்
மருதரம் வெளியாக்கிமஹ்ஷரிடம் சேர்த்து கேழ்பான்

495 ரெம்ப ரெம்ப சேதியுண்டும் முன்புராணம் வாங்கியுற்று
நம்பிடாதே துன்யா வாழ்வு நாளை மஹ்ஷர் கஷ்ட்டமாமே

விருத்தம்.

எழுப்புதல்.

இற்றழிந்து பாழாகி இல்லாமல் போனவனை
சுற்றச்சடத்துடன் சுருக்கில் வெளியாக்கி
குற்றங் குறைகள் கொண்டு கணக்கெடுத்து
மற்றும் விஜாரணைக்கு மஹ்ஷரிடம் நடத்தலாவான்

பாட்டு.

496 கபுரை விட்டுமெழுப்பும்போது கலங்கி மயக்கிடாமல்
காத்திமு லன்பியாவின் கருணையால் பாதுகாப்பாய்

497 சபுருடைய சங்கை நபி ஷபாஅத்தைப் பெற்றுக்கொள்ள
யாத்திரை போய்வநதாப்போல் எங்களை பாதுகாப்பாய்

498 மஹ்ஷருக்கு நடக்கும்போது மனங்கலங்கி பதரிடாமல்
ஷஹருடைய தானத்திடை சந்தோஷமாய் சேர்த்திடுவாய்

விருத்தம்.

மஹ்ஷர்

துஞ்சி நெடுங்காலமா துயரமது தீராமல்
அஞ்சி நபிமார்களவர் அழுதழுது நிற்குமிடம்
சஞ்சலமாம் நம்மிறசூல் தலையில் கரம் வைக்கையிலே
அஞ்சாதே என்று என்னை ஆதரிப்பாய் அல்லா நீ

பாட்டு

499 பொழுதுமே வந்திடுமாம் வல்லயத்தின் கதிருக்கு
பூமியும் சிவந்திடுமாம் நெருப்புத்தனலாக

500 உருப்புகள் துடித்திடுமாம் பொருக்கொணு சூட்டினலே
தரிப்பான மார்க்கம்விட்டோர் தலைவெடிக்க கதறிடுவார்

501 பொழுதின் சூடு பொருக்கொணுமல் புலம்பிடுவார் பாவிகளும்
தொழுது திஆக்கேள்க்காத தோஷமே சூட் கடுசாம்

502 சூரியனின் வெப்பமது சொல்லொண்ணுது மஹ்ஷரிடம்
வாரிபோலண்டர்கள் விளைந்திடுவார் மஹ்ஷரிலே

503 ஐந்துபத்து ஆயிரமாம் அதுதான் கியாம நாளாம்
மந்தியைப்போல் உண்டு தின்று மார்க்கம் விட்டோர் கண்டிடுவார்

504 நாளை மஹ்ஷரிடம் நாயனே அருள்புரிந்து
வேளையுதவி செய்ய வேணுமே யாகுதாயே

505 கீர்த்தியும் போதுமென்று கிருபையோனை மறந்தவனும்
உருத்தான மார்க்கம் விட்டாய் யுருகப்போருய் நரகத்திடை

506 கேள்வி கணக்கின்போது கெட்டோமே என்றழுவாய்
ஆளுக்கொப்ப நடந்தவர்கள் அறிந்திடுவார் மஹ்ஷரிடம்

507 பாவிகள் படும்பாட்டை பார்த்து நீக்க ஒருவரில்லை
தாவியே மார்க்கம் சொன்னுல் தடித்தனமாய் பேசிடுவொா

508 காசு பணக் கெடுதியும்மை கர்த்தோனை மறக்கடித்த
தோஷமும் மஹ்ஷரிடம் துன்பப்பட ஞாயமாச்சு

509 குருஷான நாயன் எவல் குறைவன்றி நடந்தவர்கள்
அருஷுடைய நிழலதிலே அமைந்திருப்பார் சந்தோஷமாய்

510 பாவம் புண்யம் நிறுக்கும்போது பாவிக்கொன்றும் நன்மை காணுர்
பருதவித்து மனஸ்தாபமாய் பாவியும் புலம்பலாவார்

511 முன்னேனின் பாலமாமே மூனுபத்து ஆயிரமாம்
கண்ணாலே கண்டிடுவார் காசுபணம் ஈயாதவர்

512 மயிரிலும் மெல்லிசாமே மானிடரும் நடக்கும் பாலம்
உயிருடனே செய்த அமல் உதவுமே அவ்வேளை

513 பாலங்கடக்கும்போது பாதாளங்கண்டஞ்சிடாமல்
ஆலம் படைத்தவனே அவ்வேளை யருள்புரிவாய்

514 எழுதான் சுங்கக்கேட்டு இறையோனின் சோதனையாம்
மாழாமல் மாண்டல்லவோ மனுஷரும் பாலம்போவார்

515 ஐந்துபேர் அஹ்லுல்பைத்து அவர்களுட பரகத்தாலே
கெஞ்சினேன் நால்யார்கள் கிருபைக் கடாச்சத்தாலே

516 மஞ்சிடா மூஹாஜிரன்சா ரடீங்களின் பொருட்டினுலே
என்சானுடல் பாவமதை இறையவா பொருத்திடுவாய்

517 எல்லாருக்குபதேசம் பொல்லாலும் சொல்லிவிட்டேன்
நல்லதென்று கபூல் செய்து நபிஷூரகை எடுக்க ஆமீன்

518 நாயனுட கிருபையாலே நாட்டினேர்க்கு மௌத்தைப்பாடும்
பேயன் அப்துல்காதிருக்கு பிரியமாய் துஆக்கேளும்

விருத்தம்.

நிகர்ஹெனும் ஷரஹு சட்டம் நேயர்களே சொல்லக்கேளும்
ஹக்கனின் சொல்லாக்கும் ஆலநபி மார்க்கமாகும்
மக்காநபி உம்மத்தோரே மார்க்கமதை எடுத்தவர்க்கு
சக்கந்தி சொர்க்கம்புக சார்ந்திடுவீர் ஷரஹதுகை

பாட்டு.

519 அசலான மார்க்கத்தினில் அன்புடனே பிறந்து
நசலான காபிர் செய்கை நானிலத்தில் எடுத்துக்கொண்டாய்

520 முகூர்த்தக்கால் ஊன்றியல்லோ முகூர்த்த நெல் அவித்துக்குத்தி
பகுத்தறிவால் மார்ககம்பாரா பாவியும் இஸ்லாமென்பான்

621 தோன்றும் மார்க்கம் விட்டவரும் துடர்ந்திட்டார் குபிர் நடத்தை
தோஷியும் சட்டம்பாரா துற்பழக்கம நரகமாமே

522 முஸ்லீமில் சட்டமுண்டோ முதியோரரே எனக்குச்சொல்லும்
இஸ்லாமை விட்டவரும் ஏகிட்டார் குபுர் நடத்தை

523 மாப்பிள்ளையும் பெண்ணுமாக மனுஷர்க்கொப்ப ஊஞ்சலாட்டி
எப்பதற்கு இஸ்லாம்வேஷம் எடுக்கலாமா பாவியரே

524 தாஙகள்போய்த் தாலாட்ட தனியோனும்மை படைக்கவில்லை
தேங்காய் பழம் வாஙகி நீயும் தேடுராய் குபுரதுவை

525 என்னத்தைச் சொல்லப்போரேன் எத்தனையின் கணக்குரைப்பேன்
சுன்னத் ஜமாத்தென்று றைக்க சொல்லுதோ இக்கொடுமை

526 கல்யாணம் முடிக்கும்போது கண்காக்ஷி கொட்டடிக்க
அலிமாமனூர் சட்டமதில் அறிந்தீரோ எனக்குறையும்

527 கொட்டடிக்க ஹராமாகும் குருமுஹம்மத் மார்க்கமதில்
கெட்டோரை விட்டு நீங்கி கிருபையாம் நிகாஹெழுதும்

528 இவ்வுலகம் நம்பி நீயும் இந்தமோஸம் செய்யலானாய்
அவ்வுலகம் போனபின்பு அனல் நரகம் விட்டிடுமோ

529 முன்னோனின் பயம் அச்சம் முன்னூரோடாயிரமா
பின்னாலே நடப்பவர்கள் பிரியம் போலாடுராரே

530 நீதமான வாதத்திற்கு நேயர்களே மருந்துமுண்டும்
அநீதப்பிடிவாதத்திற்கு அகமீதில் மருந்தொன்றில்லை

531 கேட்டிட பெரியோரில்லை கெடுதி விட்டகலும்படி
நாட்டம்போல் கெடுதியதை நஷ்ட்டமாவான் செய்யலாமா

532 சொல்லைப் பார்த்தால் சுல்தானுக்கும் செயலைப்பார்த்தால் ஷைத்தா [னுக்கும்
இல்லையப்பா சொர்க்கம்போக்கி எடுக்கவேண்டாம் குபுர் நடத்தை

533 ஹாவியா நகரத்தினை ஆலத்தில் பயப்படாதோர்
ஜாஹிலாய்த்திரிபவர்கள் சரியான கூட்டமாமே

534 கல்பது பிரணடவர்கள் கலாமதுவும் பொய்யென்பார்
மனமது மாறினோர்கள் மாற்றமாய் நடக்கலாவார்

535 இல்மது படிக்காதோர்க்கு ஏவல் விலக்கல் ஒன்றாச்சு
மனமது போனபோக்கில் மார்க்கத்தை பிரட்டலாச்சு

536 நபியை இழந்ததன்றி நபி ஷரகை களைந்திட்டாயே
ஷபீஉல்முது னபீன் ஷபாஅத்துக் கிடைக்குமோ சொல்

537 அடக்கமாய்ச் சொல்லிவிட்டேன் அநேகம் செய்தியுண்டும்
செடுக்காமல் மார்க்கமதை கேட்டுயெடும் தீனோர்களே

விருத்தம்.

இஷ்ட்டம்போல் மார்க்கமெடானிவ்வுலகில் பஞ்சாவென்ன
நஷ்ட்டவாளா நீ நானிலத்திலிருப்பீரோ சொல்
அஷ்ட்டயாய் தீனைவிட்டோன் ஆலத்திலிருக்கொண்ணாது
கஷ்ட்டமென மார்க்கம்தேடாய் கடைசொடுக்கம் என்னசெய்வாய்

பாட்டு

538 முஹற்றம் மீ வந்தவுடன் முறையென பஞ்சா வைக்கும்
மூதேவிக் கூட்டத்தோரை முஸ்லீமென உரைக்கலாமா
539 பத்துநோன்பு மாத்தயிலே பஞ்சாவுக்கு இரேக்கு ஒட்டி
கூத்துகள் ஆடிப்பாவி கூட்டத்தை கெடுக்கலானாய்
540 இன்ஷானைக் கெடுப்பதுவும் இபுலீஸென்றுரைப்பார்கள்
மனிதரைக் கெடுப்பதற்கு மருட்டுராயே பஞ்சாவாலே
541 மத்தாயுதித்த நபி முஹம்மதுதம் பேர்நாமம்
பித்தாழைத் தகரத்திற்கு பேசிட்டாய் வையகத்தில்
542 புருக்கான் நபி பேரென்று பித்தாழைக்குறைக்கலானாய்
சுருக்காகத் தௌபாச்செய்து தோஷம்போக பஞ்சாவிடு
543 பத்துநோம்பின் பஞ்சாவென பகைவரும் அஞ்சுராரே
செத்தபின்பு சீரளிவை செவியில்கேட்டும் பயமில்லையோ
544 மார்க்கத்தைக் கெடுத்தவனே மனுஷனும் பாவியாக
மூர்க்கத்தனம் விட்டுநீங்கி முடுகாதே பஞ்சாவைக்க
545 வயிற்றுப் பிழைப்புக்காக வள்ளல் நபி மார்க்கம்விட்டோன்
கயற்றையும் கையில் கட்டி காபிருட வேஷமென்ன
546 எடுத்தோரும் வைத்தோரும் ஏற்றவரும் குபிராகிட
அடுத்தோரைக் கெடுப்பதன்றி அஜாஜிலும் என்னமுறை
547 பத்துநோன்பு வரிகொடுக்கும் பாவத்தைக் கேட்டில்லையோ
செத்திறந்து போகுமுன்னே சீக்கிரத்தில் குபுரைப்போக்கும்
548 இறையோனுக்கு நோம்பிருந்து இறவுதனில் வணங்கிடிலும்
குறைவான பஞ்சாவாலே கோமானும் ஒப்பானுமே
549 அளியானைத்தொழுதிட்டாலும் அவ்வழியே சென்றிட்டாலும்
குழிபுகுமுன் தௌபாத்தேடி குதாயிடத்தே சுத்தமாவாய்
550 பானக்கம் கரைத்துக்கொண்டு பாத்திஹாவுக் கொட்டுடனே
ஞானமில்லா ஆண் பெண்கள் நரக வாதிக்காகுறாய்
551 பாடுபட்டு சம்பாதித்து பஞ்சாவுக்கு சிலவிட்டோரே
கேடுகெட்ட நரகத்தையும் கிரயத்துக்கு வாங்கலாமா
552 பஞ்சாவுக்கு முன்னாகி பாதிஹா ஓதியோன்
வஞ்சகனும் இமாமத்தாக வல்லோனும் பொருந்தமாட்டான்

553 வாடியே பஞ்சாத்தேடி வளமையாய்ப் பார்த்துவர
நாடியே மனையாளிடம் கூடிடவும் ஹராமாச்சு

554 பஞ்சாவிடம் நேர்ந்துமே பாவிகளும் பிள்ளைகேள்க
படைத்தோனும் கொடுப்பதன்றி பஞ்சாவும் கொடுக்குமோசொல்

555 பஞ்சாவுக்கு முன் நின்றேன் பாவியும் இஸ்லாமென்பான்
வஞ்சகரை விட்டகன்று வல்லோனுக்காய் நீக்கிவிடு

விருத்தம்.

இந்துவிலும் கேடுகெட்டோன் இவ்வுலகில் பஞ்சாவைக்க
ஐந்துபேர் அஹ்லுல்பைத்து அவர்களை வெருக்கவேண்டாம்
சொந்தமாம் சரஹுசட்டம் சோருதே பஞ்சாவாலே
இந்துபோல் ஈமானற்று இறப்பதில் லாபமென்ன

556 பஞ்சமா பாவிகட்கு படைத்தோனின் கோபமாமே
கொஞ்சமாய் வயதை நம்பி பஞ்சாவைக்கும் கூடடத்தோரே

557 ஹக்கனைக்கொண்டஞ்சாதவன் அநீதப்பஞ்சா விட்டானில்லை
மக்கநபி உம்மத்தைப்போல் மானிடரே வேஷமென்ன

558 வெக்கமில்லா மனிதர்களும் வேஷமிட்டீர் இஸ்லாமைப்போல்
ஹக்கான முஸ்லீமென்று ஆலத்தோர் அழைக்கொண்ணாது

559 கர்த்தனைக் கொண்டஞ்சாதவர் கலாமோதி லாபமுண்டோ
சுத்தமென்று பஞ்சாவைக்க சூமனைப்போல் மரித்திடுவான்

560 ஈமானை இளந்திட்டாயே இழிவான பஞ்சாவாலே
ஆமான மார்க்கம்விட அஜாஜீலை பின்பற்றினாய்

561 பஞ்சாவிட்டு தௌபாச்செய்யார் பாவிகளும் முஸ்லீமென்பார்
தஞ்சமென்று பஞ்சாத்தேட தாஹாநபி சட்டம்காட்டும்

562 ஒன்பது பத்துக்குமே யுண்பதை நீக்கி நீயும்
நம்பியே நோன்பிருந்து நாயன்பேரால் சதக்கா செய்யும்

563 முஸ்லீமுட சட்டமாக்கும் மூன்னோருட திட்டமாக்கும்
குஸ்யாகத்தொட்டவர்க்கு குதாயவனும் கிருபை செய்வான்

564 இதைவிட்டுப் பஞ்சாவைக்க இழிவான நரகமாகி
கதிகெட்ட காபிரைப்போல் காலகாலம் அதாபடைவாய்

565 ஒத்திடாமல் பஞ்சாவைக்கும் உலகத்திலிருந்ததாரு
பத்தாவுக்கும் பத்தினிக்கும் பலகுமே வந்ததாமே

566 ஒரு ஹைலு முடியுமுன்னே யோர்மையுடன் தௌபாச்செய்து
இருபேரும் கூடிவாழ இஸ்லாத்தின் சட்டமாமே

567 பொய்யென்று இஸ்லாமிய்யா பெண் ஆணுங்கூடிப் பெற்றால்
வையகத்தில் முஸ்லீம் என்க வருகுதோ வேதத்திடை

568 பேருமே ஷிர்க்காச்சு பெற்றபிள்ளை ஹராமாச்சு
யாருமே கொள்வினையும் அவர்களிடம் செய்யொண்ணாது

569 இனைவைத்தால் யீமான்போச்சு இஸ்லாமின் பேரும் போச்சு
அனைவோரும் தௌபாச்செய்து ஆலத்தில் ஷரகைத்தேடும்

விருத்தம்.

என்னத்தைச் சொல்லிடினும் எடுக்கானே ஷரகு சட்டம்
சுன்னத் ஜமாத் பேரதுவும் சுமந்தானே பாவியரும்
கண்ணுற்றுப் பார்த்ததுபோல் கல்பொத்து பஞ்சா நீக்கி
வின்னத்தை போக்கினோர்கள் வேதாம்பர் உம்மத்தாவார்

பாட்டு.

570 ஷரகெடுக்கா சண்டாளா சதிகேட்டின் பஞ்சாவென்ன
நரகத்துக்கு போவதற்கு நாட்டிலே தேடுராயே
571 மானிலத்தில் இஸ்லாமென்க மார்க்கச்சட்டம் விட்டிடாராம்
கோனிடத்தே ஆசையானோன் கொடுமை பஞ்சா பார்க்க போகான்
572 பற்லான தொழுகையெடான் பாவியென்ற பேரைவிடான்
உருளப்போரான் நரகத்திடை யுலகத்திடை பஞ்சா வைக்க
573 பஞ்சாவை நீக்காத பாவியைப்போலாகிடாமல்
தஞ்சமென்ற ஆதரவை தனியோனிடம் கெஞ்சிக்கேளும்
574 தௌபாவும் செய்தல்லவோ தக்கோனிடம் கேட்டிடவும்
ஹக்கி ரசூல் கிருபைகொண்டு அல்லாவும் பொருக்கவேணும்
575 பஞ்சாவுக்கு ஷிரத்தையாய் பார்தனிலே முன்னின்ற
பாவியவன் மௌத்தாக பாரிலில்லாம் கபுரில் ஆக்காய்
576 குடிக்கததான் கஞ்சியற்று குடியிருக்க வீடுமற்று
சந்தி சிரிக்கும்படி ஷரீஅத்தோர் எசிடுவார்
577 பொய்யென்று எண்ணிடாதே பொய் பஞ்சா வைத்தோனே
மெய்வாழ்வு வேணுமென்று மிலேச்சரும் நினைக்கலாமா
578 மெய்வாழ்வு சொர்க்கமாக்கும் மேன்மை நபி உம்மத்தோரே
பொய்வாழ்வு நரகமாக்கும் பொல்லாப்பஞ்சா வைத்தவர்க்காம்
579 நாயனை மறந்திட்டானே நபி ஷபாஅத் இழந்திட்டானே
நாலியாரை வெருத்ததன்றி நரகத்தை தேடுவதேன்
580 பாவியை விட்டென்னைக்காக்க படைத்தோனே உன் கிருபை
ஹாவியா நரகமதை அவனுக்காய் கொடுப்பாய் ஆமீன்
581 அஞ்சஞ்சு அல்லாவுக்கு ஆலநபி உம்மத்தாக
ஒஞ்சொஞ்சு உலகத்துக்கு உடயவனும் பொருத்தமாக
582 ஒருகாசு கொடுத்தோர்க்கு ஒரு நரகம் வாய்த்திடுமே
பெருக பணம் சிலவழித்தால் பெற்றிடுவான் நரக வாழ்வு
583 ஹுஷார் ஹுஷார் உலகத்தோரே விட்டிடாதே
ஆஜரான பஞ்சாவை அடக்கிவிடு கபுர்தனிலே
584 தாலத்திடை பஞ்சா நீக்க தனியோனே கிருபைசெய்து
ஆலநபி உம்மத்தோரை அனைவரையும் காக்க ஆமீன்
585 பாடித்துதிக்கும்பாவி படிப்பறியா அப்துல்காதிர்
கேடுகெட்ட பஞ்சாவை கிருபையாளா எடுக்கவிடாய்

வட்டி,

விருத்தம்.

அஹல்லல்லாஹுல் பைஅ வஹற்ற மற்றிபா
இல்லல்லா பயந்தவர்கள் இல்வுலகில் வட்டியெடார்
சல்லல்லா உம்மத்தாக சற்றேனும் வட்டிக்கீயாய்
வெல்லெல்லாம் நரகத்திடை வேதாம்பர் உம்மத்தோரே

பாட்டு

586 வேண்டாமே வட்டிமுதல் என்றமட்டும் தேடித்தின்னும்
ஆண்டவனின் ஆகம்பார்த்து ஆகாவட்டி நீக்கிடுவாய்
587 நானிலத்தில் வட்டிவாங்க நாயனைப்பயந்தாயில்லை
தானுமே நரகம்பேரய் தர்மமென்றால் விட்டிடுமோ
588 வீனனும் நரகம்போக வினைகளை சகிக்கமாட்டான்
காணும்படி தேள்பாம்பும் கண்காதைப் பிடுங்கிடுமே
589 நரகம் சுட்டால் கருகிடுவாய் அரவங்கொட்ட யுருகிடுவாய்
உருத்தென்று உலகத்திடை ஒழுங்கில்லா வட்டிக்கீவாய்
590 ஷரகைவிட்டு வட்டி கொடுத்தோன் சாரப்போரான் நரகமதில்
பிரியமான மனைவி மக்கள் பின்னுதவியாகமாட்டார்
591 கருத்தையும் கவனியாமல் கடத்திட்டீர் வயசளவும்
உருத்தான மனைவிமக்கள் உனக்கவர்க்கும் சொந்தமில்லை
592 வீணனதுன்யா தேடி வெருங்கையாய் கபுர் புகுத
காணும்படி மார்க்கம்விட்டு காலமெல்லாம் வட்டிக்கீய்ந்தாய்
593 தட்டுத்தட்டாய் நரகவீடு தயராய் இருக்குதாமே
கெட்டேரே வட்டி நீக்கி கிருபையோனை கெஞ்சிக்கேளும்
594 வட்டிப்பாவம் போகவென்றால் வையகத்தோர் சொல்லக்கேளும்
செட்டு செய்யாய் வட்டிக்கீய்ந்து சேர்த்தபணம் கணக்குபார்த்து
595 வாங்கினோரின் ஹக்கைச்சேர்த்து வல்லோனிடம் தௌபா செய்து
ஏங்கிடாமல் வட்டி நீக்க ஏகனும் பொருப்பானுமே
596 எட்டடியுடலை நம்பி தட்டுத்தட்டாய் கட்டலானுய்
வட்டி வாங்கிக்கி நரகத்திடை வகைவகையாய் அதாபாமே
597 பொட்டை இபுலீசுடைய பொய்புரமாம் துன்யாத்தேடி
சட்டம்விட்டு வட்டிவாங்கி சாரப்போரான் நரகத்திடை
598 பொய் சொல்ல இருளாச்சு புரம்பேச அமலும்போச்சு
பைபெருக்க வட்டிக்கீய்ந்தோன் பார்க்கப்போரான் நரகத் அதாப்
599 பையபைய பணந்திரட்டி வையகத்தைத்தேடியென்ன
கையூமிடம் போவோமென்று கருத்தில் நினைக்கானில்லை
600 ஐயையோ இவ்வுலகில் அழியாவரம் பெற்றோருண்டோ
செய்யும் தவம் வட்டியாலே சேராது உடயோனிடம்
601 யூகமான இஸ்லாம்களே ஆகமான ஹதீதைப்பாரும்
மோகமான எழுபது ஜினு முடிகிடிலும் வட்டிக்கொவ்வாய்

விருத்தம்.

மானின்பினை நபி மார்க்கத்திடை வட்டியுண்டோ
தீனின் தாலாக்கிட்ட வேஷதாரிக்கி மார்க்கமுண்டோ
மேனியும் கொழுத்திட மௌத்திலேயோ உந்தனுக்கு
வாணிபம் வட்டிதொழில் வைவினேடை பயந்தானில்லை

பாட்டு.

602 வைவினேடைக்கஞ்சுதே அயலான நரகமெல்லாம்
பயல்சிரிக்கி வட்டிக்கீய்ந்து பார்க்கப்போரார் வைவினேடை

603 வட்டிவாங்கியே தேடுதாமே வைவினேடை பாம்பு தேள்கள்
தட்டுத்தட்டாய் அதாகவே தயாராயிருக்குதாமே

604 செட்டுசெய்யான் வட்டிக்கீய்ந்து சேர்த்த பணம் ஹராமாக்கும்
வட்டிவாங்கியே சுட்கரிக்க வகைவகையாய் அதாபாமே

605 கெட்டோரைப்போல் வட்டிவாங்கி நரக கீழ்தட்டில் போய்புகுந்து
கொட்டுந்தேள் விஷத்தாலே கூஹூவெனக் கதரலாவான்

606 பாவந்தேட பலிசைக்கீவார் பயகாம்பரும்மத் சிலர்
கோபமான யஹ்ஷரிலே கொடுப்பாரே மலக்கு பூசை

607 வட்டிவாங்கி சுட்கரிக்க வல்லோனேவலெதிர் பார்ப்பார்
மட்டிகளுக்கு சூடிடுவார் மலக்குகள் வட்பணத்தால்

608 வட்டிவாங்கிக்கு வளர்க்கிறுனும் வகைவகையாய் பாம்புதேளும்
பட்டுபோவான் பொருக்கொண்ணுமல் பதரலாவான் நரகத்திடை

609 எப்போதான் வாரானென்ன எதிர்பார்த்திருக்கும் பாம்பு
செப்பிடவும் கொத்பிடுங்க சிறையாயிருக்குதாமே

610 நூற்றுக்கு ஒன்றுரும் நுனுக்கமான துன்யாவாழ்வு
ஊத்துத்தண்ணீர் சோற்றுக்காக உலகத்திடை வட்டிக்கீய்ந்தாய்

611 உயிர்பெற்ற வஸ்துக்கெல்லாம் உடயோன் ரிஜக்கழிப்பதாக
கைருன குருஆனிலே காட்டினுன் தாப்பத்திலே

612 பசித்தோரின் பொழுதும்போம் பாலிலன்னம் புசித்தோர்க்கும்
குஷ்யாக வட்டிவிடா கொடுமைக்கு நானென்ன சொல்வேன்

613 மௌத்தரியா மறதியாளா மானிலத்தில் வட்டியென்ன
கவுத்துவம்செய் துன்யாவாசை கடைசியில் மோசமாவாய்

614 துன்யாத்தேடி கொடுபோகாய் துன்பம்தேட விட்டுப்போகாய்
அநியாயமாய் வட்டிவாங்கி அல்லாயிடம் என்ன சொல்வாய்

615 வேதத்தை ஓதிடுவான் விதவிதமாய் ஹதீது சொல்வான்
நீதமானு ஷரகை விட்டு நிர்மூடன் வட்டிக்கீவான்

616 வட்டிபாவம் மிகைத்துப்போச்சு வல்லோனுக்குகோபமாச்சு
மட்டிகளின் செயலிணுலே மண்டலத்தோர் சிரிக்கலாச்சு

617 இரும்புத்துண்டை விழுங்கியோனே சுக்கசாயம் பலன்தருமோ
கரும்புருசி யென்றல்லவோ வேரோடே பிடுங்கலாமா

## விருத்தம்.

மானின்பிணைநபி உம்மத்தாக வட்டிக்கியா
தேனின்பம் வட்டிபாவம் தீதென விட்டகலான்
தூணின்போலுருப்ப துவும் தொந்தியும் மலைய துவாம்
வீணிலே வட்டிதின்ற வினைபாரும் மிதித்துபோவார்

## பாட்டு.

618 வட்டிகொடுத்தோன் வயற்பெருக்கும் வம்பனுட கொடுமையாக்கும்
கெட்டித்தனமாய் பணந்தேட கேடனுக்கேன் முஸ்லீம் வேஷம்

619 பாரமலைபோல் பெருப்பம் பாவியின் வயர் அதுவும்
கோரமான சிராத்தின்மீது கொடும்பாவி கிடத்தலாவான்

620 பரமனின் உத்தாவாம் பாலம் ஏகி சொர்கம்போக
உரமாக மிதித்தவரை யொவ்வொருவரிறங்கிப்போவார்

621 துரும்பையும் தூணைக்கும் துய்யோனை வெருத்தவனும்
விரும்பியே வட்டிகொடுக்கும் வினையதுவும் நரகமாமே

622 அரசனும் அன்று கேழ்பான் ஹக்கனும் பின்னே கேள்க
வரிசைநபி வாக்குக்காக வல்லவனும் பொருக்கிறானும்

623 சொல்லைபார்த்தால் சுல்தான் வீடு செயலைபார்த்தால் ஷைத்தான்வீடு
இல்லையப்பா சொர்க வீடு இஸ்லாமானோன் வட்டிக்கிய

624 சட்டியுடைந்திட்டாலும் சமத்தாக பொருந்திடலாம்
வட்டிபாவம் பொருக்கவென்றால் வல்லோனுக்கு பொருத்தமில்லை

625 பிந்திய ஜமானுக்கு பெரியோனின் பயமொன்றில்லை
அந்திபகல் அருபதுக்கு ஆதாவட்டி கணக்கு பார்ப்பாய்

626 ஐந்துநேரம் தொழுதிட்டாலும் ஐயாருநோன்பு வைத்திட்டாலும்
வஞ்சகனும் வட்டிநீக்கான் வல்லோனும் பொருந்தானுமே

627 தாலத்திடை வட்டிநீக்கி தனியோனை கெஞ்சி கெஞ்சி
ஆலநபி ஷரஹதுபோல் அஞ்சுநேரம் விடவொன்னாது

628 வட்டிபாவம் நீக்காதோன் வயசொடுக்கம் என்னசெய்வாய்
செட்டிகளின் செயலைவிட்டு சீக்கிரத்தில் தௌபாச்செய்யும்

629 இதுதான் முறையாக்கும் இறைபவன் பொருப்பதற்கு
கெதியென்ற வட்டிவிடா கேடனுக்கு என்ன சொல்வேன்

630 வையகத்தை தேடுவோரே வயதெல்லாம் இருந்ததாரு
தையூமின் பயமற்றநீ கருதலானுய் வட்டிபவிலை

631 ஆலத்திலே வட்டிநீக்க ஆகமதில் ஆராய்ந்துபார்
கோலமான வட்டிநீக்கி குறிப்பிட்ட தொழுகையெடும்

632 மால்தேட வட்டிவேண்டாம் மௌத்துத்தேட சீக்குவேண்டாம்
நாள்தேட நகசுவேண்டாம் நாயன் இருக்கும்போது

## விருத்தம்

### வட்டி.

தூண்டிட்டு தூன்யாத்தேட துய்யவன் பொருத்தமுண்டோ
ஆண்டவனிருக்கும்போது ஆகாவட்டி கவ்வுவதேன்
வேண்டாமே இஸ்லாம்களே வேதத்தில் மாற்றம்செய்யாய்
மாண்டாளரிந்திடுவாய் மாய்கைவட்டி பாவமதை

### பாட்டு.

633 மெய்யான முஸ்லீம்களே மேலோனே பயந்தீராஞல்
பொய்யான வட்டிபாவம் பூலோகத்தில் நீக்கிவிடும்

634 இந்தமோஸம் விட்டுநீங்கா இஸ்லாமான ஆண் பெண்களே
சொந்தமான ஷரஹு சட்டம் சோருதே வட்டியாலே

635 வட்டியும் ஹராமாச்சு வம்பாகத்தேடியோடி
மட்டியே நரகவீடு மதியாமல் அலேவதென்ன

636 குருவான முஹம்மதுட குணத்தை எடாதோரே
பருலென்று வட்டி பலிலை பார்தனிலே எடுக்கலாஞர்

637 பஞவான வட்டிபாவம் பார்தனிலே மூட்டைகட்டாய்
கஞஅத்து நடக்காதோசொல் காலமும் போகாதோபார்

638 இகழான வட்டிக்கிய இந்துவுக்கு இகழ்சியாச்சு
மகிழத்தக்க மார்க்கச்சட்டம் மாயமாய் பரக்கலாச்சு

639 வேஷம்மட்டும் வேருரும் வேண்டாசெயலொன்ருரும்
நேஸமில்லா இஸ்லாமிய்யா நெடுநாளைக்கிருப்பீரோ சொல்

640 மார்க்கத்தை படித்தோரே மனம்போலே வட்டிக்கியாய்
மூர்க்கங்கள் விட்டல்லவோ முதலோனின் ஏவலெடும்

641 எந்தமட்டும் இஸ்லாமிய்யா ஏற்காவட்டி வாங்கலாவாய்
சொந்தமாய் வட்டிபாவம் வந்தேமுடியும் கியாமமட்டும்

642 மக்களுக்கு வட்டிமுதல் மானிலத்தில் தேடிவைய்யாய்
ஹக்கனிருக்கும்போது அவர்கள் ரிஜக் எங்கேபோகும்

643 கல்லதற்குள் தேரைக்கும் கர்ப்பத்தில் சிசுவதுக்கும்
இல்லல்லா ரிஜக்களிக்க ஏகனும்மை மறப்பாஞே சொல்

644 வட்டியை தேடிடுவார் வல்லோனேவல் சட்டமெடார்
விட்டுமே தொழுகையெடா விபரீதம யானதியேன்

645 வட்டியைப்போலொத்த பாவம் வையகத்தில் இல்லையாமே
தட்டிமறக்காமலே தாலத்தாசை வட்டிக்கீய்வாய்

646 பணப்பிசாசு பிடித்தோர்கள் பார்தனிலே வட்டிவிடார்
மனம்போலே வட்டிக்கிய மௌத்தை மறக்கலாச்சே

647 தேன்தின்ற இன்பம்போல் தேடுகிருய் வட்டிபாவம்
மீன்நொந்து நாருமாப்போல் மிலேச்சரும் நரகிலாவார்

648 என்னத்தைச் சொல்லப்போரேன் எதையெடுத்துரைக்கப்போரேன்
மன்னவனுக்கஞ்சி நீயும் மார்க்கமென்ற ஷரகையெடும்

649 வட்டிபாவம் இயற்றலான வல்லோனின் அப்துல்காதிர்
சுட்டியே வட்டிநீக்கி சுருதிபோல் ஷரகை எடும்

விருத்தம்.

கல்லெல்லாம் மாணிக்கமாயிடினும் கருங்கல்லுக்கென்ன செய்வார்
எல்லாரும் மானிடராயிடில் எரிநாகு என்ன செய்யும்
சொல்லெல்லாம் மெய்யாயிடில் சொல்சோரம் செய்வதாரு
இல்லல்லா பயந்தவர்கள் இம்மூன்றை அகற்றிட போதுமாமே

பாட்டு

ஞானம்.

650 லாஇலாஹ இல்லல்லா ராப்பகலாய் சொல்லிவர
ஓய்வில்லாமல் சொன்னபேர்க்கு உடயோனின் கிருபையாமே

651 பாய்இல்லா கப்பலது பறந்தோடி போவதுபோல்
தாயிம்காயிமாயிருக்கும் தவருகள் ஓடிடுமே

652 கண்டதை விண்டிடாதே கல்லார்க்கு சொல்லிடாதே
மண்டைமடியுமட்டும் மருதரமும் காணமாட்டாய்

653 சொல்லிடாமல் சொல்லினுரே சூதுமோசம் கலந்திடாதே
இல்லல்லா கிருபையது இவ்வுலகில் கிட்டிடுமோ

654 நல்லாயிருக்கவென்றால் நாயனைத் தொழுதிடுங்கள்
பொல்லாப்பேர் யேக்கவென்றால் பூலோகத்தை கவ்விடுங்கள்

655 அநியாயத்தை விட்டுநீங்கி ஐந்தோகது நோன்பதுவும்
கனியான மார்க்கத்திடை கடுகளவும் விட்டிடாதே

656 தன்னுயிரைப்போலல்லவோ மண்ணுயிரை பேணுதோரே
என்ன அமல்செய்திடினும் ஏகனும் பொருந்தானுமே

657 யூகமான இஸ்லாம்களே ஒழுங்குடனே தொழுகையெடும்
தாஹாநபி உம்மத்தாக தவம்செய்ய சடைந்திடாதே

658 பஞ்சமா பாவம்போக்க அஞ்சியே தொழுகவேண்டும்
வஞ்சகத்தை நீக்கியோர்க்கு கிஞ்சிற்றும் பாவம்சேரா

659 இஸ்லாமென்ற சொல்லைப்பாரும் எழுத்தைந்து கூட்டிச்சேரும்
என்ன அமல் செய்வதென்று எண்ணியே பார்த்தீரில்லை

660 கலிமா தொழுகை நோன்பு கர்த்தோன் ஜகாத்து ஹஜ்ஜூம்
உருத்தான மார்க்கமதை வெருத்தாலும் இஸ்லாமாகாய்

661 கணக்குடன் தொழுகைதொழா காசுபணம் தேடி ஓடி
இணக்கமில்லா மாபாவியை ஏழா நரகம் விட்டிடுமோ

662 மால்தேடி மார்க்கம்விட்டோர் மானிலத்தில் இஸ்லாமென்பார்
கால்தேடி கருத்தரியா கவலுவதேன் மார்க்கச்சட்டம்

663 மூச்சதையுணராவிடில் மூன்ஞோனை அரியமாட்டாய்
பேச்சதை நீக்காவிடில் பேயனை வெல்லமாட்டாய்
664 காக்ஷியைக்காணுவிடில் கல்புமே தெளிவதில்லை
வாச்சிடுமோ இம்மூன்றும் வையகத்தை வெருக்காதோரே
665 மஹத்தான பெரியோர்கள் மலம்பாம்புபோல் கிடப்பார்
அகத்தியம் அவர்களிடம் அறிவைத்தான் கேட்டுப்படி
666 கண்டவர்கள் விண்டுரைக்க கனகநாள் செல்லுமய்யா
அண்டமெல்லாம் காணும்படி அறிவைப்புகட்டிடுவார்
667 தீன்தீன் கலிமாவை தெளிவுடன் காட்டித்தர
எற்றிடும் எழுவானம் எகனின் கிருபையாமே
668 தோற்றிடும் ககனமேழும் துய்யவன் கிருபையாமே
பார்த்திடுவாய் பூமியேழும் படைத்தவன் உதவியாமே
669 சாஸ்திரம் வேதங்கல்வி சகலமும் காட்டிடுமே
பார்த்துமே உரைத்திடாதே படைத்தோனுக்காய் ஒழித்துவிடு
670 கண்டதை விண்டிடாதே கர்த்தோனின் கோபமாமே
மண்டைமடியுமட்டும் மருத்துநீ கண்டிடாயே
671 மக்ருஹைச்செய்யமாட்டார்·முஸ்தஹப்பை விடமாட்டார்
பிக்ராக அவன் நாட்டம் பெரியோனை நினைத்திடுவார்
672 தூலத்தை யொடுக்கிடுவார் துன்யாப்பேச்சை நீக்கிடுவார்
காலக்ஷேமம் கருதமாட்டார் கர்த்தோனை நம்பிடுவார்
673 சுன்னத் ஜமாத் பழிக்கமாட்டார் துய்யோனேவல் மறக்கமாட்டார்
எண்ணத்திலே யாதாக எகிடுவார் கலிமாவிலே

## வேஷதாரி.

674 மனுஷர் சிலபேருமேதான் மஉரிபா என்றலைவார்
இன்ஸானென்று பேரெடுத்து இருமூன்றும் நேரம் தொழார்
675 மன்னவனைக்கான்பதற்கு மற்றதெல்லாம் மறக்கவேனும்
தன்னையறிந்தல்லவோ தலைவனைக்காணவேண்டும்
676 மனதாலே தொழுவோமென்று மனுஷர்க்கொப்ப சொல்லிடுவார்
மார்ககத்தைக் கெடுக்கவந்த மாபாவி தீபாவியாம்
677 ருகூஉ சஜ்தா இல்லாவிடில் ஒருக்காலும் தொழுகையாகா
ஏர்கஊ வஸ்ஜூது மஅற்ருகி ஈன்
678 சோற்றைதான் முன்னே வைத்து சுருசுருப்பாய் பார்த்தவுடன்
பற்றற்று போய்விடுமோ பாவியரே சொல்லும் சொல்லும்
679 புடவை சட்டை வாங்கியல்லோ பிரியமாய் பார்த்தவுடன்
இடையைச்சுற்றி கட்டிடுமோ இந்தமோசம் கண்டதில்லை
680 மனையாளை முன்னிருத்தி மனதாலே பார்த்தவுடன்
இனத்தாருட குறைகள்போமோ இவளுக்கு கெர்ப்பமாமோ

681 இனத்தையும் கெடுக்கவந்த சதிகாரன் நீயல்லவோ
பணத்தாசை பிடித்தல்லவோ பகருகிறாய் வழிசருகி

682 துன்யாத்தேட ஷரீஅத்தென்பாய் தொழுகவென்றால் மஉரிபாவோ
எழிதில் விடவுமாட்டான் எகனிடம் போனபின்பு

683 உம்மெனும் கலியுமாவை தம்மதில் தொடுத்துவந்தால்
உண்மையைகலந்துஉற வாடிவோய் நீயுமேதான்

684 கண்டிலேயோ மழைநாளில் மண்டலத்தில் பள்ளுபறை
நண்டுநத்தை பிடிப்பதுபோல் ஞானத்தை பிடிக்கப்போராய்

685 நாவுருசியற்றவர்கள் நாயனை தொழும்போது
நாவுருசி உற்றவர்கள் நாயனை தொழப்படாதோ

686 வேண்டாமோ ஷரஹுசட்டும் வேஷமிட்டாய் மஸ்தானென்று
தோன்றுமொழி கண்டபின்பு தொழுகை நோன்பு விடவொண்ணாது

687 தெண்டித்துக் கண்டுபிடிக்க திறமான ஞானமாகும்
அண்டத்திலறியாதோன் யாருக்கும் உரைத்திடாதே

688 அறிவையறிந்தவர்கள் ஆயிரத்திலொன்றாகும்
கருவையறிந்தவர்கள் கலிகாலத்தில் காண்பதறிது

689 குருவையறிந்தவர்கள் கோடியிலே ஒன்றாகும்
பொருளையறிந்தவர்க்கு பூலோகத்திலாசையென்ன

690 ஞானத்தைக் கேட்டிடாதே ஆனத்தொழுகை விட்டிடாதே
ஈனருடைய சொல்கேட்டு இஸ்லாம்பேர் மாரிடாதே

691 பானமட்டும் பறந்திட்டாலும் ஆனமட்டும் சுற்றிட்டாலும்
தானம்விட்டு ஓடிட்டாலும் தாலத்திடை தொழுகைவிடாய்

692 கூடுவிட்டு கூடிட்டாலும் குதாயவனை மறந்திடாதே
குல்லும் உரைத்திட்டாலும் அல்லும் பகலும் தொழுகைவிடாய்

693 மோசமதை விட்டுமென்னை முன்னவா காற்கவேண்டும்
வேசர்களை பின்பற்றாமல் வேந்தனே யருள்புரிவாய்

694 இந்தப் பாட்டைப் பாடிட்ட சொந்தமான அப்துல்காதிர்
வந்த முஸீபத் நீங்கிட வல்லவா கிருபை செய்வாய்

விருத்தம்.

அல்ஹம்துலில்லாஹி அடங்களில் புகழானவனே
சொல்லிலடங்காத சூருபமும் நீயாகி
இல்லையென்றறியாதோர்க்கு மெட்டாக்கனிபோலாய்.
அல்லாவே உன்னிலென்னை ஆதரித்தருள்புரிவாய்

பாட்டு.

தாலாட்டு.

1 ஆராரோ ஆராரோ ஆருமஞ்சுக்கப்பாலே
ஆராய்ந்ததின்பொருளை அறிந்துணர்ந்து நித்திரைசெய்

2 முத்திகலிமாவை மௌன தியானம் செய்து
நெத்தியின் மத்தியினில் நிலைநிறுத்தி நித்திரை செய்

3 உள்ளபடிநடக்க உள்ளும்புறம் ஒன்றாக
உள்ளமையைக் கண்டறிய உற்றுணர்ந்து நித்திரைசெய்

4 வேற்றுமை முகத்துதியை வேறோடறப்பிடுங்கி
ஏற்றிரக்கமென்றாலும் ஏற்றி ஏற்றி நித்திரைசெய்

5 மக்கா முஹம்மதுவை மனதில் குறிப்பெடுத்து
முக்காலமும்முணர்ந்து முத்திபெற நித்திரைசெய்

6 கண்ணே கனிபழமே கண்ணிறைந்த கற்பகமே
பெண்ணே என் பொக்கிஷமே பொன்மகளே நித்திரைசெய்

7 முத்துமுகப்புக்குள்ளே முக்கோண சக்கரத்துள்
குத்துவிளக்கேற்றிநீ குறிப்பாக நித்திரைசெய்

8 பாராத பாக்கியமே பாலகரே கண்மணியே
தீராத்திரவியமே தேங்கனியே நித்திரைசெய்

9 ஆராதாரம்விட்டு அப்புறமாம் தற்பரத்தில்
பாராத விந்தமதை பணிந்துமகிழ் நித்திரைசெய்

10 நாயன் அமானிதத்தை நாடி ஷூஹூதுசெய்து
மாயனிப்லீஸவனும் மருட்டாமல் நித்திரைசெய்

11 கற்பக்குவளரையில் கண் காது வாய்மூக்கு
உற்பவித்த நாயகனை உற்றுணர்ந்து நித்திரைசெய்

12 முத்தாயுதித்தவள்ளல் முச்சுடர் முஹம்மதிய்யா
குத்துநகத்துக்குள் குறித்தமுத்தே நித்திரைசெய்

13 அஞ்செழுத்து பஞ்சவர்னம் அஞ்செழுத்து அல்ஹம்து
அஞ்செழுத்தில் பிஞ்செழுத்தை அறிந்துணர்ந்து நித்திரைசெய்

14 நபுசேநீ திக்ரேழை நடத்தி பழக்கம்செய்து
தப சின் நூறானியத்து தாபரத்தில் நித்திரைசெய்

15 ஊராரறியாமல் உரைமுறையார் பாராமல்
ஆரம்பத்தொட்டிலிலே ஆடிப்பாடி நித்திரைசெய்

16 சாத்தில் தொடுஹூவை சருகாமல் முப்பிறிவாய்
பாத்தில் கருத்தைவைத்து பாங்காக நித்திரைசெய்

17 தீனையுகந்திடுவாய் தீதாரைக் கண்டிடுவாய்
தீனைவெறுத்திடுவாய் தீபகமே நித்திரைசெய்

18 பஞ்சவர்ணத்தொட்டிலிலே மாணிக்க கட்டிலிலே
அஞ்செழுத்து மெத்தையிலே அருமை மகள் நித்திரைசெய்

19 கலிமா உயிரெழுத்து காயில்லா நற்கனியை
அலிமாமனாருறைபோல் அதையறிந்து நித்திரைசெய்

20 நித்திரை மௌத்தாஹூம் நினைவு ஹயாத்தாஹூம்
பத்திரமாய் என் மகனே புத்தியுடன் நித்திரைசெய்

21 யாஹூவெனும்திக்ரை யாதில் நிலைநிருத்தி
பாஹூத்து வாசலிலே வரிசைமகள் நித்திரைசெய்

22 அபூபக்கருமருதுமான் அலியார் பொர்பாதமலர்
கஃபுசில் நிலைநிருத்தி கண்ணில்வைத்து நித்திரைசெய்

23 காத்தூனல் ஜன்னத்தெனும் பாத்திமா நாச்சியர்தம்
கோத்திரம் ஹஸன்ஹுஸைன் குணமாக நித்திரைசெய்

24 காதிர்முஹிய்யிதீனெ காரண கண்மணியை
ஓதி மனக்கண்திறந்து ஓர்மையுடன் நித்திரைசெய்

25 செய்கெங்கள் உஸ்தாதுனு சேகுஅலி நாயகத்தை
கைபொருளாகவெண்ணி கண்மணியே நித்திரைசெய்

சலவாத்து.

அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலய்க யாரஸூலல்லா
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலய்க யாஹபீபுல்லா
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலய்க யாரஹ்மதுல்லில் ஆலமீன்

பாங்கின் கலிமாக்கள் 8.

1. "அல்லாஹு அக்பர்" (அல்லாஹ் மகா பெரியவன்.) 4 தரம். பதில் அதே.

2. "அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ்" (வணக்கத்துக்கு தகுதியான நாயன் அல்லாவைத்தவிர வேறுயாருமில்லை என்று உருதியாய்ச் சொல்லுகிறேன்) 2 தரம். பதில் அதே.

3. "அஷ்ஹது அன்னமுஹம்மதர் றசூலுல்லாஹ்" (முஹம்மது நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவனுடைய திருத்தூதராயிருக்கிறார்கள். என்று உறுதியாய்ச் சொல்லுகிறேன்.) 2 தரம். பதில் அதே.

4. "ஹைய அலஸ்ஸலாத்" (வந்து தொழுங்கள்) 2 தரம். பதில். "லாஹௌல வலா குவ்வத்த இல்லாபில்லாஹில் அலிய்யுல் அலீம்". (பாவத்தை விட்டும் திரும்பவும், இபாதத்தின்பேரில் பெலனும், வலுப்பமாகிய உயர்த்தியாகிய அல்லாஹ்வின் உதவியன்றில்லை) என்று சொல்லவும்.

5. "ஹைய அலல் பலாஹ்" (வந்து ஜயம்பெருங்கள்.) 2 தரம் பதில். "மாஷா அல்லாஹு கான வமாலம் யஷஃ லம்யகுன்." (அல்லா நாடியது உண்டாகும். அவன் நாடாதது உண்டாகாது) என்று சொல்லவும்.

6. [பஜரில் மட்டில்:—"அஸ்ஸலாத்து கைரும் மினன்னவ்ம்" (தூக்கத்தைவிட தொழுகை மேலானது.) 2 தரம். பதில் "ஸதக்த வபறர்த வபில் ஹக்கி நதக்த" (மெய் சொன்னாய், நன்றி செய்தாய், உண்மையை மொழிந்தாய்) என்று சொல்லவும்.]

[இகாமத்தில்மட்டும்:—"கத்காமத்திஸ்ஸலாத்" (தொழுகை ஆரம்பிக்கப்பட்டது.) 2 தரம். பதில் "அதாமஹல்லாஹு வஅதாமஹா மதாம திஸ்ஸமாவாது வல்அர்லு" (வானம் பூமி தரிப்பட்டிருக்கும் காலமெல்லாம் அல்லாஹ் இந்தத் தொழுகையை நிலைததும் நேமமாக்கியும் வைப்பானாக) என்று சொல்லவும்.]

7. "அல்லாஹு அக்பர்" 2 தரம். பதில் அதே.

8. "லாயிலாஹ இல்லல்லாஹ்" (வணக்கத்துக்குத் தகுமான நாயன் அல்லாவைத் தவிர வேறு யாருமில்லை) 1 தரம் பதில் அதே சொல்லவும். சலவாத்து ஓதி, பிறகு பாங்கின் துஆ ஓதவும்.

## பாங்கின் துஆ.

"அல்லாஹும்ம ரப்பஹாதிஹித்தஉவ தித்தாம்மதி வஸ்ஸலாதில் காயிம ஆதி முஹம்மதினில் வஸீலத வல்பலீல வத்தரஜ தர்றபீஅத வப்அதுஹு மகாமன் மஹ்மூதா நில்லதீ வஅத்தஹு வர்ஜுக்னு ஷபா அதஹு யவ்மல் கியாமதி இன்னக லாதுக்லிபுல் மீஆத்"

சிறப்பமாகிய இந்த துஆவிற்கு பாத்தியமுடைய நாயனே! தரிபாடாகிய கருணையுடையோனே! முஹம்மத்நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுக்கு வஸீலாவையும் (சிபார்சையும்) சுவனத்தில் மேலான தானத்தையும், மேலான பதவியையும் தந்தருள்வாயாக. இன்னும் அவர்களுக்கு நீ வார்த்தைப்பாடு செய்த "மகாமன் மஹ்மூதா" என்னும் தானத்தில் அவர்களை நிறுத்தாட்டுவாயாக. இன்னும் மறுமையில் அவர்களுடைய மண்டாடு தலை எங்களுக்குத் தந்தருள்வாயாக. உண்மையாக நீ வார்த்தைப்பாட்டிற்கு மாறுசெய்கிறவனல்ல.

## பாத்திஹா.

இலாஹலறத்து ரூஹு நபியினு முஹம்மதின் மூஸ்தபா அஹம்மதின் மூஜ்தபா ரசூல் சல்லல்லாஹு அலைகிவசல்லம் வஆலிஹி வஅவ்லாதிஹி வதுர்ரியாத்திஹி வஅஹ்லிபைத்திஹி ரிலுவானுல்லாஹித ஆலா அலைஹிம் அஜ்மயீன் அல்பாத்திஹா

அல்ஹம்து 1 விடுத்தம். குல்ஹுவல்லாஹு 3 விடுத்தம். குல்அஊதுபி ரப்பில்பலகு 1 விடுத்தம். குல்அஊது பிரப்பின்னுசி 1 விடுத்தம் ஓதி எந்த துஆவும் ஓதவும்.

## பசியாரியபின் ஓதுகிற துஆ.

அல்லாஹும்ம சல்லி அலா சைய்யிதினு முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் வபாரிக்கு அல்லாஹும்மஹ்பிர் ளிசாஹிபி ஹாதத்தாஆம் வதமமிய நிய்யத்தறு ஓசகப்பல் வியாபதஹு ஒவ்தபிமர்லாஹு ஓாஹம் மௌத்தாஹு மஅல் ஆகிலீன் வயின்தஉத்தூ கிஉமதல்லாஹி லாதுஹு சூஹா இன்னல்லாஹா லகபூருற்றஹீம வசல்லல்லாஹுதஆலா வசல்லம ஆலா கைரி கல்கிஹி சைய்யிதினு முஹம்மதின் வஆலிஹி வசஹ்பிஹி அஜ்மயீன் வல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.

## கபுராளிகளுக்கு.

அல்லாஹும்ம அவ்வில்தவாப மாகறஃனுஹு மின்கலாமிக்கல் அஜீஜி ஹாதிஹி ஹதியத்தன் வாவிலத்தன் வறஹ்மத்தன் ஷாமிலா வபறக்கத்தன் மக்பூலா மின்னு இலாரூஹிஹி வைஹ்பிஹி வசல்லம தும்ம இலா அருவாஹி அல்லாஹு மஹ்பிறல ஹும் வறுஹம்ஹும் வஹுஷருஹும் வபிப்பானு பீஜும்ற தில்ஸாலிஹீன் வசல்லி அலன்நபியீ முஹம்மதின் வஆலிஹிவஸஹ்பிஹி அஜ்மஈன் சுபுஹான ரப்பிக ரப்பில் இஜ்ஜத்தி அம்மாயசிபூன வசலாமுன் அலல்முர்சலீன வல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.

இதில் தவறுகள் இருந்தால் அதை திருத்திவாசித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.